# ஞானசம்பந்தம்

மலர் 14 ] ஜயயாண்டு மாசித்திங்கள் 10—3—55 [ இதழ் 4



பிள்ளையார் ஆயிரமுகத்தால் கண்ட திருவருள்வெள்ளம்

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்

# உட்பொருள்



| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கல்வி நிலையங்களில் சமய போதம் | ... | i-iv |
| 2. | அம்மையப்பர் | ... | 1 |
| 3. | அங்கமாலை | ... | 5 |
| 4. | பெரியபுராண விரிவுரை | ... | 9 |
| 5. | பூலோக விமர்சனம் | ... | 15 |
| 6. | திருசிய காவியப் பிரிவுகள் | ... | 19 |
| 7. | அரிது எது? (உ) | ... | 22 |
| 8. | பெரியபுராணமும் பொதுவுடைமையும் | ... | 27 |
| 9. | தமிழர் திருமண முறைகள் | ... | 32 |
| 10. | ஜீவ ரசம் | ... | 38 |
| 11. | தமிழ் மருத்துவ நூல்களும் சைவ சமயமும் | ... | 44 |
| 12. | நல்வினை செய்தவள் | ... | 49 |
| 13. | அறுபத்துமூவர் வரலாறு | ... | 52 |
| 14. | சிறுவர்க்கான பெரியபுராணம் | ... | 56 |
| 15. | தமிழ்ச் செய்யுட்களில் எழுத்திலக்கணம் | ... | 58 |
| 16. | ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும் | ... | 64 |
| 17. | மதிப்புரை | ... | 72 |
| 18. | கடிதங்கள் | ... | 74 |
| 19. | Extracts from visitors' Book | ... | 75 |
| 20. | வருங்காலம் | ... | 79 |
| 21. | வேளூர் மலர் 2 | ... | கூ-கசூ |


## கட்டுரை எழுதுமவர்க்கு


"ஞானசம்பந்தம்" திங்கள் வெளியீட்டிற்குச் சமயச்சார்புள்ள கட்டுரைகள் எழுதுவோர் நல்ல தாளில் இடையீடுதந்து ஒரு பக்கத்திலேயே எழுதுதல் வேண்டும் கட்டுரை நான்கு பக்கங்களில் முடிவதாக இருத்தல் நல்லது. தக்கவற்றிற்கு ஊதியம் உண்டு தொடர் கட்டுரை எழுதுவோர் இரண்டு இதழிற்குரிய முறையில் எழுதலாம். வெளியிடப் பெருதவற்றை மீண்டும் பெற விரும்புவோர் போதிய அஞ்சற்பில்லைகள் அனுப்புக.

துணையாசிரியர்,
"ஞானசம்பந்தம்",
தருமபுரம், மாயூரம் *P. O.*

மதுரைப் பொற்றாமரைக் குளத்தில்



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் "பொற்றாமரை" மலர் ஒன்றை மிதக்கச்செய்யும் காட்சி.



உ
சிவமயம்
திருக்கழுக்குன்றத் திருப்பதிகங்கள்
திருச்சிற்றம்பலம்

மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக்கா டுடையானை முதலா னானை
ஆவினிலைந் துகந்தானை யமரர் கோனை
ஆலாலம் உண்டுகந்த ஐயன் றன்னைப்
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் றன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் றன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 1

மலையிடு தலைசடைமே லுடையான் றன்னைப்
பாம்புரித்தோ லுடையானைப் பகவன் றன்னைச்
சொல்லோடு பொருளனைத்து மானான் றன்னைச்
சுடருருவில் என்பாபரணக் கோலத் தானை
அல்லாத காலனைமுன் அடர்த்தான் றன்னை
ஆலின்கீழ் இருந்தானை அமுதா னானைக்
கல்லாடை புனைந்தருளுங் காபா லியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 2

திருப்புகலூர்

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டமாடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப்பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்

அப்பர்

சிவமயம்
பண் - நட்டபாடை
திருச்சிற்றம்பலம்

கொன்று செய்த கொடுமையாற் பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 1

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையன் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுக் குன்றமே. 2

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம் வினைகள் அலசி அழிந்திடத்
தோளும் எட்டும் உடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையுந் தண்கழுக் குன்றமே. 3

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்கு மழுவாளன் முந்தி யுறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்ம்மதம் மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 4

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படையன் எந்தை பிரானிடம்
முலைகள் உண்டு தழுவிக் குட்டி யொடுமுசுக்
கலைகள் பாயும் புறவின் தண்கழுக் குன்றமே. 5

மடமு டைய அடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய அரவன் றான்பயி லும்மிடம்
கடமு டைய புறவின் தண்கழுக் குன்றமே. 6

ஊனம் இல்லா அடியார் தம்மனத் தேயுற
ஞான மூர்த்தி நட்டமாடி நவி லும்மிடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாட...
கான மஞ்ஞை உறையுந் தண்கழுக் குன்ற...

அந்தம் இல்லா அடியார் தம்மனத் தேயுற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்து மலர்கள் நித்தலுஞ் சேரவே
சந்தம் நாறும் புறவின் தண்கழுக் குன்றமே...

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞ...
குழைகொள் காதன் குழகன் றானுறை யும்மிட...
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேய்அவை
குழைகொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்ற...

பல்லில் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மி...
கல்லில் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றி...
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பி...
சொல்லல் சொல்லித் தொழுவார் தம்தொழில் வல்வினை...

— ஸ்ரீ...

திருச்சிற்றம்பலம்

சிவபோகசாரம்

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூ...
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் நெல்வே...
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்
வாஞ்சியமென் முத்தி வரும்

- ஸ்ரீ குருஞானசம்ப...

தருமபுர ஆதீனம்

13 2.1955

தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருவுள்ளப்படி
சலவைக் கல்லில் பொறித்து அமைத்த " திருக்கழுக்குன்றத் திருமுறைப் பாடல்கள்."

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 14 | ஜயயாண்டு மாசி 10—3—55 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## கல்வி நிலையங்களில் சமய போதம்

சென்னை மாநிலம் கல்வித் துறையில் மிகுந்த சிராக்கமான அமைப்புக்களை அடிக்கடி கொண்டுவந்து முன்னேற்றம் காண்கிறது. அதன் பெயருக்கும் புகழுக்கும் காரணம் அதனைக் கண்காணிப்பவர்களின் திறமைதான். அண்மையில் சென்னை மாவட்டத் தமிழாசிரியர்கள்கூடி மாநிலக் கல்வித் துறை இயக்குநர் ஒருவரைப் பாராட்டிச் சிறப்புச் செய்ததைப் பலரும் அறிவர். இப்படி மாநிலமெங்கும் பாராட்டப்பெறும் சிறப்புக்கு உரியவர்தாம் நம் உயர்திரு. நெ. து. சுந்தரவடிவேலு M.A., L.T., அவர்கள்.

தருமபுர ஆதீனத்தின் கல்வி நிலையங்களைக் காணப் பற்பலர் வந்தனர்—வருகின்றனர். 1—3—'55 இல் மாயூரம் வந்த தொடக்கக் கல்விச் சிராக்கக் குழுவினர் ஆதீனக் கல்விநிலையங்களைக் காணத் தருமபுரத்துக்கும் வந்தார்கள்.

கீழைக்கோயிலில் ஸ்ரீமகாலட்சுமி துர்க்காம்பிகையை வழி பட்டனர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியைப் பார்வையிட்டனர். ஆதீனத் தேவார பாடசாலை, சிவாகமபாடசாலை, இசைக்கல்லூரி, கீழைக்கலை நடுநிலைப்பள்ளி முதலிய கல்வி நிலையங்களைக் கண்டு களித்தனர். கல்லூரிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கட்டுரை – கவிதை – கதை – நாவன்மை – சமயச்சிறப்பறிவு முதலியவற்றில் தேர்ச்சிபெற்ற மாணவர்கட்கு மிகச்சிறந்த முறையில் தருமையாதீனம் இருபத் தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளிய பரிசிற் புத்தகங்களை உயர்திரு. டாக்டர். *R. M.* அழகப்பச் செட்டியார் அவர்கள், தேர்ச்சிபெற்ற மாணவமாணவிகட்கு வழங்கினார்கள்.

உயர்திரு. நெ. து. சுந்தரவடிவேலு M. A., L. T., அவர்கள், மாணவர்கள் குறள் நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு அறிவுரை கூறினார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், சமயம் – மொழி – சமூகம் முதலிய துறைகளில் நாட்டுக்கு ஆற்றிவரும் அருட்பணியைப் பாராட்டினார்கள். அதைத் தொடர்ந்து பேசிய அவர்கள் பேச்சு குறளுக்கு விளக்கம். ஒழுக்கநெறியை வற்புறுத்துவது. அறிவுத்துறையில் ஆக்கம் தருவது. அதன் சுருக்கம்:-

"ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மொழி வளர்ச்சிக்கு இதுபோன்ற கல்வி நிலையங்களையும், சமூக வளர்ச்சிக்கு மகப் பேறு மருத்துவ விடுதி போன்றவைகளையும் அமைத்து வருதல் அறிந்து நான் மிக மகிழ்கிறேன்.

வள்ளுவர் கூறியவாறு வையத்துள் வாழ்வாங்கு வாழத் தெரிந்துகொள்ளவேண்டும். 'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்' என்றார். அது நாத்திக வாதம் அல்ல. சமையக்கல்வியையும், மொழிப்புலமையையும் நீங்கள் அடைகின்றீர்கள் என்பது இன்பமளிக்கிறது. நீங்கள் உங்களுடைய நல்ல முயற்சியையும் கைக்கொள்ளவேண்டும். முயற்சிவேண்டும் என்பதே அக்குறளின் கருத்து. கடவுள் நம்பிக்கையோடு முயற்சிசெய்து படித்து முன்னேறவேண்டும்.

214

யான், எனது என்னும் அகப்பற்றையும், புறப்பற்றையும் படிப்படியாய் ஒழிக்கவேண்டும். அப்பொழுது தான் தெய்வ வழியும் கிட்டும். எக்காரியத்துக்கும் நாங்கள் என்று சமூகம் முழுவதையும் சேர்த்துப் பேசவேண்டும். இதையே வள்ளுவர் யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்'' என்றார்.

''ஈன்றாள் பசி காண்பானாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை'' என்பது பொய்யாமொழி, சான்றோர் பழிக்கும் வினைகள் விளையாதவாறு புகழ்வன செய்து வாழ்வு நடத்தப் பழகிக் கொள்ளவேண்டும். மற்றும் மாணவர்கள் கற்க வேண்டியவைகளைச் செம்மையாகக் கற்றால்தான் வாழ்க்கையில் அவற்றின் பயனை அடையமுடியும். வள்ளுவரும், ''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக'' என்று கூறினார்.

அப்படிக் கற்ற கல்வியைப் பலருக்கும் புகட்டவேண்டும்' மாணவர்கள் அறநெறியுள்ளம் உடையவர்களாகவும் பகுத்துண்டு வாழும் பண்பினராயும் இருக்கவேண்டும். ''பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை'' என அதன் தலைமையை அறிவுறுத்தினார். அறிவுமுதிர்ச்சிக்கு ஏற்ப அடக்கம் அமையும்''.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், தங்களைக்கண்டு உரையாடிய குழுவினரிடம், மற்றைப் பாடத்திட்டங்களைப்போலச் சமயபாடமும் கற்பிக்கலாம் அல்லவா என்று வினவியருளினார்கள். அதற்கு அக்குழுவினர், மற்றைப் பாடங்களைக் கற்பிக்க வரையறுத்த காலம் குறையாதபடி, முன்னே பின்னே சமய அறிவு வளரக் கற்பிக்கலாம் என்றனர்.

பிள்ளைகளின் இயற்கை யறிவை நாட்டியயல்பிற்கும் வழி வழிவரும் பண்பாட்டிற்கும் ஏற்ப அமையும் கல்வியே வேண்டும். அது மிகப்பரந்த நோக்கத்தை வளர்க்கவும், உலகப்

பொதுமை உணர்ச்சியைப் பெருக்கவும் தக்கதாய் இருத்தல் வேண்டும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுது துன்பத்தை நீக்கி அழியா இன்பத்தைத் தேடிப் பெறுவதே என்பது நம் நாட்டின் தலையாய கொள்கை. "அறம் செய விரும்பு", "ஆலயம் தொழுவது சாலவும்நன்று". என்று குழந்தைக் கல்வியாய் ஆக்கம்பெற்றதே நமது கல்வி முறை. "கற்றறிந்தார் கண்டது அடக்கம்" என்பது முடிவு. இவ்விரண்டும் இல்லையேல் பொறுமையும், பொல்லாங்கும், போருமே விளையும். எங்கும் என்றும் அமைதியை நிலை நாட்டும் கல்வியே கல்வி.

வளர்க கடவுள் நெறி ! வாய்க்க நல்ல கல்வி முறை !!

---


## சமய போதச் சொற்பொழிவுகள்

பல சித்தாந்தக் கொள்கைகளை வெளியிடுவன

கிரௌன் 1 x 4, பக்கங்கள் 266.

| | | |
|---|---|---|
| விலை | ... ரூ. | 1—0—0 |
| புத்தக அஞ்சல் | ... | 0—7—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | ... | 0—6—0 |

கிடைக்குமிடம் :- தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம்,
41, உஸ்மான் ரோடு,
தியாகராயநகர், சென்னை—17.

# அம்மையப்பர்

தருமபுர ஆதீனப்புலவர், சித்தாந்த ரத்நாகரம்,

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

உயிர்களை ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று அழுக்குகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. ஆணவம் இல்லாவிட்டால் 'யான்' என்ற அகங்காரமும் 'எனது' என்ற மமகாரமும் ஏற்படா. மாயை இல்லாவிட்டால் உடம்பும் அதில் கருவிகளும் உண்டாகமாட்டா. மூலகன்மம் இல்லாவிட்டால் நல்வினை தீவினைகளும் அறமும் (புண்ணியமும்) மறமும் (பாவமும்) இன்பத்துன்பங்களும் (சுகதுக்கங்களும்) தோன்ற வழியில்லை.

உயிர்கள் ஆணவம்மட்டும் உள்ளவை; ஆணவமும் கன்மமும் உள்ளவை; மாயையொடு மூன்றுமுள்ளவை என மூவகை. அவை சிவபதத்திற் செல்லும் வழிகள் ஆறுவகை: முதல் ஐந்தும் கலாத்துவாவில் அடங்கும். கலையைந்தும் திரோதான சத்தியுள் ஒடுங்கும். அச்சத்தி சிவசத்தியாய் மாறும். அது சிவத்தில் ஒடுங்கும். இவ்வொடுக்கம் கடவுள் செயல். கடவுள் ஒருவரே தனித்துநிற்பார். அத்தகைய ஒடுக்கம் நிகழும் இடமே 'சுடுகாடு' என்றும் அச்சுடுகாடே அத்தனிமுதற் கோவுக்கு 'இல்' என்றும் உபசாரமாக உரைக்கப்படும். அங்குச் சுடுதலோ காடோ இல்லை. இல்லும் இல்லை. 'கோயில் சுடுகாடு' என்றது சொல்லமுடியாத அந்நிலையைச் சொல்லால் ஒருவாறு சொல்லி வைத்ததாகும். பேச்சற்ற இடம் அது, அதைப்பற்றிப் பேசுவது எப்படி? எண்ணமும் சொல்லும் எட்டாத இடத்தை ஏதேனும் ஓராற்றால் எண்ணவும் சொல்லவும் இல்லையானால், அதை உணரும் வழி ஏற்படாது. அதுபற்றியே தியானமும் தோத்திரமும் ஏற்பட்டன.

அச்சுடுகாடே கோயிலாக்கொண்டு தனியாய் வீற்றிருக்குங் கடவுளை உணர்ந்து அக்கடவுளாவதே மேலான வீடுபேறு.

"கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயும்இலி தந்தையிலி தான்தனியன் காணேடி"

என்று மாணிக்கவாசகர் அருளியதில், அக்கடவுளது தனிமையும் அதற்கு உற்றகாலத்தில் எல்லாம் ஒடுங்கும் ஒடுக்கமும், அங்குக் காலக்கணக்கு இல்லாமையும் குறிப்பாக உணரக் கிடக்கின்றன. 'ஞாலமே விசும்பே இவை வந்துபோம் காலமே' என்ற திருவாசகத்தின் கருத்து யாது? ஆராய்ந்துணர்க.

அத்தனிக்கடவுள் மீண்டும் உலகங்களைப் படைக்கத் தொடங்கும் காலத்தில், அவரது திருவருட் பெருக்கத்தால் உயிர்கள் பக்குவம் அடைந்த வினைகளின் பயனை நுகரச் செய்யவும், ஆணவம் என்ற அழுக்கு விலகியொழியும் நிலையை உண்டாக்கவும், தம்மிடத்தில் ஒடுக்கிய அச்சத்தியை மீண்டும் விளங்கத் தோற்றுகின்றார், அச்சத்தியினிடத்தில் தாமும் பொருந்துகின்றார், அதில் ஒடுங்கியிருந்த உயிர்களையும் மீளத் தோற்றுவிக்கின்றார். (இது படைத்தல்)

அவ்வுயிர்கள் முன்னர் விட்டகுறைக்கு ஈடான (1) உடம்பையும், (2) உறுப்புக்களையும் (3) நுகர்விற்குத்தக்க இடங்களையும் (4) இன்பத்துன்பம் ஏற்படத் துணையான பொருள்களையும் அளிக்கின்றார். தநு, கரணம், புவநம், போகம் என்று சொல்லப்படுவனவே அந்நான்கும். அவ்வாறு அளிப்பதால் அக்கடவுளது முதன்மைக்கு இழுக்கில்லை. அது வினைப்பயனுக்கு ஈடாக உயிர்களை நுகர்விப்பதேயாகும். (இது காத்தல்) ஆயினும், அவ்வாறு நுகர்விக்கும் அவரை, நுகரும் உயிர்கள் அறியமாட்டா. நுகர்விக்கும் அவ்வுதவியையும் அறியமாட்டா. திரோபவம் (மறைப்பு) ஆகிய இவ்வுதவி செய்தவர் கடவுள். செய்யப்பெற்றவை உயிர்கள். உயிர்களோ அக்கடவுளது நன்றியை அறிவதும் இல்லை. நினைப்பதும் இல்லை. செய்ந்நன்றி கொன்ற உய்தி இல்லாத குற்றத்திற்கு ஆளாகாமல் தப்புவதும் இல்லை.

"தன்னை அறிவித்துத் தான்தானுச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னுச்செய்தும் தைவம்என்றும் தைவமே
மானே தொழுகை வலி"

என்னும் சிவஞானபோத வெண்பாவையும் அதற்கு மாதவச் சிவஞான யோகிகள்,

218

(1) "தன்னுண்மை அறியமாட்டாது குருடாய்க்கிடந்த உயிர்க்குப் பலவாற்ருனும் அதனைத் தெரித்துணர்த்தி எத்தனையும் எளிய அவ்வுயிரை, எத்தனையும் அரிய தானும் வண்ணம் செய்தளித்த பெரியதோருதவியை, அதன் பின்னர் மறக்கும் ஆயின், அஃது (அம்மறதி) இதற்கு (இம்மறதிக்கு) முன் அறியாமையால் மறந்த குற்றம் (தீர்ந்தது) போலத் தீர்(கின்ற) திறன் உடையதொரு குற்றம் அன்று, ஆகலானும்,

(2) முதல்வன் அங்ஙனம் தான்தானே ஆகச் செய்தாலும் இதுகாறும் தனக்குச் சுதந்திரம் இன்றி, முதல்வனது உபகாரத்தை இன்றியமையாதாய், அடிமையாகிய உயிர் எக்காலத்தும் அவ்வாறு அடிமையே ஆம், ஆகலானும்,

தான்தானுச் செய்தளித்த அப்பெரியோனை (குருவை) வழிபடுதலே அவ்வுயிர்க்கு வலி (உறுதி)யாவது என்க" என்று அருளிய உரையையும், அதை அடுத்தே.

"முன்னை மறந்தகுற்றம் அறியாது நிகழ்ந்தது ஆகலின்
கழுவப்படும். இஃது அதுபோல் கழுவப்படுவது அன்று."

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் கருத்துநோக்கிக் கூறியதூஉம் ஆம் என்றுள்ளதையும் அறிக.

இவற்ருல் கடவுளுக்கும் கடவுளது வடிவான குருவுக்கும் உயிர்கள் நன்றியறிதல் உடையனவாக இருத்தல்வேண்டும் என்பது விளங்கும்.

கடவுள், உயிர்கள் பாசப்பொருள்களில் பற்றுவைத்து நுகரும் வண்ணம் மறைப்பதே ஐந்தொழில்களுள் ஒன்ருன திரோபவம் (மறைப்பு) எனப்படும்.

1. ஒடுக்குதல், 2. தோற்றுதல், 3. காத்தல், 4. மறைத்தல் ஆகிய நான்கு தொழில்களாலும் இருவினையொப்பும் ஆணவ மலபரிபாகமும் உண்டாகி, இவர்கள் வீடுபேறு அடைவது எப்போது என்று இரங்கி எப்போதும் கடவுள் 5. அருள் கின்ருர், அநுக்கிரகம் செய்கின்ருர். (இதுவே அருளுதல்.)

இவ்வைந்து தொழிலும் கடவுள் அருளாலேயே நடந்துவருவன. அவற்றால் பக்குவம் அடைந்த உயிர்களை உணர்ந்து அவ்வுயிர்களின் அளவிற்கு அளவான தீட்சைகளாலே காத்து. முறைமையிலே தம்மொடு கூட்டிக்கொள்வதே கடவுளது பேரருட்செயல். முன்னைய நான்கும் அருளேயாயினும் இறுதியருளுக்கு அவை ஏதுவாயிருப்பன. ஆய்ந்து ''பார்த்திடின் அருளே எல்லாம்.''

அத்தகைய அருள்புரிதொழில் இயல்பாகவே உண்டு. அத்தொழில் புரியும் கடவுள்தான் எல்லாவுயிர்களுக்கும் தாயும் தந்தையும்: (அம்மையப்பர்) ஆவார். 'யாவைக்கும் வீடு ஆகும் அப்பொருள் ஆம் நம்சிவன்' என்றது திருவாசகம்.

'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' என்றது திருக்களிற்றுப்படியார் முதலாவது திருப்பாடலின்முதல் வாக்கியம்.

"எந்தையாய் எம்பிரான் மற்றும் யாவர்க்கும்
தந்தைதாய் தம்பிரான் தனக்கு அஃது இலான்
முந்தி என்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலும் அறிவரும் செல்வனே''

என்னும் திருவாசகத்தில், எவர்க்கும் அம்மையப்பன் (தாயும் தந்தையும்) எனக்கும் அம்மையப்பன்: ஆனால், அவ (சிவ) னுக்கு அம்மையும் அப்பனும் இலர், ('தாயும்இலி தந்தைஇலி தான் தனியன்').

"என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி நின்று எய்த்து அலைந்தேன்
மின்னை ஒப்பாய் விட்டிடுதிகண்டாய் உவமிக்கில் மெய்யே
உன்னை ஒப்பாய் மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய் என் அரும்பொருளே''

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே''

22

# அங்கமாலை

வித்துவான் திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்கள்

(மலர் 13 இதழ் 12ன் தொடர்ச்சி)

## திருவங்கமாலை

நாவுக்கரசர் பக்தி பூர்வமாகச் செய்துவந்த செயல்களையே இத்திரு அங்கமாலை உணர்த்துகிறது என்று கொள்ளலாம். பக்திவழிபாட்டில் பெரிதும் ஈடுபட்ட இவர் தம் திருவங்கமாலைப் பாசுரங்களில் தமது அங்கங்களை இறைவன் விஷயத்தில் ஐக்கியப்படும்படி கூறியது வியப்பன்று. திருவங்கமாலையில் பன்னிரண்டு பாடல்கள் உள்ளன. இவை தற்காலத்துள்ள சிந்து முதலியவற்றைப்போல சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் இசையோடு உற்சாகத்துடன் படித்து இன்புறும்படி அமைந்துள்ளன. இவற்றில் முதலிலுள்ள ஏழு பாடல்களில் தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கைகள் என்பவை குறிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுறுப்புக்கள் தத்தம் தொழில்களை இறைவன் விஷயத்தில் செலுத்தும்படி நாவுக்கரசர் ஏவுகிறார்.

தலையே! நீ வணங்காய்!
தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே! நீ வணங்காய்! 1

என்பது முதற்பாடல். இச்செய்யுளில் "தலையே! நீ வணங்காய்" என்று வேண்டுதலோடு இறைவன் தலையும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. பிரம விஷ்ணுக்களுடைய தலைகளாலான மாலையைத் தம் தலையிலே அணிந்து, பிரமன் தலையோட்டிலே பிச்சையேற்கின்ற தலைவன் இறைவன் என்கிறார். படைப்புக் கடவுள் முதலிய எல்லா ஜீவராசிகளும் அழிந்த காலத்தும் தான் அழியாதவன் என்பதை இது குறிக்கிறது. இப்பாடலில் தலை மாலை தலைக்கு அணிந்து, தலையாலே பலி தேரும் தலைவன் எனத் தலை என்ற சொல் பிரமனைக் குறித்தும் இறைவனைக் குறித்தும் மாறிமாறி வருதல் மேற்குறித்த கருத்தை உறுதிப்படுத்துகிறது. இப்பாடலில் தலையை வருணித்ததுபோல, மற்றப் பாடல்களில்

இறைவனது ஏனைய அங்கங்கள் வருணித்துரைக்கப்படவில்லை. ஆனால் அவனது உருவ அழகு பொதுப்படக் கூறப்பட்டுள்ளது.

கண்காள்! காண்மின்களோ!—கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ! 2

என்ற அடுத்த பாடலில் இறைவன் கழுத்தும் அவன் நடனமும் குறிக்கப்படுகின்றன. தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் எழுந்த விஷத்தை அவன் உண்டு, யாவரையும் காப்பாற்றினான். அவன் உண்ட விஷம் கழுத்திலே தங்கி நின்றதினாலே அது கருநிறம் பெற்று நீண்ட காலமாக விளங்கிற்று. அவன் உலகிற்குச்செய்த பெரியதொரு கருணையை இது காட்டிக்கொண்டே இருக்கிறது. மேலும், உலகம் வாழும் பொருட்டு அவன் தனது எட்டுக் கைகளையும் வீசி நடனம் ஆடுகிறான். இத்தகைய கருணாமூர்த்தியைக் கண்கள் காண வேண்டும் என்கிறார்.

கண்கள் சிவபெருமானையே காண்பதோடு செவிகளும் அவன் பெருமையைக் கேட்க கேண்டும் என்று

செவிகாள்! கேண்மின்களோ!—சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் திறம் எப்போதும்
செவிகாள்! கேண்மின்களோ! 3

என்ற பாடலிலே சொல்லுகிறார். இங்கே இறைவன் பவளம் போன்றும் நெருப்புப்போன்றும் சிவந்த நிறமுடைய மேனி படைத்தவன் என்று அவன் மேனி அழகு பாராட்டப்படுதல் காணலாம். இவ்வாறே சுடுகாட்டில் வாழ்கின்றவன்; பேய்கள் வாழும் அக்காட்டிலே நடனமாடுபவன்; மூன்று கண்கள் படைத்தவன்; யானைத்தோல் போர்த்தவன் எனச் சிவபெருமானது உக்கிர வடிவும் கபில நிறமும் வாய்ந்த சடைமுடியையுடையவன் என அவனது யோக நிலையும் மலைமங்கையாகிய உமாதேவியின் கணவன் என அவனது போகநிலையும் மூன்று பாடல்களில் புகழ்ந்து சொல்லப்படுகின்றன. அவை வருமாறு:

மூக்கே! நீ முரலாய்!—முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்! 5

வாயே! வாழ்த்து கண்டாய்!—மத
யானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும் பிரான்தன்னை
வாயே! வாழ்த்து கண்டாய்! 5

நெஞ்சே! நீ நினையாய்!—நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே! நீ நினையாய்! 6

இவற்றில் மூக்கால் ஒலித்தும் வாயால் வாழ்த்தியும், நெஞ்சால் நினைத்தும் வழிபடத் தமது அங்கங்களுக்கு அறிவுறுத்துகிறார். மேலும், வாசனை மிக்க மலர்கொண்டு அருச்சித்து அவ்விறை வனைக் கைகள் குவித்துத் தொழவேண்டும் என்கின்றனர்,

கைகாள்! கூப்பித் தொழீர்!—கடி
மாமலர் தூவி நின்று,
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள்! கூப்பித் தொழீர்! 7

என்ற பாடல் இதனை உணர்த்துகிறது. இவ்வாறு வணங்கித் தொழுதற்குக் கோயில் வழிபாடுதான் சிறந்த உபாயம். இதைப் பின் இரண்டு பாடல்களிலே வற்புறுத்துகிறார்.

ஆக்கையாற் பயனென்?—அரன்
கோயில் வலம் வந்து,
பூக்கை யால்அட்டிப் போற்றி என்னாதஇவ்
வாக்கையாற் பயனென்? 8

கால்களாற் பயனென்?—கறைக்
கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால் களாற் பயனென்? 9

இறைவன் கோயில் கொண்டருளிய பதிகளுள் ஒன்றான திருக்கோகர்ணம் இங்குக் கூறப்படுகிறது. இத்தலம் மலை நாட்டிலுள்ளது. இங்கு அழகிய கோபுரத்தோடு கூடிய ஆலயம் ஒன்று இறைவனுக்கு உள்ளதென்று இப்பாட்டால் தெரியவருகிறது. இவ்வாறாகத் திருக்கோயிலை வலம் வந்து, இறைவனைப் பூக்கொண்டு அருச்சித்து, வாழ்த்தி வணங்குதலே உடம்பு பெற்றதனால் பெறும் பயன் ஆம்.

இனி, அடுத்த பாடலில் உறவினர்கள் ஒருவரும் உண்மையில் உறவினராக மாட்டார்; திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கும் கூத்தப் பெருமானே நெருங்கிய உற்றாராவர் என்று நாவுக்கரசர் தெளிந்து உரைக்கிறார்.

உற்றார் யாருளரோ?—உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் யாருளரோ? 10

என்பது அவர் வாக்கு. இறைவன் அடியார்களில் தான் ஒருவனாய் எண்ணப்பட்டு, அப்பெருமானது திருவடிக்கீழ் உறையும் பேற்றையே நாவுக்கரசர் விரும்புகிறார்.

இறுமாந் திருப்பன்கொலோ!—ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்று அங்கு
இறுமாந் திருப்பன் கொலோ!

என்பது நாவுக்கரசர் வாக்கு.

இறைவன் சேவடியை எவ்வாறு பெறுவேன் என்று உளம் தயங்கும் நாவுக்கரசர் தமது அங்கங்களை ஐக்கியப்படுத்திக் கோயில் முதலிய வெளியிடம் எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனைத் தொழுததுபோலவே, தம் உள்ளத்திலே நித்தியமாய் வாழுகின்ற இறைவனையும் சிந்தித்து வந்தித்தார். அதனால் அவர் சித்தியும் பெற்றனர். இறைவனைக் கண்டு கொண்டதாக எக்களிப்போடு பாடுகிறார்.

தேடிக் கண்டுகொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன். 12

என்ற பாடலில் இது விளங்கும். நாவுக்கரசரது உள்ளத்தே கிளர்ந்தெழுந்த மகிழ்ச்சி நம் மனத்தைக் கூத்தாடச்செய்கிறது, எண்ணியது கைகூடிவிட்டது என்ற இறுமாப்பும் இதில் தொனிக்கிறது. தமது அவயவங்களை இறைவன்பால் ஒன்றுபடுத்தி ஒருப்பட்ட மனத்துடன் இருந்தால்தான் இப்பேறு கிடைக்கும் என்பதை இவ்வங்கமாலைப் பாசுரங்களிலே நாவுக்கரசர் நன்கு வெளியிடுகின்றார்.

(தொடரும்)

# பெரியபுராண விரிவுரை

பெருஞ்சொல் விளக்கனர்
**திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்**

## திருத்தொண்டத்தொகை அருளல்

## எண் 5

தில்லைச் சபாநாயகரைப் பாடிப்பணிந்து நின்றபோது, "ஆரூரில் நம்பால் வருக" என்னும் அருளாணை பிறக்கவே. சுந்தரர் திருவாரூருக்குப் புறப்பட்டுச் சென்ருர். வழியில் சீகாழிப் பதியை அணுகியதும் அம்மையின் திருமுலைப் பாலமு துண்டு வளர்ந்த ஞானசம்பந்தப்பெருமான் அவதரித்த திருத்தல மாதலின் அதனை மிதித்தற்கு அஞ்சி எல்லையை வலம்வந்து வணங்கினுர். அப்போது ஆண்டவன் அன்பருக்கிரங்கித் தம் திருக்கோலக்காட்சி தந்தருளினன்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெரியோர்களிடத்துக் கொண்ட பக்தியும் மதிப்பும் எத்துணைப் பெரிய என்பது ஈண்டு அறிந்து இன்புறத்தக்கது. (திருவதிகை வீரட்டானம் நாவுக்கரசர் கைத்தொண்டு செய்த இடமென்பது கருதி அதனுள் செல்லா மையும் அறிக) சுந்தரர் ஞானசம்பந்தர் சென்ற வழியை மேற் கொள்கின்ருர். எவ்வாறெனின் திருவாலங்காடு சென்றபோது பிள்ளையார் அதனை மிதித்து உள்ளே செல்லவில்லை. காரணம் காரைக்காலம்மையார் தமது திருத்தலையால் நடந்துசென் றடைந்து போற்றியிருந்த பதியென்பதனுல். இதனுல் நாம் அறிவது யாதெனின் நாம் யாரைப் பெரியவர்கள் என்று கருது கிருேமோ அவர்கள் சென்றவழியில் செல்லவேண்டுமென்பதாம். நமது முன்னேர்களை நாம் மதித்தால் நமது வழித் தோன்றல் களால் நாம் மதிக்கப்படுவோமென்பது உறுதி.

பிறகு திருக்கோலக்கா, திருப்புன்கூர், திருமயிலாடுதுறை திருப்புகலூர் முதலிய தலங்களைத் தெரிசித்துத் திருவாரூரின் எல்லையை அணுகினுர் சுந்தரர். திருவாரூரில் வாழும் அடியார் களெல்லாம் தியாகேசப்பெருமான் தமக்குக் கனவில் அருளிய வண்ணம் ஊரை அலங்கரித்துச் சுந்தரரைப் பல்வகைச் சிறப் புக்களுடன் எதிர்சென்றழைத்தனர். சுந்தரர், அடியார்கள் சூழ

ஆலயத்துட்சென்று வன்மீகநாதரை வழிபட்டுப் பாமாலை சார்த்திப்பணிந்து நின்றார். புற்றிடங்கொண்ட பெருமான் சுந்தரரைத் தமது தோழனுகக்கொண்டு, "யாம் உனக்குத் தோழரானேம்; நீ அன்றுகொண்ட மணக்கோலத்துடன் வாழ்வாய்" என்றருளிச்செய்தார். அதுகேட்டுச் சுந்தரர், தன்னையாட்கொண்ட இறைவனது தடங்கருணையை நினைந்து வியந்து புகழ்ந்தார்.

அருமறைமகளும் முறையிட்டறிதற்கு அரியபிரான்மாலயன் தேடநின்ற மறையோன் தம்மை ஆட்கொண்டருளியதை எண்ணிய சுந்தரர், "ஆரூர் அமர்ந்த அருமணியே! நாயி னேனையும் பொருளாகக் கருதி நாட்கமலப்பதம் தந்தது உன் பரங்கருணையன்றே" என்று கூறுவாரானர்.

நாட்கமலப் பதம் என்பது அன்று மலர்ந்த தாமரை மலர் போன்ற திருவடி என்னும் பொருள்படும். தாமரை மலர் மக்களது அடிகளுக்கு உவமையாகிவந்தால் தாமரைபோன்ற மெல்லிய அடியென்ற பொருளில் வரும். ஆனல் இறைவனது திருவடிகளைக் குறிக்கும்போது நீரில் உள்ள தாமரை மலரில் தேனுண்டு. இறைவன் திருவடித் தாமரையிலும் அருட்டேன் பொங்கித் ததும்பும் என்று பொருள்படும். எனவே கமலப்பதம் என்றது தாமரைபோன்ற தேன்பிலிற்றும் திருவடி என்பதா யிற்று. நாட்கமலப் பதம் என்றது அன்று அலர்ந்த தாமரை யிற்றான் தேனுண்டு என்ற காரணம்பற்றியே. இது சேக்கி ழாரது புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. சிறந்த புலவர்கள் உவமையை எடுத்தாளும்போது அதிவியாப்தி முதலிய குற்றங் களை நீக்கியே ஆள்வர். "காலைமலர் செங்கமலம்" என்று பிறிதோரிடத்திலும் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். "திரை பொரா மன்னுமமுதத்தெண்கடலே" என்ற மணிவாசகரது மணிமொழியை ஈண்டு நினைந்து அன்னரது புலமையின் அருமையையும் அறிக.

பின்னர் ஓர்நாள் கோவிலில் தேவாசிரிய மண்டபத்துள் சிவனடியார்கள் வீற்றிருப்பக் கண்டு, சுந்தரர், இவர்க்குயான் அடியேனுகப் பண்ணுநாள் எந்நாள்" என்று பரவிச்செல்ல இறைவனும் நம்பியார் முன்றோன்றி அடியார்களது பெரு மையை எடுத்துக்கூறி, "தில்லைவாழ் அந்தணர்தம் அடி யார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்கச்

சுந்தரர், அதனை முதலாகக்கொண்டு 'திருத்தொண்டத்தொகை' யருளிச்செய்தார்.

அடியார்கள் ஒருமை மனத்தால் செயற்கரிய செயலாற்றுவர் என்பார், "ஒருமையால் உலகைவெல்வார்" என்றருளிச் செய்தார். எண்ணம் ஒன்றி நினைந்தவர் மனத்திலேதான் ஆண்டவனும் கோயில் கொண்டுள்ளான். இதனை "எண்ணொன்றி நினைந்தவர் தம்பால், உண்ணின்று மகிழ்ந்தவன்" என்று ஞானசம்பந்தர் பாடுகின்றார். ஞானசம்பந்தர் ஒரு நெறிய மனம் உடையாரானதால் திருநெறிய தமிழ் பாடலானார்.

அடியார்களை வீரத்தார் என்றது அகப்பகையை வென்றவர்கள் ஆனதால். புறப்பகையை வென்றவர்களையே வீரர் என்று உலகியலில் கூறுவது வழக்கம். ஆனால் புறப்பகையை வெல்வதைவிட அகப்பகையாகிய காமக்குரோதாதிகளை வெல்லுவது மிக அரிது. எனவே வீரர் என்பது அடியார்களுக்கே தகும். திருக்கூட்டச் சிறப்பில், "யாதுங் குறைவிலார் வீரம் என்னல் விளம்புந்தகையதோ" என்று வருவதும் இதனையே உணர்த்தியது.

## நீலகண்டர் மனமும் ஆலமுண்டார் சினமும்

## எண் 6

திருநீலகண்டர் தில்லைப்பதியில் குயவர் குலத்தில் அவதரித்தார். நடராஜப்பெருமானிடத்துப் பேரன்பு கொண்டவராய்ச் சிவனடியார்கட்குத் தம் குலமரபின் வழியேநின்று மண்ணினால் திருவோடமைத்து, மகிழ்வுடன் தரும் பெரும் பணியில் ஈடுபட்டு வந்தார். சிவனது நீலகண்டத்தின்மீது சிறந்த பற்றுக்கொண்டு "திருநீலகண்டம்" "திருநீலகண்டம்" என்று அடிக்கடிக் கூறி மகிழும் இயல்புடையர். இதனால் திருநீலகண்டர் என்னும் பெயரும் பெற்றுத் திகழ்ந்தார்.

திருநீலகண்டர் ஒருநாள் சிற்றின்பத்துறையில் எளியராகிப் பரத்தையர்பால் சென்று வந்தார். அதனையறிந்த அவர் தம் மனைவியார் ஊடல்கொண்டார். அவ்வூடலைநீக்க நீலகண்டர் தம் மனைவியாரைத்தழுவ முயன்றகாலை" நீர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று நீலகண்டத்தின்மீது ஆணையிட்டுத் தடுத்தார். அது முதற்கொண்டு "பிறமாதரையும்

தீண்டேன்'' என்று உறுதிகொண்டவராய்த் திருநீலகண்டர், தம் மனையாளுடன் இல்லிலிருந்துகொண்டே மெய்தீண்டுதல் விடுத்து வாழ்ந்துவந்தார். பல ஆண்டுகள் கழிந்தன. மூப்பு வந்தெய்தியது. எனினும் அடியார்களிடத்துக்கொண்ட அன்பு குறையாது தொண்டுபுரிந்து வந்தார். இறைவன் இவர்களது பெருமையை உலகறியச்செய்ய வேண்டுமெனத் திருவுளங் கொண்டு ஓர் சிவயோகியராய்த் திருநீலகண்டர்பால் வந்து தம் கையிலுள்ள திருவோட்டினைக் கொடுத்து இச்சிறந்த திருவோட்டினை நீ வைத்திருந்து நாம் வேண்டும் போது தருவாயாக'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார். திருநீலகண்டர் அதனைக் காவல் மிக்கதோரிடத்தில் வைத்துக் காத்தார். ஆனால் சின்னாள் கழிந்ததும் இறைவன் அவ்வோட்டை இருந்த இடத்தினின்றும் அகலச்செய்து மீண்டும் நீலகண்டரிடம் வந்து திருவோட்டைத் திரும்பத் தரும்படி கேட்டார். திருநீலகண்டர், அதனைக் காணாது திகைத்துத் திரும்பிவந்து சிவயோகியாரைத் தொழுது, "ஐயரே! தேவரீர் கொடுத்த திருவோட்டை வைத்த இடத்திலும் பிற இடங்களிலும் தேடியுங் காணேன்; ஆதலால் நல்லதொரு புதிய பாத்திரம் தருகிறேன்; அதனை ஏற்றுப் பிழை பொறுத்தருளவேண்டும்' என்று வேண்டினார். சிவயோகியார் கோபம் மிகுந்தவராய் "யான் கொடுத்த மண்ணோட்டைத்தவிர வேறு பொன்னோடாயினும் பெறேன்'' என்றுகூற, "இதற்கு யான் என் செய்வேன்; சொல்லியருள்க'' என்று நீலகண்டர் வேண்ட "காதலுன் மகனைப்பற்றிக் குளத்தினில்மூழ்கித் திருவோட்டை அபகரிக்கவில்லை எனக் கூறுவாய்'' என்று சிவயோகியார் மொழிந்தார். இதற்கு நீலகண்டர் தமக்கு மகப்பேறில்லை என்ன, "உன் மனைவி கைப்பற்றி மூழ்கித்தா'' என்று சிவயோகியார் கேட்க, "எங்கள் இருவரிடையே ஓர் சபதமுண்டு. எனவே நானே முழுகித்தருகிறேன்'' என்று நீலகண்டர் மறுமொழி பகர்ந்தார். அதுகேட்டுச் சிவயோகியார் கோபம் மிக்கவராய்த் தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்று தம் வழக்கினை எடுத்தியம்ப அவர்களும் வழக்கினை விசாரித்து, சிவயோகியார் கூறும்வண்ணம் நீலகண்டர் செய்து தரவேண்டியது என்று முடிவு செய்தனர்.

எனவே திருநீலகண்டர் தம் மனைவியாருடன் திருக்குளத்திற்குச் சென்று, தாம் மேற்கொண்டொழுகிய ஆணையைப்

பாதுகாக்கும் உறுதியுடையராய் ஆங்கு ஓர் மூங்கிலின் ஒரு புறத்தை மனைவியார் பிடிக்க மற்றொருபுறத்தைத் தாம் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்க இறங்கினார். சிவயோகியார் அதுகண்டு வெகுண்டு தடுத்து "மனைவியின் கையைப்பற்றியே மூழ்கவேண்டும்" என்றார். நீலகண்டர் தம் மனைவியைத் தீண்டாதிருக்கும் செய்தியை யாவரும் அறியும்படி கூறி மூங்கிலைப்பற்றியே மூழ்கினர், மூழ்கி எழுந்ததும் மூதுமை நீங்கப்பெற்று விருப்புறும், இளமை எய்தினர். சிவயோகியராய் வந்த ஆண்டவர் மறைந்து இடபாரூடராய்க் காட்சிகொடுத்து என்றும் மாறா இளமை நலத்தை நீலகண்டருக்கும் அவர் தம் மனைவியாருக்கும் அருளிச்செய்தார்.

## சில அரிய கருத்துக்கள்

முதற்பாடலில் 'மாதொரு பாகம்நோக்கி மன்னு சிற்றம் பலத்தே...... நாதனார் "எனவரும் தொடரை, நடராஜப் பெருமான் சிவகாமி யம்மையாரை நோக்கி ஆடுகின்றார்' என்பதற்கு மேற்கோளின்மையாலும் அதற்கு மாறாகச் சிவகாமி யம்மையார் தமது ஒருகண்ணால் ஆனந்தக் கூத்தைக்கண்டு மற்றொரு கண்ணால் உயிர்களைக் கடைக்கணித்தருள்கிறார் என்பதற்கு மேற்கோள் உண்மையாலும்" ஒரு பாகத்திலுள்ள சிவகாமியம்மையாரால் நோக்கப்பெற்று' எனச் செயப்பாட்டு வினையெச்சமாக்கி ஆடும் என்பதோடு முடிக்கவேண்டும்.

இறைவனது ஐந்தொழில் நடனம் பிறவிப் பிணிக்கோர் மருந்து. இம்மருந்தினை, ஓர் தாய் தனது 'பாலுண்குழவி பசுங் குடர்பொறாதென' அதன் நோய்தீர்க்கும் மருந்தைத் தான் உண்பதுபோலச் சிவகாமி யம்மையார் தம் ஒருகண்ணால் வாங்கிப் பக்குவப்படுத்தி மற்றொரு கண்ணால் உயிர்கட்கு வழங்குகின்றார். இரண்டு கண்களும் ஒரு பொருளைத்தானே நோக்கும் எனின் அது, வினைவயத்தால் என்பு, தசை, தோல் முதலிய எழுவகைத் தாதுக்களால் ஆக்கப்பட்ட உடம்புக்கே யன்றி அருளுடம்பிற்கு அஃது இயலாமை அறிக.


## நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலம்

நலம் ஈண்டுச் செல்வம் என்னும் பொருளில்வந்தது. நலத்தைத் தருவதை நலமென்றது, காரணத்தைக் காரியமாகக்

கூறிய ஒரு உபசார வழக்கு. எல்லோராலும் செல்வமெனக் கருதப்படும் செல்வம் இவர்பாலில்லை. எனினும் பெரியோர்கள் முடிவாகக்கண்ட செல்வத்தைப் பெற்றிருந்தார் இவர் என்பது இதன் கருத்து. "சிற்றம்பலமேய, செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்ற ஞானசம்பந்தர் வாக்கை நினைந்து கொள்க.

பொய்கடிந் தறத்தின் வாழ்வார் என்பது, "பொய்யாமை பொய்யாமையாற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று" எனப் பொய்யாமொழியும் வருவதால், பொய்கடிதலே ஓர் சிறந்த அறமாதலின் பொய்கடிந்ததாகிய அறம் என்ற பொருள்படும். இதனைத் தொகுத்தல் விகாரமாகக்கொண்டு பொய் கடிந்த எனப் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும்.

'இளமை மீதூர இன்பத்துறையில் எளியரானார் 'என வருந்தொடரில் மீதூர என்பது செய்ய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இவ்வெச்சம் காரணகாரிய உடனிகழ்ச்சி ஆகிய முப்பொருளிலும் வரும் இளமை மிகுதியால் இன்பத்துறையில் எளியரானார் நீலகண்டர் என்று பொருள்கொள்ளின் மற்றவர்களும் அவ்வாறு தவறிழைக்கலாம் என்பதாகும் அல்லவா? ஈண்டு எச்சம் காரியப்பொருளில் வந்து இளமை மீதூர்வதற்கு அதாவது என்றும் இளமையாக இருப்பதற்கு இன்பத்துறையில் எளியரானார் என்னும் பொருளுணர்த்திப் பின்வரும் நிகழ்ச்சியையும் குறிப்பாக உணர்த்திற்று. (தொடரும்)



குறிப்பு :-- ஆதீனத்துக்குச் சொந்தமான திருச்சி மௌன மடத்தின் சார்பில் 2,16—1—55 இல் நடைபெற்ற பெரியபுராண விரிவுரைச் சுருக்கம். தொகுத்தவர் : திரு. கிருஷ்ணன் அவர்கள்.

# பூலோக விமர்சனம்

## (பதினேழாம் நூற்றுண்டு வேங்கடாத்வரீ)

தமிழில் ஆக்கியவர்

பிர்மஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,
தருமபுர ஆதீனக் கல்லூரித் தலைவர்.

(முன்தொடர்ச்சி)

சற்று வடக்கேநோக்கி ரதத்தைச் செலுத்திக்கொண்டு இருவரும் செல்லுகையில் விச்வாவசு கீழே பூலோகத்தைக் கண்ணுற்றுப் பின்வருமாறு வணங்கினன். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அநுஷ்டிக்கும் ஸ்தானமாக இருக்கும் இந்த மானிட வுலகம் பெருமைவாய்ந்தது. இங்குச் செய்யப்படும் வேள்விகளில் தேவர்கள் அமிர்தத்திற்கு ஒப்பான ஹவிர்பாகங்களை அருந்தி மகிழ்கிறுர்கள். வேதவித்துக்களான மகான்கள் நிரம்பிய இந்தப் பூமி திவ்ய க்ஷேத்திரங்களாலும் புண்ணிய நதிகளாலும் புனிதத்தன்மை வாய்ந்தது.

கிருசானு-நண்ப, ஸ்வர்க்கலோகவாசியான நீ கூட மானிட வுலகத்தைப் புகழ்கின்றனையே! இங்கு ஜனன மரணங்களுக்கும் ஆதி வியாதிகளுக்கும் உட்பட ஜீவன்கள் என்ன கஷ்டப் படுகின்றன! மேலும் குற்றச்சாட்டில் குறிப்புள்ள மதம் பிடித்த, அல்பர்களான, துஷ்ட பிரபுக்கள் நிறைந்த இவ்வுலகத்தில் வாழ்க்கை பாழாகவல்லவோ போகிறது? யமனிடத்தில் இந்த மானிட ஜாதி படும் பாட்டைப்பார்! பால்யமோ, நடுவயதோ, முதிர்ந்த வயதோ, எக்காலத்திலும் யமனுக்கு இரையாகிவிடும். இந்த எளிய மாணவர்களுக்கு ஜீவித்திருக்கும் ஸ்வல்ப காலத்திலாவது சுகம் கிட்டுகிறதா? அதுவும் கிடையாது. எத்தனை விபத்துக்கள் எத்தனை துக்கங்களுக்கு அவர்கள் ஆளாகிறுர்கள்?

விச்வாவஸு—நீ சொல்வது உண்மைதான். இருந்தாலும் மனுஷ்ய ஜன்மாவைத் தாழ்த்திப்பேசாதே. தசரதன்! ராமன், கிருஷ்ணன், மாந்தாதா, பகீரதன், ஸகரன், ககுத்தன், ரகு, பூரு, புரூரவஸ், சிபி, ருக்மாங்கதன், ஜனகன், நகுஷன் கார்த்தவீர்யன், யயாதி, நளன், அர்ஜுனன் முதலியவர்கள் மனுஷ்யர்களல்லவா? அவர்களுக்கு நிகராகத் தேவர்களையும் சொல்ல முடியாதே!

கிருசானு—யாரோ யுகாந்தரத்தில் சில பெரியவர்கள் ஜனித்தார்கள் என்பதைக்கொண்டு இக்கலியில் குணலேச மில்லாதவர்களும் பற்பல தோஷங்கள் நிரம்பியவர்களுமான மானிடர்களைப் புகழ்வதில் என்ன பிரயோசனம்? கலிகாலத் தின் மகிமையால், காமத்தினுல் பாபச்செயல்களைச் செய்கிற கோபம் பேராசை, அகங்காரம், மதம் இவைகள் நிரம்பிய துஷ்டபிரபுக்கள் இவ்வுலகின் கண் தோன்றி நல்வாழ்க்கைக்கு இடர் செய்வது பிரத்யக்ஷம்.

விச்வாவசு—எல்லாக் கலி மனுஷ்யர்களையும் நீ ஒரே அடியாகத் தூஷிப்பது தகாது. இந்தக்கலியிலும் மாசற்ற சீல முடைய மஹான்கள் எவ்வளவுபேர்கள் இருக்கவில்லை? அத் தகையோர்கள் பாபச்செயல்கள் நிறம்பிய மதத்தினுல் மயக்க முற்ற, பிரபுக்களின் உறவைச்சிறிதேனும் நாடாதவர்கள். சித்தத்தில் தாமரைக்கண்ணனை ஸதா தியானம்செய்து மகிழ் கிறவர்கள் சாஸ்திர ஸம்பிரதாய அநுஷ்டானங்களை உலகில் பரவச்செய்வதற்கென்றே பூமியில் அவதாரம் செய்தார்கள், நாம் சுற்றிவரும் அளவில் அத்தகைய மஹான்களில் எவ் வளவோ பேர்களைப் பார்க்கலாம். அப்போது நீயே அறிந்து கொள்வாய் பூலோகத்தின் பெருமையை.


பின்பு பதரிகாச்ரமத்தில் பிரஸன்னமாயிருக்கும் ஸ்ரீமந் நாராயணனை இருவரும் பார்க்கிறுர்கள், அந்தஸ்தல விசேடத்தை வருணிக்கும் விச்வாவஸு அந்தப் பிரதேசத்தின் குளிரையும் பொறுத்துக்கொண்டு பக்த ஜனங்கள் அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து புனிதமாவதுடன் ரோகிகளாக இருந்தால் ஆரோக்கியம் பெறும் அற்புதத்தையும் எடுத்துக் கூறுகின்றுன்.

பின்பு இருவரும் விமானத்தைச் செலுத்திக்கொண்டு சென்று அயோத்தியை நோக்கினர்கள். விசுவாவசு அயோத்திக்கும் ஸரயூநதிக்கும் வணக்கம் கூறினன். பின்னே ஸ்ரீராமபத்ரனை தியானம் செய்துகொண்டு ஸ்துதிசெய்தான். அதைப் பொறுக்காத க்ருசானு ஸ்ரீராமனிடத்தில் சில குறைகளை எடுத்துக் காட்டினன். "ராமன் மூத்தபிள்ளையாயிருந்தும் சிறியதாயாரின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்வதற்காகத் தனக்குரிய ராஜ்யத்தை விட்டுவிட்டுக் காட்டுக்குச்சென்றான். இது அறியாமை. பால் வேண்டாமென்று தள்ளிவிட்டு ஒருவன் கூழைச் சாப்பிடுவதுபோல். மேலும் இராவணனை ஜயிக்க விரும்பியவன் வாலியுடன் நட்புக்கொள்ளாதபடி சுக்ரீவனைச் சிநேகம் செய்துகொண்டது மௌட்டியம். கல்லை உடைக்க விரும்புகிறவன் உளியை எடுப்பானு? அல்லது தாமரை இதழை எடுத்துக்கொள்வானு? மூன்றுவதாகச் சொல்லுகின்றேன் ராமன் சமுத்திரத்திற்கு அணையைக் கட்டி வெகு பிரயாசைப் பட்டு யுத்தத்தில் இராவணனை வென்று ராக்ஷஸகுலத்தை அழித்துவிட்டு சீதையை மீட்டுக்கொண்டுவந்தான். ஆனல் அவளை மறுபடி கானகத்தில் விட்டுவிட்டான். அப்போது அவள் கர்ப்பிணியாயிருந்தாள். அக்னியினல் சுத்தியை அடைந்த அவளை மறுபடி சந்தேகிக்கலாமா? இந்த விதமான தகாத காரியத்தைச் செய்தவனல்லவா ராமன்?"

விசுவாவசு: நண்ப! குணசாலிகளிடம் தோஷத்தை ஆரோபணம் செய்யும் அடாத காரியத்தை நீ செய்கிருய். பிதாவின் சத்யவாக்கிய பரிபாலனத்திற்காக ராஜ்யத்தை துச்சமாக எண்ணி விட்டுச் சென்ற உத்தமபுத்திரனை நீ குறைகூறுகிருய். வாலியை விட்டு, சுக்ரீவனுக்கு அபயமளித்த அந்த பிரபுதான் தீனபந்து என்பதை அல்லவா விளக்குகிருன். மகாவிஷ்ணுவும் மகாலக்ஷ்மியும் இணைபிரியாத தம்பதிகள். ராமாவதாரத்தில் ராமன் சீதையை விட்டுப் பிரிந்து இருந்ததற்குக் காரணம் அரசன் பிரஜைகளின் மனங்கோணுமல் நடக்கக் கடமைப் பட்டவன் என்பதை நிரூபிப்பதற்காகத்தான். சீதையை விட்டானும் பிரஜைகளின் திருப்தியைக்கோரும் உக்ரவிரதத்தை மேற்கொண்டவன் ராகவன். சூரனுக்குக் கீர்த்தி பெரிதே ஒழிய பெண்டு பிள்ளைகளும் பண்ட பதார்த்தங்களும் தன் உடலும்கூட ஒரு பொருட்டாகாது என்பது அந்த சரித்திரத்திஞல் விளங்குகிறது.

ராமனுடைய குணகணங்களை வருணிக்க வால்மீகிமுனிவரே வல்லவரேயொழிய மற்றவர்களுக்கு முடியாது. அவரும் அவைகளில் சிலவற்றைத்தான் வருணித்திருக்கிறார்கள். ராமரின் சௌரியத்தைக்கேள்; ஒரு துரும்பு அவருக்குப் பிரும்மாஸ்திரமாகிக் காகாசுரனை மூன்று லோகங்களிலும் விரட்டி அடித்தது. அவருடைய மகிமையைக் கேள்; ஒரு கல்லும் பெண்ணாகியது பாததூளியின் ஸ்பரிசத்தால். அவர் பிரதாபத்தைக்கேள்; அவருடைய பாதுகையும் பதினான்குவருஷம் ராஜ்யமாண்டது. அவர் சக்தியைக் கேள்; சமுத்திரத்தையும் ஒரு வாய்க்காலைப் போல் அவர் வானரசேனைகளுடன் தாண்டினார். அவர் திறமையைக்கேள்; குரங்குகளையும் அவர் படை ஆட்களாகச் செய்துவிட்டார். அவருடைய வெற்றியைக் கேள்; இராவணனையும் சம்ஹாரம் செய்தார். அவரைத் தியானம்செய்து நாம் நற்கதி பெறுவோம். அவர் அருள் நமக்குக் கிடைக்கவேண்டும்.

(தொடரும்)



---

மநஸ்தே பாதாப்ஜே நிலஸது வசஸ் ஸ்தோத்ர பணிதௌ
கரௌ சாப்யர்சாயாம் ச்ருதிரபி கதாகர்ண நவிதௌ
தவ த்யாநே புத்திர் நயநயுகளம் மூர்த்திவிபவே
பரக்ரந்தான் கைர்வா பரமசிவ ஜாநே பரமத:

(சங்கராசார்யர் இயற்றிய சிவாநந்தலஹரீ.)

# திருசிய காவியப் பிரிவுகள்

வியாகரண சிரோமணி,

பிர்மஸ்ரீ M. S. சுப்ரமண்ய சர்மா அவர்கள்

வடமொழி ஆசிரியர், தருமபுரம்.

வடமொழியில் கேள்விக்குரிய காவ்யம், காட்சிக்குரிய காவ்யம் என்று காவ்யம் இருவகைப்படும். காட்சிக்குரிய காவ்யத்தைப் பொதுவாக நாடகமென்பர். காவ்யம் என்ற சொல், பின்னர் கேள்விக்குரிய காவ்யத்தையே குறிக்க வழங்கப்பட்டது. இங்குத் தெரிவிக்க இருப்பது காட்சிக்குரிய காவ்யமே. ஆகையால் அதன் வரலாற்றை ஆராய்வோம்.

காட்சிக்குரிய காவ்யம் என்றது திருசிய காவியத்தை திருசிய+காவியம் சேர்ந்து திருசிய காவியம் என்று ஆகிறது. திருசிய என்னும் சொல்லுக்குப் பார்க்கத்தகுந்த என்று பொருள். காவியம் என்ற சொல்லுக்குப் பொதுவாகப் பெருமகிழ்ச்சியைக் கொடுப்பது என்று பொருள். காவியம் என்ற சொல் யோகரூடியாகக் கருதப்படுகிறது. இச்சொல்லிற்கு வடமொழியில் விரிவான விளக்கம் கூறப்பட்டிருக்கிறது. முடிவாக திருசிய காவியம் என்ற சொல்லிற்குப் பார்ப்பதற்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுப்பது என்று அறியலாம்.

ஒரு கதையை எடுத்துக்கொண்டு அதில்வரும் பாத்திரங்களுக்கெல்லாம் நடிகர்களை அமைத்துப் பேச்சாலும் செயல்களாலும் அக்கதைப் பொருளைப் பலர்காண மேடையில் பார்ப்போர் கண்டு களிக்கும்படி நடித்துக் காட்டுவது திருசியம் (நாடகம்) என்று பெயர். இம்மாதிரியான வரலாறுகளைக் காலம் இடம் நடிப்பு இவைகளைத் தொகுத்துத் தெரிவிக்கின்ற நூல்களே திருசிய காவியங்கள் (நாடகங்கள்). அதை நாடகம் என்பர்.

திருசிய காவியத்தின் தோற்றம். இதற்கு ரூபகம் என்ற பெயரும் உண்டு. இதைப்பற்றித் தெரிவிக்கும் நூல்களில் பழமையானது பரதநாட்டியம், அல்லது நாட்டியவேதம். அல்லது நாட்டியசாத்திரம் என்ற நூலாகும். இம்மூன்று பெயர்களும் ஒரே நூலையே குறிப்பிடுகின்றன. இது பரதர்

என்ற முனிவரால் செய்யப்பட்டது. அதில் நாடகப் பிரிவுகளும் நாட்டியத்தினுடைய விரிவான விவரங்களும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. சுவை முதலியவைகளும் இருக்கின்றன. இந்நூல் கி. பி. மூன்ருவது நூற்ருண்டிற்கு முந்தியது.

மேலும் இதன் தோற்றத்தை வேதங்களிலிருந்து சொல்கிருர்கள். அதாவது ருக் வேதத்திலிருந்து உரையாடலும் சாம வேதத்திலிருந்து பாட்டையும், யஜுர் வேதத்திலிருந்து அபிநயத்தையும் அதர்வ வேதத்திலிருந்து சுவையையும் எடுத்து வேதங்களுடைய பொருளை அறிந்துகொள்ள முடியாதவர்களின் நலத்திற்காக, பிரும்மாவால் நாட்டியவேதம் என்ற பெயரில் செய்யப்பட்டது. பிறகு பரதமுனிவரிடம் கொடுத்து அவருடைய நூறு புதல்வர்களைக்கொண்டு நடிக்கும்படி ஏவினுர். அவர்கள் முதலில் பிரும்மாவின் முன்னிலையில் அமிர்தபந்தனம் என்ற வரலாற்றை நடித்துக் காட்டினுர்கள். பிறகு சிவபெருமான் முன்னிலையில் த்ருபுரதாகம் என்ற வரலாறும் விஷ்ணுவின் முன்னிலையில் லக்ஷ்மி ஸ்யம்வரம் என்ற வரலாறும் நடித்துக் காட்டப்பட்டன. பிறகு பரதமுனிவர் நாட்டிய சாத்திரம் என்ற முறையில் தொகுத்துப் பூலோக வாசிகளுக்கு அறிவித்ததாக வரலாறு உண்டு.

இருக்கு வேதத்தில் பத்தாவது மண்டலத்தில் பத்தாவது பாட்டிலிருக்கும் யம. யமீஸம்வாதம் பத்தாவது மண்டலம் 95 ஆவது பாட்டிலிருக்கும் உர்வசி புருரவஸம்வாதம் முதலியன திருசிய காவியங்களின் உற்பத்திக்குக் காரணம் என்று சிலர் சொல்லுகிருர்கள். மற்றும் சிலர் நாட்டியத்திலிருந்தும் பொம்மை யாட்டத்திலிருந்தும் நிழல் ஆட்டத்திலிருந்தும் வந்ததாகச் சொல்கிருர்கள்.

சிலர் கிரேக்க நாட்டிலிருந்து நம் நாட்டைப் படையெடுத்த அலெக்சாண்டர் என்பவரால் நம்முடைய நாட்டில் நாடகம் பரவச் செய்யப்பட்டது என்று சொல்கிருர்கள். அதற்குக் காரணம் இருதேசங்களில் உள்ள நாடகங்களுக்குள் இருக்கும் அதிகமான ஒற்றுமையே காரணம். நம் நாடகங்களில் யவநிகா என்ற சொல் திரையைக் குறிக்கின்றது. அப்பதம் யவன தேசத்திலிருந்துவந்த துணியைக் குறிக்கின்றது. யவன தேசத்திலிருந்து திரை வந்திருக்கவேண்டும். மேலும் அங்கப் பிரிவுகள் முதலான காரணங்களும் யவன தேசத்திலிருந்து (கிரேக்க நாட்டிலிருந்து) வந்ததாகச் சொல்கிருர்கள்.

மேல் குறிப்பிட்ட விஷயங்களை (Keith) என்ற ஆசிரியர் தக்க சான்றுகளுடன் சரியல்ல என்று கூறித் திருசிய காவியத்திற்குப் புராணங்களே உற்பத்தி ஸ்தானம் என்று கூறுகிறார். கி. மு. மூன்றும் நூற்றாண்டிற்கு முன்பே திருசிய காவியங்கள் இருந்ததாதல் வேண்டுமென்று அறியவருகின்றது. கி. மு. மூன்றாவது நான்காவது நூற்றாண்டிற்கு நடுவில் வசித்த இலக்கணப் பெரியார் பாணிநிமுனிவராலும் அம்முனியின் நூலுக்குப் பாடியம் எழுதிய பதஞ்சலி முனிவராலும் திருசிய காவிய வரலாறு குறிக்கப்படுகிறது இறுதியாக திருசிய காவியம் கி. மு. ஐந்தாவது நூற்றாண்டிற்குப் பிறகு இல்லை என்று சிலரும் கி. மு. மூன்றாவது நூற்றாண்டிற்கு முன்பே நிலவியிருக்க வேண்டுமென்று பலரும் கூறுகின்றனர்.

தென்மொழியிலும் கி. மு. ஐந்தாவது நூற்றாண்டிற்கு முன்பு இருந்த நூல்களில் நாடகத்தைப்பற்றிய செய்திகள் இல்லை. ஏழாவது நூற்றாண்டு முற்பகுதியில் வாழ்ந்த நாவுக்கரசர்,

"மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்"

என்று அருளிச்செய்தார். அவ்வாறே பத்தாம் நூற்றாண்டினரான நம்பியாண்டார் நம்பி.

"வெண்முத்த விடியல்சூழ் வீங்குபுனற்
காழியே ஒண்முத் தமிழ்பயந்தான் ஊர்"

என்று பாடியுள்ளார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் மாபெரும் கவி கம்பர்.

"முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக்கவி"
என்றார்.

இறுதியாகத் தென்மொழியிலும் முத்தமிழ் (இயல், இசை, நாடகம்) என்ற பிரிவு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிறகே ஏற்பட்டதாக அறிய வருகிறது.

திருசிய காவியங்கள் எல்லாம் நாட்டியத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். ஆதலால் நாட்டியத்தின் உருவத்தையும் பின்பு ஆராய்வோம். (தொடரும்)

இலக்கியம்

# அரிது எது? (உ)

வித்துவான்,

**ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

கட்டளை விசாரணை, சீகாழி தேவஸ்தானம்.

இன்னும் இப்புலவர் பெருமானுக்குச் சந்தேகங்கள் விட்ட பாடில்லை. கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகின்றார். தற்காலப் பயன் இல்லாக் கேள்விகளைப்போலவா? இல்லை. இவர் கேட்கும் கேள்விகள் எல்லாம் பின்வரும் உலகமக்கள் பயன்பெறத்தக்கன அல்லவா?

நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளையே சந்தித்து, அவர் சம்பந்தப்பட்ட ஐயத்தைப் போக்கிக்கொண்டோம் என்று ஒருவகையில் மனமகிழ்ச்சிகொண்டு, அவ்வெண்ணத் திலேயே ஆற்றங்கரையினிலே அழகாக நடந்து சென்றார் அப்புலவர் தலைவர். இருப்பினும் இன்னும் ஏதோ ஒன்று, இவர் மனத்தை உறுத்திக்கொண்டிருந்தது. கேட்டுவிடலாமே என்று சுந்தரர் சென்ற வழியைத் திரும்பிப்பார்த்தார். சுந்தரரைக்காணவில்லை. ஆயினும், தன்னைவிட ஆண்டும், அறிவு நிலையும், அருளுமுடைய ஒரு பெரியவரைப் பல்லாண்டு வாழ்ந்து பதங்கடந்த நிலையில் பல நிகழ்ச்சிகளும் தெரிந்த ஒருவரைச் சந்தித்துக் கேட்போம் என்று எண்ணிய எண்ணத்தில், சுந்தரரைக் காணவில்லை என்ற ஏமாற்றம் மறைந்தது.

தாம் எண்ணிய எண்ணத்தின்படி (ஒரு வயோதிகர்) நரை திரை மூப்புடன் பழங்காலப் பேர்வழி ஒருவர் தம் எதிர்ப் பட்டார். இதுதான் தாமதம் என்று புலவர் சிவப்பிரகாச சுவாமிகள் பெரியவரின் மூச்சுத் திணறும்படி கேள்விகளைக் கேட்கத் தொடங்கிவிட்டார். பெரியவரது பதிலைக்கூட எதிர் பார்க்காமல் கேட்கிறார் பாருங்கள்.

பல நிலைகளில் பலரிடமும் பலவகைப் பொருள்களைப் பெற்றதைப்போல, நீரே முன்னொருசமயம் யாராலும் விரும்பப் படும் அழகுடன் எதனையும் இல்லை என்னாது அளித்து மகிழும்

இயற்பகையாரிடம் அவர் மனைவியைத் தரச்செய்து, அதனால் அவர் அளவிலாத ஆனந்தக் கடலில் மூழ்கிய செயல் அரிதா? அல்லது தன் மகளை ஏயர்கோன்கலிக்காமருக்கு மணம் செய்து கொடுக்கும் சமயம் அம்மணமகளின் அழகிய கூந்தலை அரிந்து பஞ்சவடிக்கு (பூணூலுக்கு) ஆகும் என்ற உமதுவிருப்பத்திற்கு இணங்க, அவ்வாறே தம் மகளின் அழகிய கூந்தலை அரிந்து உமக்குக் கொடுத்த மானக்கஞ்சாறரது செயல் அரிதா? அல்லது உமது கண்களில் ஒரு கண் இரத்தம் சிந்தும்போது, அதைக் கண்டு மனம் கலங்கி, அதற்குப் பதிலாகத் தன் கண்களில் ஒன்றைப் பெயர்த்து எடுத்துச் சாத்தி மகிழும் தருவாயில், உமது மற்றொரு கண்ணிலும் இரத்தம் கசிவதைக் கண்டு 'என்னிடம் இன்னும் ஒரு கண் உண்டு' என்று உளம்மகிழ்ந்து அதையும் பெயர்த்து எடுக்க முற்பட்டவராகிய வில் அம்பு படைத்த கண்ணப்பரது செயல் அரிதா? அல்லது, சூழ்ச்சியால் கொல்வதற்கு உண்மைத் தவத்தோன்போல் வேடம்பூண்ட முத்திநாதன் என்ற வஞ்சகப் பகைவன் சிவன் அருளிய ஆகமம் எங்கும் இல்லாததொன்று உபதேசிக்கவந்தேன் என்று கூறி, தான் மறைத்துவைத்திருந்த கொலைக் கருவியால் கொலைசெய்த நேரத்தில் மனம் பொறாத தத்தன் என்ற வாயில்காப்பான் அவ்வஞ்சகப் பகைவனைப் பதிலுக்குக் கொல்லப்புகும் போதும் ' தத்தனே ! இவர் நம்மவர். கொல்லாதே ! இடையூறு ஒன்றும் இன்றி, ஊர்ப்புறத்தே செலுத்திவர் ' என்று ஆணைதந்து, அம்மாபாதகனையும் விடுத்து மகிழ்ந்த அரசர் எறும் மெய்ப் பொருள் நாயனாரின் செயல் அரிதா? அல்லது போர்க்களத்திலே பொறாமை எண்ணத்துடன் தன்னொடு வாட்போர் செய்த நய வஞ்சகன் ஒருவன் ஏமாற்றக் கருதி இடையில் போலியாகத் தான் தரித்திருந்த நீற்று நெற்றியைக் காட்டி, அதனால் உம்மைப் போல நினைத்து அஞ்சிநிற்கும் வேளையில் அப்பகைவனுக்குத் தன்னைக் கொல்லும் வாய்ப்பைக் கொடுத்த குறைவில்லாத அன்பினனாகிய ஏனாதியின் செயல் அரிதா? அல்லது, உமது விருப்பப்படி தம் சின்னஞ்சிறு பிள்ளையை அரிந்து சமைத்து உமக்குக்கொடுத்துப் பெருந்தொண்டுசெய்து ஆனந்தம்கொண்ட சிறுத்தொண்டர் செயல் அரிதா? அல்லது திருவாரூர் ஆலயத்தில் புஷ்பமண்டபத்தின் புறத்தே கிடந்த ஒரு பூவை எடுத்து மோந்த கழற்சிங்கரது மனைவியின் மூக்கை அரிந்த நிறைதவம் செய்த செருத்துணையின் செயல் அரிதா? அல்லது மலரை

எடுத்து மோந்த குற்றத்திற்காக மூக்கை அரிந்தால் மட்டும் குற்றத்திற்கு ஈடாகாது, முதலில் எடுத்தது கையே என்று மூக்கறுபட்ட தம் மனைவியின் கையைத் தம் வாள்கொண்டு வெட்டிய அரசராகிய கழற்சிங்கரது செயல் அரிதா ? அல்லது உமக்குச்சார்த்தச் சந்தனக்கட்டையும் கிடைக்கப்பெருமையால் மனம் வருந்தி, தம் கையைக்கொண்டு சந்தனம் உண்டாக்கக் கருதித் தம் முன்கை தேய்ந்து பின் நின் அருள்பெற்ற மும்மை யால் உலகாண்ட மூர்த்தி நாயனாரின் செயல் அரிதா ? அல்லது மன்றுள் நடனமிடும் நடராஜப் பெருமானிடம் பக்திகொண்ட திருநீலகண்டர், வேறு ஒருத்தியிடம் நட்புக்கொண்டு வந்த தாக எண்ணி 'தம்மைத் தீண்டவேண்டாம் எம்மைத் தீண்டு வீராகில் திருநீலகண்டத்தின்மேல் ஆணை' என்று சொல்லிய தன் மனைவியின் கூற்றுப்படி வேறு எம் மாதரையும் தம்மனத் தினும் தீண்டாது, உண்மை உணர இளமைமுதல் முதுமை வரையும் ஓர் இல்லத்திலேயே இருவரும் வாழ்க்கை நடத்தியும் ஒரு பூஞ்சேக்கையில் தீண்டாது துயின்றும் இச்சிறப்பை உலகவர் உணர உம்மால் கன்னிப் பெண்ணாகவும் காளையாகவும் ஆகிய குறையாத அன்பு மனம்கொண்ட திருநீலகண்டரின் செயல் அரிதா? என்று பழமலைநாதர் என்ற பழங்காலக் கிழவரின் முகத்தைப்பார்த்து நின்றூர் பதில்வேண்டும் என்று.

தத்தம் முடிபைப் பாவின் முன்னே பின்னே அமைத்துக் கூறுவது புலவர் மரபு. இப்புலவரது முந்திய முடிபை முதல் பாவில் பின்னே கண்டோம். இப்பாவில் இவர் முடிபை முன்னே அமைத்துக் கூறுவதைக் காண்கிறோம். இவைகளுள் எல்லையிலாப் புகழ்கொண்ட தில்லைத் திருநீலகண்டரின் செயல்தான் அரிது என்ற முடிபு புலவரது மாநில மக்களின் மனம் மகிழ்வுற மாண்பார் மனைவியாள் மனம்மாறச் சத்திய நெறியின்பின் சென்று இளமை முதுமை இருபொழுதும் மனிதர்களால் வாழமுடியாத ஓர் உன்னதநிலையை உலகோர்க்கு வாழ்ந்து காட்டிய தீரச்செயல் திருநீலகண்டரின் செயல்தான் அரிது என்பதைக் காட்டும் குறிப்பாகத் தம் முடிபைப் பாவின் முதலில் வைத்து அமைத்திருக்கின்றூர்.

திருவெங்கை என்னும் பதியில் வாழும் பெரியவரே! சுந்தரருக்குப் பன்னீராயிரம் பசும் பொன்னைக் கொடுத்த பரமன் பழமலைநாதன் எனும் பெயரைக்கொண்ட பண்புடை

யாளனே! உமது பண்புதான் என்ன? எந்தவியதியில் அவருக்கு அப்பொன்னைக் கொடுத்தீர்? எப்படிக் கொடுத்தீர்? சரி, போனல் போகட்டும். நான் உம்மிடம் கேட்ட மேற்கண்ட கேள்விகளுக்குப் பதிலை (முடிபை)ச் சொல்லும். இவர்களுள் செயற்கரிய செய்கை செய்தவர் யார் என்பதை, செய்கையில் அரிது எது என்பதை உம்மால்தான் சொல்லமுடியும். இவைகளுக்கெல்லாம் காரணம் நீர்தானே? அருந்தவத்தைச் செய்தவர்கள் எல்லாம் உம்மை, 'பராபர! மூன்று கண்ணையுடையவனே! தலைவனே! சங்கரனே! சிவனே! கருணாகரனே! திருக்கயிலையின் தலைவனே!' என்று உம்மை வணங்கித் துதிக்கின்றார்கள். கைலாசபர்வதராஜனே! உமது விசால மனப்பான்மைகொண்டு இச் செயல்களுள் அரிது எது? என்று சொல்லும்.' என்று கூறி முடித்திடுகின்றார் புலவர் சிவப்பிரகாசர்.

புலவரது உரிமைகொண்ட முழுப்பாடலையும் உங்கள்முன் வைத்திடுகின்றேன். மனத்தேரில் ஏற்றி வைத்து நினைந்து மகிழுங்கள் :—

"மதிநுதற் பவள வாய்க்கருந் தடங்கட்
குவிமுலைப் பசும்பொற் கொடிதனை யமையாக்
காதன்மீ தூரக் கலவிசெய் திடுவான்
புகும்பொழு தவளொடு பொருமையுட் கிடப்பப்
படர்முதிர் வேனிற் பகற்கொடும் பாலை
நிலத்துநீர் வேட்டோ னீரரி தினிற்பெற்
றுண்புழி யுண்ணு தொல்லையிற் றடுக்குஞ்
செயலென வெமைநீ தீண்டே லென்று
நின்மே லாணை நிகழ்த்திட நீங்கிப்
புணரியுண் டெழுந்த புயனிகர் வளர்குழ
லஃதுண முகில்போன் றழகுறுங் காறுந்
தீண்டா தொருபூஞ் சேக்கையிற் றுயின்று
மாறு வன்பு வளர்மனத் தவனோ?
மிளிர்தரு தூர்த்த வேடமா தவனாய்
நீமுன் கற்பு நீங்கா மாதைத்
தருகெனக் கொடுத்துத் தன்பெருங் கிளைஞர்
மானமீக் கூர வந்தனர் சூழ
வொன்னலர் போல வுடன்றவர்ப் படுத்துக்
கரையில்பே ருவகைக் கடல்படிந் தவனோ?

திருமணக் கோலஞ் செய்துவீற் றிருந்த
வருமகள் கூந்த லையநின் னுருவங்
கரந்துசென் றிரப்பக் களித்தக மணப்பூம்
பந்தரிற் கிளைஞர் பலருங் காண
வரிந்து கொடுத்த வடியவன் றானே ?
நின்னெடு விழிசெந் நீர்கொளக் கலங்கித்
தன்னொரு விழிவெஞ் சுரத்தினை விடந்து
சாத்தி மற்றைத் தடங்கணவ் வகைபெற
வின்னமுண் டொருக ணென்றுளங் களித்து
மற்றதுங் களைவான் வாளிநட் டவனே ?
மருவலன் புணர்ப்பான் மாய்ப்பமெய்த் தவன்போல்
வந்தனன் படையான் மார்பிடைத் தாக்கக்
கண்டுட் கடைத்தலைக் காவலன் ஒருவன்
வெகுண்டவற் றுணிப்பான் விரைந்துசென் றெய்த
வாணையாற் றடுத்த வரச ரேறே ?
பொருகளத் தொட்டலன் புனைநுத னீறு
கண்டுனைப் போலக் கருதிமற் றவனைத்
தன்படை சாய்த்தவன் றன்படை மார்பிற்
றுக்கக் கொடுத்த தளர்விலன் பினனே ?
வருஞ்சிறு மகனை யரிந்துநிற் கட்டுப்
படைத்துக் களிகூர் பரிவுடை யவனே ?
நின்சின கரத்து நீக்குபூ மோந்த
மாதுமூக் கரிந்த மலிபெருந் தவனே ?
துணுக்கென வவள்கை துணித்தகொற் றவனே ?
சந்தன மாகச் சாத்தநின் றனக்கு
முன்கை தேய்த்து முகமலர்ந் தவனே ?
செயற்கருஞ் செய்கை செய்தவன் யார்சொல் ?
பகருதி வெங்கைப் பழமலை நாத !
பராபர ! முக்கட் பகவ!சங் கர! சிவ!
கருணை கர!திருக் கயிலை நாயக !
என றருந் தவர்க ளேத்தும்
பின்றிகழ் சடிலப் பெருந்தகை யோனே !'

இவ்வளவு அருஞ்செயல்களின் தொகுப்பைக்கொண்ட சிறந்த 'பாவை' உங்கள் நினைவுக்குக் கொண்டுவந்த என் செயலா அரிது ? இல்லை ! இல்லை ! எல்லாம் இறைவன் செயல்: புலவர் கூறும் செயற்கருஞ் செய்கைகளுள் அரிது எது ?

அறிவியல்

# பெரியபுராணமும் பொதுவுடைமையும்

வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

தற்காலத்தில் எங்கும் கேட்பது எது? ஒரே முழக்கம்; ஒரே பேரோசை. என்ன ஓசை? பொதுவுடைமை பொது வுடைமை என்பதுதானே காதில் விழுகிறது?

இவ்வோசையைக் கேட்போர் புத்துணர்ச்சி பெற்றுக் கிறு கிறுத்து இதுவரை யாரும் காணாதது — அரசியலில் இல்லாதது — எவரும் சொல்லாதது என்று பெரும் பொருள் கண்டெடுத்தவர் போலப் பேரானந்தம் அடைந்து என்னென்னவோ சொல்லிப் புகழ்கின்றனர்.

பொதுவுடைமை என்பது நம் முன்னோர்கள் கண்டது. முன்பே உலகியலும் அரசியலும் பொதுவுடைமைப் பாதையில் சென்றன என்பவற்றைக் கேட்டால் மக்கள் இழந்த தனம் பெற்றவர் போலப் பெருமகிழ்ச்சிதானே அடைவர்!

உதாரணமாக :—

குளத்தில் நீர் நிறைந்திருக்கின்றது. அந்நீர் யாருக்குச் சொந்தம்? ஊரில் உள்ளவர்க்குச் சொந்தம். உலகில் உள்ள அனைத்துயிர்க்கும் சொந்தம். ஒருவருக்கு ஏகபோக உரிமை கிடையாது. இவ்விதம் சொந்தமாகும் நீரையுடைய அக்குளம் தானே பொதுவுடைமைப் பொருளாகும்? தன்னிடமுள்ள நீரை அனைத்துயிர்க்கும் அளிப்பதுதானே பொதுநலப் பணி ஆகும்?

பொதுவுடைமைப் பொருளாயிருந்து பொதுநலப் பணி செய்துவரும் குளத்தின் சிறப்பைக் கண்டார் வடதிசைக்கண் தோன்றிய ஒரு பெரியார். இவர் தோன்றிய காலம் பன்னிரண் டாம் நூற்றாண்டு. எத்தனையோ பல மக்கள் அங்கங்கும் தோன்றியிருந்தனர். இவர் எல்லோரும் இன்புற்று இருப் பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியாத பண்பாடுடையவர்.

இப்பண்பாட்டையே இலட்சியப்போக்காகக்கொண்ட மனப் பான்மையால் மக்கள் குறுகிய மனப்பான்மையில் தனித்த முறையில் வாழ்வதை வெறுத்தவர். மக்கள் பொதுவுடைமை என்ற திருப்பாதையிலே செல்லவேண்டும் என்று அவர் அன்றே கண்டார். அவர் கற்ற திருக்குறளும் இந்நெறியில் செல்ல ஊக்குவித்தது. பொதுநலப் பணி புரியும் குளத்துநீரை விடச் சிறந்த பொருள் கல்வி. "கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்று மொழிந்தார் நம் பாட்டியார்.

குளம் தரும் நீர் பொதுவுடைமையாய் இருப்பதுபோல கல்வி தரும் நூல்களும் பொதுவுடைமையாக இருக்கவேண் டாமா என்று எண்ணினர். அன்று மக்கள் சிந்தாமணிபோன்ற பல நூல்களைக் கற்றுத் தீய வழியிற் செல்வதைக் கண்டார். அரசன் அநபாயனும் அந்நெறியிலே சென்றான் என்றால் மக்கள் சென்றதைச் சொல்லவா வேண்டும்? மிகவும் வருந்தினர்; வாடினர்.

சத்தியம், தர்மம், அன்பு, பரோபகாரம், பரந்தநோக்கம் முதலிய எல்லா நற்குணங்களும் என்றும் நின்று மக்கள் உள்ளத்தில் நிலவவேண்டுமானல் உண்மையான பொதுநலப் பற்றை உணர்த்தும் ஒரு ஞான நூல் அவசியம் என்று உணர்ந்தார். மனித சமுதாயத்திற்கு என மூலபண்டாரமாக—ஞான பொக்கிஷமாக மணிவாசகப்பெருமான் உருவாக்கித்தந்த திருவாசகத்தில் தென்னாட்டில் வாழும் சிவனே எந்நாட்ட வர்க்கும் இறைவர், என்ற பொதுவுடைமை குறிக்கும் ஞானச் சொற்றொடர்கள் இவர் நினைவிற்கு வந்தது. எந்நாட்டில் வாழ் பவர்களுக்கும் கடவுள் ஒருவரே என்பதும், அவ்வொருவருக்குத் தொண்டு செய்பவர் எந்நாட்டினராயினும் அனைவரும் தொண் டரே என்பதையும் அறிவால் ஆராய்ந்து அறிந்தார்.

பொது உண்மைகள் இலை மறை காய்போல நூல்களில் மறைந்துகிடக்கின்றன. அத்தகைய உண்மைகளை மனித சமுதாயத்திற்கே உரிமையாக்கவேண்டும்; பொதுவுடைமை ஆக்கவேண்டும்; கலங்கிய உள்ளங்களுக்குத் தெளிவுதர வேண்டும் என்ற அலைகள் அவர் உள்ளத்தில் மோதின. மோதின அலைகளால் இத்தகைய வெளிப்படையான நூலை உருவாக்க அரசன் அநபாயனிடம் அணுகினர்.

2 44

அரசனை அண்மிச் சொன்னதாவது :—

மன்பதை காக்கும் மன்னவர் ஏறே! கதிரவன் காலையில் தோன்றுகிறான். இருள் அழிகிறது. ஒரு உயிர்க்கா? ஒரு கூட்டத்திற்கா? அல்லது தன்னை வழிபடும் மக்களுக்கா தன் கதிர்களைப் பரப்புகிறான்? பொதுநலப் பணி புரியத்தானே தோன்றுகிறான்? குளத்தில் உள்ள நீர் யாவர்க்கும் பயன்படு வதைத் தாங்கள் அறிவீர்கள். இருள் அழிவதுபோலத் தங்கள் பகைவர்கள் வலிமையழிந்து ஒழியத் தாங்களும் புகழ்க் கிரணங் களைப் பரப்பி ஆட்சியை நன்கு நடத்துகிறீர்கள். ஏன்? தங்கள் அரண்மனையைக் கட்ட முயலாது அனைவரும் சென்று வணங்கும் ஆண்டவன் ஆலயத்தைக் கருங்கல்லால் கட்டி என்றும் அழியாத முறையில் அமைப்பது தங்கள் நலத்திற்கா? அல்லது பொது நலத்திற்கா? அதுபோலவே தங்கள் காலத்திலே தந்நலமற்ற பொதுப்பணியைப் போதிக்கும் ஒரு சிறந்த நூல் இயற்றியருள வேண்டும். அதுவே என் விருப்பம் என வேண்டிக்கொண்டார்.

உண்மைதெரிந்த அநபாயன், அன்பும் அறனும், அமைச்சர் பெருமையும் பெற்ற தாங்களே அத்தகைய உயிருக்கு உறுதி பயக்கும் பொதுவுடைமை நூலை உருவாக்கும் உத்தமர் ஆவீர் என்று கூறிய அமுத மொழிகளால் நூல் இயற்றும் ஊக்கத் திற்கு ஆக்கம் தந்தான்.

தூண்டிய சுடர் மேலும் சுடர்விட்டெரிவதுபோல நூலை இயற்றி விரைவில் முடிக்க அவர் எண்ணம் தூண்டியது. தூண்டிய கருத்தில் விரிந்த விரிவே பெரியபுராணமாகும். இந் நூல் மக்களுக்குப் பணிபுரியத் தம்மை அர்ப்பணித்துக் கொண் டவர்களின் வரலாற்றை வகுத்துக் காட்டுகின்றது. இவர்கள் பல்வேறு இடங்களில் தோன்றியவர்; பல்வேறு குலத்தினர்; பல்வேறு வகையில் தொண்டு செய்தவர்கள்; பல்வேறு நெறியில் வாழ்ந்து காட்டியவர்கள் அனைவரும் கடவுளிடம் அன்பு செலுத்தும் நெறியில், அறிவில் ஒன்றுபட்டவர் என்பதைக் கண்டார். இதுவே இவருக்குப் பெருமகிழ்ச்சியையுண்டாக் கியது. இவர்கள் வெவ்வேறு நாடு, மொழி, குலம், தொண்டு செய்து வாழ்ந்தவராயினும் திருத்தொண்டர் என்ற ஒரு பெய ரால் அனைவரையும் ஒன்றுபடுத்தினார். இவர்கள் செய்த தந்நலமற்ற பொதுப்பணிகளை எண்ணி எண்ணி உணர்ந்தார்,

உணர்ந்த கருத்து, பொதுநலமான வரலாருக இருந்ததால் புராணம் என்று பெயர் சூட்டினூர்.

செங்கதிரவன் ஒளி உலக இருட்டை அழிப்பது போல இத்திருத்தொண்டர் புராணமும் உலக மக்களின் மனதில் உள்ள அறியாமையாகிய இருட்டைப் போக்குகின்ற ஞான சூரியனுக அமைந்துள்ளதென்று மக்களும், மன்னனும் ஒருமுக மாகப் பாராட்டினர்.

## பொதுவுடைமைக்கு வாழ்ந்த திலகவதியார்

தனக்குப் பெற்ருேரால் நிச்சயித்த கணவரும் போரிற் சென்று இறந்துவிட்டார். தாய்தந்தையும் இறந்துவிட்டார்கள். நிச்சயித்த கணவர் இறந்துவிட்டார் என்ற சேதி காதில் விழுந்த வுடன் தமிழரின் பண்பாட்டிற்கேற்பத் தன்னுயிரை மாய்த்துக் கொள்ள விரும்பினூர் திலகவதியார். மாய்த்துக்கொள்ளும் முடிவுக்கு வந்துவிடுகிருர். இந்த முடிவைக் கண்ட தம்பியின் உள்ளம் பதறுகிறது. தாய் தந்தை எல்லாம் தன் தமக்கை தானே என்று எண்ணிய அவர் உள்ளம் பதறத்தானேசெய்யும்? தம்பியின் அபய ஒலி மறுக்கமுடியவில்லை. சிந்தனைப் போராட் டத்தில் சிக்கினூர் தமக்கையார். அது மற்ருெரு முடிவுக்கு வழி காட்டிற்று. இன்பமாக வாழும் தன்னலத்தைத் துறந்தார்.

நிச்சயிக்கப்பட்ட கணவனுக்கு அர்ப்பணித்த உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் ஆண்டவனுல் படைக்கப் பட்ட அனைத்துயிருக்குச் சேவை செய்ய வேண்டி ஒருயிர் என்று உயிர் வாழ எண்ணினூர். அனைவரையும் மனம், மொழி, மெய்களால் தவத்தொண்டு செய்து செந்நெறியில் செலுத்த, உலகம் உள்ளளவும் இறுமாந்திருக்கும் பெருவாழ்வை அடையச் செய்ய அம்மங்கையின் உள்ளம் விழைந்தது. இந்த எண்ணம் தான் களங்கமற்ற தூய்மையான, பொதுநலப்பணி. பொது வுடைமை. இதைவிடச்சிறந்த ஒரு பொதுநலப்பணி இருக்குமா? சிந்தியுங்கள்!

## தம்பியும் தமக்கை வழியில் சென்ருர்

ஒரு சாதாரணபொருளைக் கண்டால் அதைக்கண்டவர்களே அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் தானே ஏற்படுகிறது!

மிகவும் உழைத்து வருந்தி அதனால் கிடைத்தற்கருமையான பொருளைக் கண்டால் அதைத் தானே அனுபவிக்கவேண்டும் நுகரவேண்டும் என்ற எண்ணம் தானே உண்டாகும். ஆனால் அப்பருக்கு அந்த எண்ணம் உண்டாகவில்லை. கைலை காண வேண்டும் என்று ஆசைகொண்டார்; நடந்தார். கால்கள் தேய்ந்தன. அத்துடன் அவர் முயற்சி நிற்கவில்லை. உருண்டு உருண்டு சென்றார். எப்படியாகிலும் கைலை காணவேண்டும் என்ற எண்ணந்தான். இவருடைய விடாமுயற்சியைக்கண்ட கண்ணுதற்பெருமான் முனிவர் வேடந்தாங்கி அப்பர் முன் தோன்றி, அப்பரே! கைலையைக் காணுவது எளிதா? அம் முயற்சியை விட்டுவிடு என்றார். அதற்கும் மனவுறுதி தளராது கொண்ட முயற்சியை அடைந்தே தீர்வேன் என்றார்.

இவரது தளராத விடாமுயற்சியைக் கண்ட விமலன் கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் காட்டியருளினார். தான் கண்ட ஒப்புயர்வற்ற காட்சியைக் கண்டுகளித்தார். திருப்தி அடைந்தாரா? இல்லை! ஏனைய எல்லா உயிர்களும் தான் கண்டு களித்ததுபோலக் காணவேண்டும் என்று கருதினார். இந்த எண்ணம் எதைத் தெரிவிக்கின்றது? சிறிது சிந்தியுங்கள். கருணையுள்ளத்தை—பரந்த உள்ளத்தை—தான் கண்ட கைலைக் காட்சியை அனைவரும் காணவேண்டும் என்ற பொதுவுடைமையை அல்லவா நமக்குத்தெரிவிக்கிறது? இன்று மூலைக்குமூலை கூக்குரலிடும் பொதுவுடைமை, அன்றே அப்பர் உள்ளத்தில் அரும்பியது வித்திடப் பெற்றதென்றே சொல்லிவிடலாம். இந்தப் பொதுவுடைமை சமயத்தின் சிகரமாகவும், பெரிய புராணத்தின் ஜீவநாடியாகவும் விளங்குகிறது.

## பொதுவுடைமையைப் போற்றிய புனிதவதியார்

ஒப்பற்ற இரண்டு கனிகள் கணவனால் அனுப்பப்பட்டதைத் தம்பதிகள் இரண்டுபேரும் உண்ணவேண்டும் என்று விரும்பாமல் தன்னை வந்து யாசித்த ஒரு சந்நியாசிக்கு அவற்றில் ஒன்றை அவர் உண்ணும்படி உரிமையாக்கினாள் என்றால் இது என்ன?

தான் சுவைபட உண்ணவேண்டிய பழத்தை ஒரு சந்நியாசிக்குக் கொடுத்தனள் என்றால் இது பொதுவுடைமைதானே!

# தமிழர் திருமண முறைகள்

**வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள்**
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

முத்துமாலை தொங்கவிட்டதுபோன்ற முல்லைமலர்ப்பந்தல். விதவிதமான விதானங்களால் பந்தல்முகடு பாங்குறுத்தப் பெற்றிருக்கிறது. மணிமாலைகள் தொங்கவிட்டு மலர்பரப்பிய மண மண்டபம். பவளக்குலை தள்ளிய பாக்குமரங்களும் மரகதங் காய்த்த வாழைகளும் மருங்குகளில் நிறுத்தப்பெற்றுள்ளன. அங்கே ஒரு மங்கையர் திலகம். மதிபோன்ற அவளது முகத்தைப்பார்க்கத் துடிக்கிறான் அந்தமணமகன். அருகிலுள்ளோரது கிண்டலுக்கும் கேலிக்கும் பயந்து அவளது முகத்தைப் பார்க்கிறான் அவன். அவளும் தோழியர்களின் துடுக்குப் பேச்சிற்குப் பயந்து ஓரக்கண்களால் அவன் முகத்தை ஒரே ஒரு முறை பார்க்கிறாள். இந்நிகழ்ச்சியைக் குமரகுருபரர், தெய்வயானைத் திருமணத்தில் நிகழ்ந்த செயலாக,

"மடப் பிடியை வான வில்லைக்
குழைக்கும் தடக்கைத் திருத்தாதை நீரொடு
கொடுப்பக் குடங்கை யேற்றுக்
கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பஅக்
கொம்புமின் கொடியி னெல்கி
இழைக்கும் பசும்பொன் தசும்புஎன அசும்புபொன
இளமுலை முகங்கோட்டி நின்று
எய்யாமை நோக்கும் படைக்கண் கடைக்கண்நோக்கு
இன்னமுத மூற்ற இன்பம்
தழைக்கும் பெருங்காதல் வெள்ளம் திளைத்தவன்."

என்று கூறியருளுவர்.

திருமணம் வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்ச்சி மணமானவர்களுக்கு. வாழ்விலே வரும் அந்தத் திருநாளைப் பொன்னுள் என்று புதுமெருகேற்றி அழைக்கிறோம்; ஆனந்தப் படுகிறோம். இந்த மணமுறை தமிழர் வாழ்வில் எவ்வாறு மேற்கொள்ளப்பெற்று வந்துள்ளது என்பதைக் காண்போம்.

ஆடவரும் பெண்டிரும் பலரறியக் கூடுதலைத் 'திருமணம்' என்ற சொல்லால் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. அருள், ஆண்மை; உயர்குடிப் பண்பு, உருவம்; இவற்றால் ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் கூடி அறம், பொருள், இன்பங்களை இப்பிறவியில் பயனளிக்கும் வண்ணம் செயலாற்றத் தொடங்கும் தலைநாள் இது. அன்பு அவ்வாழ்வின் பண்பு; அறம் அவ்வாழ்வின் பயன். இத்தகைய இன்ப இணைப்பைத் திருமணம், தலைநாள், வதுவை நன்மணம், வதுவை விழவு, வரைவு, மன்றல் முதலிய பல சொற்களால் இலக்கியம் கூறியுள்ளது. மணமக்கள் அன்றிரவு கூடும் கூட்டத்தை 'நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சி' என்றும் அன்றைய இரவைத் தலைநாள் இரவு, உடன்புணர்கங்குல் என்பன முதலிய சொற்களாலும் குறிப்பிடும். கண்ணும் கருத்தும் களவில் கலந்த காதலரும் இத்திருமணம் செய்தற்குரியர். இது களவின் வழிவந்த கற்பென்றும், களவு வழிவகையின்றிக் கூடும் கூட்டம் என்றும் இருவகையாக வகுக்கப்பெற்றுள்ளது. திருமணம் செய்த பிறகுதான் கற்பியல்வாழ்வு காதலர்களுக்குத் தொடங்குகிறது. மனதை ஒருவழியில் நிறுத்தல் நிறை என்றும் இல்லில் விருந்து நல்லறம் செய்தலைக் கற்பு என்றும் கூறல் மரபு.

## திருமணம் சொற்பொருள்

திருமணத்தைக் குறிக்கும் ஏனைய மொழிச் சொற்களில் இத்தகைய பொருட் சிறப்பில்லை. கோமகன் அவன். கோமகள் அந்தக் கொழுங்கொடி. வானோங்கிய மலை. வளமான சோலை, வற்றாநதி இவை அமைந்த குறிஞ்சி நிலம். சந்தனமும், சண்பகமும், கோங்கும், வேங்கையும், தெங்கும், திம்பலாவும் செறிந்த ஒரு சூழலில் மல்லிகையும் முல்லையும் மலர்பூத்து இங்கும் அங்கும் சென்று பூப்பந்தலிட்டுப் பொழிலிடத்தைப் பொலிவு செய்கிறது. தனிமகன் வழங்காத அந்தப் பனிமலர்ச் சோலையில் மணமார்ந்த சூழலில் ஆண் பெண்களின் காதல் வாழ்வைத் தொடங்குவர் கவிஞர். கோவலன் பாடிய கானல் வரிப் பாடலில்.

"பொழில் தரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே எனை இடர் செய்தவையே"

என்பதும் ஒன்று.

அவனை வருத்திய அந்தப் பொய்யணங்கு மணம்விரிந்த மலர்ச்சோலையில் காட்சி தருகிருள். 'மணம் வீசும் மணற்பரப்பு மதிமுக மங்கைநல்லாள்; மயக்கும் விழி, மொழி; எழுதற்கரிய இடை இவை இடர்செய்தனவாம் அந்த எழிலரசனை. வளை வளரும் துறையும் மணம்விரியும் பொழிலும், தளையவிழ் நறுமலரும், தனியவள் திரிதரும் இடமும் மீண்டும் மீண்டும் அவன் நினைவுச் சூழலினிடையிடையே தோன்றி மறைவன. இயற்கை மணமும் இவர்களது வாழ்வை இன்னும் மணக்கச் செய்கிறது. பூங்கொடிசுற்றிய பொதும்பர்போல மணமக்கள் இருக்கும் மணவறையை இன்றும் நாம் அலங்கரிக்கிருேம். அங்கிருந்து தொடங்கும் அந்த வாழ்வை மணவாழ்வென்று கூறுவதில் தவறில்லை. அழகு தரும் அடைமொழி ஒன்று அம்மணத்தைச் சிறப்பித்தற்குக் கூட்டப்பெற்றது. இதற்கு எடுத்துக்காட்டுக்களாக உள்ளவை :-

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர் என்ற புலவர் அகநானூற்றில்

'காலைப்போதில் பாறையில் உதிர்ந்து கிடக்கும் பழமலரிதழ்களும் மரங்களில் பூத்துப் புதுமணங்கமழும் புதுமலரிதழ்களும் மணவீடு கமழ்வதுபோல் கமழ்கின்றன' என்று கூறி மலர்ச்சோலையை மணமனைக்கு உவமையாக்குவர்.

> " பசுநனை நறுவீப் பருஉப்பரல் உறைப்ப
> மணமனை கமழும் கானம் "

பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனர், மலைபடு கடாம் என்ற நூலில்

> " மண இல் கமழும் மாமலைச்சாரல் "

என்பர்.

மணம் என்ற சொல்லுக்குக் கூடுதல் என்றும் பொருள் கூறலாம். தலைவனும் தலைவியும் மனம் ஒத்துக் கூடுதல் என்ற காரணத்தால் இப்பொருள்பட இச்சொல் வழங்கியதாகக் கருதற்கிடம் உண்டு.

> " மணத்தற் கரிய பணைப் பெருந்தோளே " குறுந் 100

'புலம்பணிந்தன்று அவர் மணந்ததோளே' குறுந் 50

'நல்தோள் மணந்த ஞான்றை' குறுந் 306

'தொல்லைத் திங்கள் நெடுவெண்ணிலவின்
மணந்தனமன் மாணலமெய்தி'

என்பன முதலிய பல குறுந்தொகைச் சொற்றொடர்களும் இதனை வலியுறுத்தும்.

பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காணும் மண முறையைப்பற்றிய செய்திகளைத் தொகுத்துப் பார்த்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## தொல்காப்பியத்தில்:

தலைவன் தலைவி இவர்கள் இருவர்க்கு மிடையே களவு முறையில் காதல் ஏற்படுகிறது, களவின் வழியொழுகும் காதலுக்கு இரண்டுமாதம் வரையறை உண்டு. இரண்டுமாத முடிவில் திருமணம் பலரறியுமாறு நடத்தல்வேண்டும். தலைவி பாங்கியின் வாயிலாகத் தலைவனை விரைந்து மணந்து கொள்ளு மாறு இடையிடையே தூண்டுவாள். விரைந்து மணமுடித் தற்காக இவர்களது கூட்டங்களைக்கூட இடையிடையே தடுத்து நிறுத்துவாள்தோழி. இயற்கையாவும் சில இடையீடுகள்நேரும். இரண்டுமாத முடிவில் தலைவனும் தன்முயற்சியால் ஈட்டிய பொருளால் திருமணம் செய்யவேண்டும் என்று வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிவான். இரண்டுமாத முடிவிற்குள் தலைவி தன் ஒழுக்கத்திற்கு இடையூறுகள் ஏதேனும் ஏற்படின் தன் களவொழுக்கத்தைப் பெற்றோர்க்கு அறிவிப்பாள். தலைவியின் முக வேறுபாடு கண்டு ஐயுற்ற செவிலி வெறியாட் டயர்தலை மேற்கொள்ளும்போது தோழி களவுக் கூட்டத்தை வெளியிடலும் உண்டு.

ஊரவர் அலர்மொழி இவர்கள் களவை வெளிப்படுத்தி நிற்கும். தலைவியின் சுற்றத்தார் தலைவனுக்குப் பெண் கொடுக்க மறுத்தால் உடன் போக்கு நிகழும். உடன்போக்கில் தன்னூர் சென்ற தலைவன் தலைமகளைப் பலரறிய மணம்செய்து கொள் வான். உடன்போகும்போது தலைவியின் சுற்றத்தார் தலைவனைத் தடுத்து தலைவியை மீட்டலும் உண்டு. உடன்போக்கே இவர்கள்

நட்பைப் பலரறியச் செய்தலால் இதனைத் திருமணம் என்றும் சொல்லலாம். இவ்வுடன்போக்கையும் திருமணத்தைக் குறிக்கும் சொல்லாகிய கரணம் என்ற சொல்லால் கூறுவர் தொல்காப்பியர். தலைவியின் சுற்றத்தார் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் வீட்டிற்கு வந்து மீண்டும் மணம் செய்துகொள்வான். இப்படி களவியலில் திருமணம் செய்துகொள்ளும் முறையைத் தொல்காப்பியத்தில் காணலாம். இவைகளைத் தவிர மணமுறைகளைப் பற்றிய குறிப்பொன்றும் தொல்காப்பியத்தில் காணக்கிடைத்திலது.

'இன்பமும் பொருளும் அறனும் என்ருங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே.'

தொல். களவியல்

'கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே.'

'கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலையான.'

'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்.'

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.'

தொல். கற்பியல்.

## அகநானூற்றில்

திருமணச்சடங்குபற்றிய விரிவான குறிப்புகள் சங்ககால இலக்கியங்கள் சிலவற்றில் காணப்படுகின்றன. அகநானூறு அதனை விரிவாகக் கூறுகின்றது. மணம் செய்து கொண்ட தலைவனுக்குப் பலநாள் கழித்து மணநாள் நினைவுக்கு வருகிறது, நெஞ்சொடு பேசுகிறான்: "நல்லநாள். புள்ளிமித் தங்கள் பொல்லாங்கின்றி இருந்தன. உரோகிணி சந்திரனுக்கு உரியவள். உகந்தவளும்கூட. உரோகிணியுடன் கூடிய

சந்திரன் உச்சம். அந்த நாளைத் தேர்ந்தெடுத்தனர் அறிஞர்' மணநாள் நெருங்கிற்று. மனையகம் அழகுறுத்தப்பெற்றது. மணமுழவு ஒலிக்கிறது. மங்கல கீதங்கள் பாடப்படுகின்றன. வீட்டு முற்றத்தில் மழையெனக் குளிர்ந்த மலர்ப் பந்தல். புதுமணல் கீழே பரப்பப்பெற்றுள்ளது. விருந்தினர் பலர் கூடியுள்ளனர். விருந்து செய்யப் பெறுகிறது இறைச்சியுடன் இனிய நெய் கூட்டிச் சமைக்கப்பெற்ற வெண்சோறு விருந்தினர்க்குப் படைக்கப்பெறுகிறது. உண்டு களித்து உவகை பூத்தோர் மணப்பந்தலில் அமர்ந்துள்ளனர். மணமான மகளிர் சிலர் மணமகளை மண அறைக்கு அழைத்து வருமுன்னர் அணி செய்கின்றனர். வாகையிலையுடன் அறுகுசேர்த்துக்கட்டப்பெற்ற மாலை அணிவிக்கப்பெறுகிறது. புதிய ஆடைகள் உடுத்தப்பெறுகின்றன. மணல் மலிந்த மணப்பந்தலுக்கு மணமகளை அழைத்து வருகிறார்கள். கடவுளை வணங்கி மணமகளின்பெற்றோர் மணமகன் கையில் பெண்ணை ஒப்படைக்கின்றார்கள். அன்றிரவு முதல் என் உயிருக்கு உடம்பானாள் அவள்.'' என்று கூறுகிறான். அவன் இது விற்றூற்றுமூதெயினனாரது பாடல் அகநானூற்றில்.

'மைப்பறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய ஆகத் தெள்ளொளி
யங்க ணிருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடம் வேண்டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பருஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று........
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப்பாற்றித்
தமர்நமக் கீந்த தலைநாள்'

(தொடரும்)

# ஜீவ ரசம்

திரு. A. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள்
சூப்பரிண்டெண்டெண்ட், தேவஸ்தானம்கச்சேரி, தருமையாதீனம்.

(முன்தொடர்ச்சி)

மக்கள் மன அமைதி குலைந்தது. வாழ்வைப் பாதிக்கும் பிரச்னைகள் பல வளர்ந்தன. சமயத்தை மறந்தனர். ஆட்சியில் நின்றோரைப் பெருமைப்படுத்தி அவர்கள் வழியில் நின்று ஊன் வளர்ப்பது ஒன்றே அவர்களுக்குப் பெரியதாகத் தோன்றியது. அந்நிலையில் மற்றவற்றை மறந்தனர். சமயப் பண்பாடுகளும் ஒழுக்கங்களும் குறையலாயின. இவை குறையக் குறைய சமய ஸ்தாபனங்களோடு உள்ள தொடர்பும் மறக்கப்பெற்றது. இதனை மறப்பதாக உலகில் பெரிய யுத்தங்களும் தொடரவே மக்களின் பண்பட்ட மனநிலை கெட்டு உலகியல் ஆசையும் வெறியும் மேலோங்கிவிட்டன. இவ்விதம் இதனை வளரவிட்டால் உலகநிலை அடியோடு கெட்டு மனிதன் தோன்றிய காலத்தில் இருந்த அநாகரீகமான நிலையை அடைந்துவிடுவானே என்று அறிவியல் பெரியோர்களுக்கும் மடாலயத் தலைவர்களுக்கும் தோன்றியது.

மனிதன் கண்டதேகாட்சி கொண்டதேகோலம் என்றிருந்த காலத்தில் பண்பாடில்லாது தன் சுக துக்கத்துக்காக மற்றவர்களைத் துன்புறுத்திவந்தான். கொலைகளும் குற்றங்களும் மலிந்திருந்தன. உடல் வலுவுள்ளவர்களே தலைவர்களானார்கள். அறிவுக்கு வேலை இல்லாதுபோயிற்று. அவ்விதம் ஊன் பலம் ஒன்று மாத்திரம் நின்று வெகுகாலம் ஆளமுடியுமா? அந்த வெறி நிலையில் மக்கள் சதா அவதிப்பட்டுக்கொண்டே எவ்வாறு இருக்கமுடியும்? அமைதியின்றியே எப்படியிருக்க முடியும்? இந்நிலையிலும் வருந்திச் சில அறிவிற் பெரியோர் இருந்த நிலைக்குக் காரணம் என்ன? அமைதியை நிலைநாட்டிப் பின் பண்புகள் வளர என்ன செய்யவேண்டும் என்று சிந்தித்து முடிவில்கண்ட வழியே கடவுள் நெறியாகும். அவ்வழியில் நிற்பதால் தனக்கு மேற்பட்ட தலைவன் ஒருவன் இருக்கிறான். அத்தலைவன் வழி நின்றால்தான் நமக்குப் பல நன்மைகளும்

கிடைக்கும். அப்படி நிற்பதற்கு அவன் ஆணைவழி ஒழுக வேண்டும். மனம் அடங்கி நின்று கேட்கவேண்டும். அவ்வாறு நிற்கத் தன்னடக்கம் உண்டாக்கிக்கொள்ளும் பண்பாடு வளரும். இவ்விதமான பண்பாடும் கட்டுப்பாடும் வளர வளரத் தனக்கு மன நிம்மதியும்அண்டை அயலாரிடம் அன்பும் வளரத் தொடங்கும். இக்கருத்தைக்கொண்டு இப்போது நமது தலைவர்கள் பலரும் முன்னின்று மேடைகளில் பேசி வருகின்றனர். சமயப் பிரசாரம்செய்து வருகின்றனர். இதனையே கடவுள் கொள்கைப் பிரசாரம் என்பர்.

நமது சமய நிலைக்களன்களாக ஆலயங்களும் மடங்களும் அமைந்து விளங்குவதாக முன்னமே சொன்னோம். அந்தச் சமய நிலையங்களை எந்தமுறையில் திட்டம் செய்தனர் நம் பெரியோர் என்பதனையும் மக்களுக்கு எவ்விதம் தொண்டு செய்கின்றன என்பதையும் சமுதாய நிலையிலும் அதனை எப்படி அமைத்து வைத்தார்கள் நம் அறிஞர்கள் என்பதையும் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியமாகிறது.

நமக்குக் கடவுள் அறிவுவளர நிலைத்த சிந்தனை வேண்டும் அந்தச் சிந்தனை நிலைக்க ஒருபொருளும் அதுவும் அவரவர் பக்குவத்திற்கேற்ப அவரவரின் சிந்தனையை ஈர்ப்பதாக அமைந்திருக்கப்பட வேண்டுமென்பதையும் அவ்விதமாக நம் ஆலயங்கள் அமைக்கப்பட்டு விளங்கும் மேன்மை இவைகள் மேலே சொல்லப்பட்டிருப்பதையும் இங்கும் நினைவுறுத்திக் கொள்வோமாக. அவ்விதமான சிந்தனைக்கேற்றவைகளாக - சிந்தனை நிலைக்கும் இடமாக அமைக்கப்பெற்ற ஆலயங்கள் நம் ஆன்மாவும் சிந்தனையும் தூய்மையுறவே அமைத்தனர் நம் பெரியோர். அங்குச் சிறு எண்ணங்களுக்கு இடமேயில்லை. முதலிலே நம்முடைய எண்ணங்கள் உள்ளம் தூய்மையுற வெளித் தூய்மையும் மிக அவசியமாக வேண்டற்பாலது. அவ்விதம் புறத்தூய்மை வேண்டுமேயானால் நல்ல தூய்மையான குளிர் நீரில் மூழ்கி உடல் சுத்தம் பெறவேண்டும் முதலில். பொதுவாக குளிர்நீரில் முழுகினவுடனே உடல் சுத்தமடைவதுடன் உடம்பில் நல்ல ரத்த ஓட்டம் ஏற்பட்டுச் சிந்தனை நல்லநிலையில் நிலைக்க வழியுண்டு என்றும் கண்டனர் நம் பெரியோர். அதற்காக ஆலய முன்னிலையில் நல்ல தீர்த்தங்களை அமைத்து

தீர்த்தமாடல் என்பதையும் வற்புறுத்தினர். அவ்விதம் தீர்த்த மாடியே தூய்மையாகத் தோய்த்து உலர்த்திய ஆடை அணிந்து ஆலய வழிபாட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற விதியை ஏற்படுத்தினர் நம் மேலோர். அவரவரும் இன்னின்ன கொள்கையுடையவர் என்பதைக்காட்ட அந்தக் கொள்கையில் அழுத்தமுடையவர்களாகச் சமயச் சின்னங்களை வகுத்துக் கொடுத்து அந்தந்தச் சின்னங்களை அவரவரும் அணிந்துகொள்ள வேண்டும் என்றும் திட்டம் செய்தனர். இதனைக்கண்டு மருள் கின்றனர் ஒரு சாரார் இக்காலத்தில். ஆனால் தேசியப் பிரசாரம் என்ற பெயரால் பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் அவரவர் கட்சிக்குள்ள சின்னங்களை அணிந்து கொள்வதைப் பெருமையாக எண்ணுகின்றனர். உலகியல் பெருமை கிடைக்குமென்ற பேராசையால் அதற்கென ஏற்பட்ட கட்சித் திட்டங்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்கின் றனர். பகுத்தறிவு வாதிகளும்கூட அவரவர்களுடைய பகுத் தறிவால் உண்டாகும் எண்ணங்களை அவரவரும் சொல்லிக் கொண்டேபோனால் அந்தக்கட்சி என்னாகும், அதன் விளைவால் நாட்டின் நிலைமை என்னாகும். பகுத்தறிவு ஒரு காரியத்தில் உள்ள நியாயம் இன்னதென்று சொன்னாலும் அதில்நியாயமாகச் செய்யாமல் கட்சியின் கொள்கைக்குக் கட்டுப்பட்டுச் செய்வதால் நாட்டிற்கு இன்னின்ன கெடுதல்கள் ஏற்படும் என்று தெரிந்து கொள்ள அறிவு இருந்தும் கட்சியின்பெயரால் அந்தக் கொறடா வுக்குப் பயந்து உலகியல் கட்சிப் பெருமைக்காக நியாயத்தை உள்ளறிவு (பகுத்தறிவு) நியாய உணர்ச்சியோடு வேறுவித மாகச் செய்யத் தூண்டினாலும் அவைகளைப் புறக்கணித்து விடுவதில்லையா? இவ்விதமாக ஒருமுகமாக ஒரு கொள்கையை ஆதரிப்பது அந்தக் கட்சியின் கொள்கையைப் பெருமைப்படுத்து வதாக இல்லையா?

இவ்விதம் - போலியான பொய்யான ஒரு பெருமைக்கு ஆசைப்பட்டு ஒரு கட்சியின் கொள்கைக்குக் கண்மூடித்தன மாகத் தியாகம்செய்யத் தயாராகும் நாம் நன்மையே மலிந்த நல்லதொரு கொள்கைக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ளத் தயங்குவானேன்? எல்லாக் கட்சிகளிலும் எல்லோரும் அக்கட்சிக் கொள்கைகளைப் புரிந்துகொண்டா ஈடுபடுகிறார்கள்? ஆம் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம். உண்மை

அப்படியா? அதுபோல சமயக் கொள்கைகளை, நாம் ஏன் நம் பெரியோர் மொழிகளைப் பண்பாட்டுத் திட்டங்களை உள்ள வாறு கடைப்பிடித்து அவர்கள்பெற்ற இன்பத்தை அனுபவத் தைத் தெரிந்து கொள்ளக் கூடாது. இதற்கு நமக்குச் சற்றுப் பெருமையும் தன்னடக்கமும் வேண்டுமென்பது ஒன்றுதான் முதலில் தேவை.

இவ்விதமாகத் தூய்மைபெற்று சமயச் சின்னமணிந்த பெருமையோடு ஆலயம் செல்லவேண்டும். ஆலயம் என்பதை மிக உயரமான இடத்தில் ஊரின் மத்தியிலே அமைத்திருப் பார்கள். உயரமான கோபுரங்களும் மதில்களும் சிறந்த முறை யில் அமைக்கப்பெற்றிருக்கும். அதன் பெருமைதோன்ற மனித னுக்கு உயர்ந்த நல்லகுணங்கள் தோன்றவேண்டும். அதற்குக் கட்டிட அமைப்பும் சூழ்நிலையும் ஒருவாறு அமையவேண்டும். பல பிராகாரங்கள், நந்தவனங்கள், பெரிய மண்டபங்கள், மூலமூர்த்தியிருந்து அருள்பாலிக்கக் கர்ப்பகிருகம், இவ்வித மாக எல்லாவிதத்திலும் சிறப்பு மிக்க கலைக்கோவிலாக — கலையின் தாண்டவச் சோலையாக மனம் ஈடுபடுமாறு கட்டி வைத்தனர். அங்கே பெருமான் பெருமை எடுத்துரைப் பனவாக சிற்பங்களும் ஓவியங்களும் சிறந்து காணப் படும். இவ்விதமாக நம்முடைய சொல், செயல், சிந்தனை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளுக்கு உறை விடம் திட்டம் செய்தனர் பெரியோர். ஒரு பெரும் அறிவாளி சொன்னார். பாமரர்கள் நினைக்கிறார்கள். இவ்வளவு சிறிய உருவம் அமைந்த நமது கடவுள் திருவுருவங்களுக்கு ஏனய்யா இவ்வளவு பெரிய மதில்களும் கூடகோபுரங்களும் கட்டிட மண்டபங்களும் என்று? ஆனால் அவை எல்லா மக்களும் உயர, அவர்கள் பண்பாடுயர, அறிவுச்சிந்தனை உயர, கலைப்பண்பாடு உயர, நாகரிகமுயர, எல்லா எண்ணங்களும் உயர்ந்து உயர்ந்து மனிதன் மனிதனைச் செய்து வைக்கப்பட்டன என்பவற்றை அறிவானா? அங்கே எழுப்பப்பெறும் தூய்மையான எண்ணங் களையும் பிரார்த்தனைகளையும் அவன் சிந்திக்கத்தான் முடியுமா? மற்றும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்களே மனிதனின் சிந்தனை அலைகளுக்கு ஒரு மாபெரும் இயக்கும் சக்தி உண்டு. தூய்மையான எண்ண அலைகள் எதனையும் உருவாக்குமென்று. அதனை அறிவானா? அந்தப்பிரார்த்தனை அலைகள் நின்றுநிலவும்

என்பதை அறிவானு? அவைகளை வீண்போகாது மதில்களும் மண்டபங்களும் காக்கின்ற பெருமையை அறிவானு? மண்ணு லும் மரத்தாலும் அமையப்பெற்ருல் அவைகளின் போரை வழியாக ஒருக்கால் கசிந்தாலும் கசியலாமே. அதுவும் அங்கேயே. நிலைத்து நின்று சுழலட்டும் அதனுல் வருவோரது எண்ணங் களும் சொற்களும் தூய்மை அடையட்டுமென்று கருங்கற் களைக்கொண்டு கட்டிவைத்த அருமையை அவன் அறிவானு? இவ்வளவையும் ஒவ்வொருவனும் உணர்ந்து தெரிந்துகொள்ளத் தான் முடியுமா? ஆகவே நம் முன்னேர்வழியில் அவர்கள் சொற்படிநடந்து பெருமையும் பண்பாடும் நன்னிலையும் அடைய அவன் முதலில் முயலட்டும். பிறகு அதில் ஊறி ஊறி உணர வழி பிறக்கும் என்ருர். இவ்வளவும் உள்ளடக்கிக் கட்டப்பட்ட கோவில்களைச் சமய நிலையமாக மனிதன் மனச்சாந்தி தேடுமிட மாக அமைத்தனர் நம்மவர்கள். அங்கே ஞான ஒளி வேண்டு வோர் அமர்ந்து சிந்தித்து நிட்டைகூடி அனுபூதி நிலையடைய வழியுண்டு.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"

என்றது சிவஞானபோதம்.

எவ்வளவு மேம்பட்ட ஞானிகளுக்கும் ஆலய வழிபாடு வேண்டுமென்று வற்புறுத்துகிறது அது.

ஒன்றுக்கும் உதவாத பிரயோசனப்படாத நம்மையும் நமக்கு வேண்டிய அறிவுமுதலிய எல்லாச் சாதனங்களையும்படைத்துக் காத்துநிற்கும் பரம்பொருளுக்கு எவ்வாறு நன்றி செலுத்த முடியும். அதற்கு நமக்குச் செயல் என்ன இருக்கிறது. ஆகவே அதன் நன்றியாக அதன் அளவில்லாத பெருமையை சிந்தித்துச் சிந்தித்து நாம் பெருமையடைதலும் பாடிப்பாடி நாம் மகிழ் தலும் மாத்திரமே முடியும். பொதுவாக நம் முன்னேர் நமக்கு மேற்பட்டவர்கள் அரசன், ஆசான் முதலியோரைக் காணச் செல்லும்போது நாம் நம்முடைய அளவிறந்த நன்றியையும் அன்பையும் வெளிப்படுத்த நம்மிடமுள்ள சிறந்த பொருள் ஒன்றை எடுத்துச்சென்று கொடுத்து மகிழ்வதுண்டு. அதே போல அரசர்க்கும் அரசனுக ஆசானுக்கும் ஆசானுக எல்லா வற்றிற்கும் மேம்பட்டதான (கடவுளுக்கு) பரம்பொருளுக்கு

நம்முடைய எல்லையற்ற நன்றியை, கவிவாணர், மனங்கனிந்த கவிகளாலும், ஓவியர் சிந்தனை சிறக்கச் சிறந்த ஓவியங்களாலும் கல்லிலும் செம்பிலும் கலைசிறந்த உருவங்களை சிற்பிகள் கற்றளிகளாலும் அமைத்து நன்றி செலுத்தினர். கலைவாணர்கள் மனமுருகிய பாடல்களையும், நடனங்களையும் அறிவிற் சிறந்த ஞானிகள் சிறந்த தோத்திரங்களையும் செய்து உதவினர். மற்றவர்கள் இவையெல்லாம் முடியாதவர்கள் அவர்கள் வழிநின்று அந்தச் செல்வங்களைக் கண்டும் படித்தும் தெரிந்து வழிபாடுகள்செய்து சிறந்தனர். பிரார்த்தனைகளைச் செலுத்திக் கொண்டனர். தாம் வாழ உலகம் வாழ வேண்டுமென்ற கொள்கை அதன்மூலம் பெருகுவதாயிற்று. தான் நலமடைய பிறரும் நலமடையட்டும் என்றதுதான் அவர்கள் பிரார்த்தனை.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர்தீர்கவே

---

## மதிப்புரை :

### சீவகன்கதை

எழுதியவர் - திரு. அ. மு. பரமசிவானந்தம் M. A. M. Litt. அவர்கள். வெளியிட்டோர்; தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை. பக்கங்கள் 151 விலை ரூ. 2—4—0.

ஐம்பெருங் காப்பியங்களில் சிந்தாமணி ஒன்று. கற்பனை வளம் நிறைந்த பேரிலக்கியம் இந்நூல். தமிழ் சிறந்த இலக்கியம் இது. இந்நூலில் எழுந்த கற்பனைகளும் சொற்றொடராட்சிகளும் எத்துணையோ நூல்களில் இடம்பெற்றுள்ளன. தெய்வம் வாழ்த்திய சீவ என்ற சொல்லும் அரசியின் ஆர்வமொழியாகிய ‘சிந்தாமணியே’ என்ற சொல்லும் இணைந்து பாட்டுடைத் தலைவனின் பெயராக அமைந்தது. இக்கதையை உரைநடைப்படுத்தி அளிப்பவர் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள். இடையிடையே சிறந்த கதைக்கோப்பான பாடல்களை எடுத்து விளக்கிச் செல்வது சிறப்பாக உள்ளது. ‘விசாகு’

# தமிழ் மருத்துவ நூல்களும் ✷ ✷ சைவ சமயமும்

திரு. K. G. நாகராஜ மன்னையர் அவர்கள்,
சித்தவைத்தியர், அம்மாப்பேட்டை.

நமது நாட்டில் மனநோய் நீக்கும் மருந்தும் உடற்பிணி போக்கும் மருந்தும் எக்காலத்துத் தோன்றி வளர்ந்து வந்துள்ளன என்று கூறுதற்கியலாது. மனநோய் உடலை வாட்டுவதும் உடற்பிணி உள்ளத்தை வாட்டுவதும் யாவரும் அறிந்ததே. அவை இரண்டும் ஒன்றற்கொன்று தொடர்பு கொண்டவை. மிகப்பழங்காலந்தொட்டு நமது நாட்டில் மனநோய் நீங்கும் வாயில்கள் பல கூறப்பட்டுள. இறைவனிடத் தன்பு, அவனை இடையறாது வழிபடல், உயரிய ஒழுக்கம் யாவும் உள்ளநோய் நீக்கத்திற்கு மகிழ்ந்துகொள்ளும் மருந்துகளாம். சமய நூல்கள் யாவும் மாசற்ற மனத்தையும் அன்புப் பெருக்கையும் சீரிய ஒழுக்கத்தையும் சிறப்புற அளிக்கவல்லன. அவை படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்ப ஊற்றுக்களாய் அமைந்து ஆன்ம அறிவிற்கு அருந்துணையாய் அமைவன வன்றோ?

அவ்வாறே உடற்பிணி போக்கும் மருந்துகளை உணர்த்தும் நூல்கள் பல நம் அருந் தமிழ்மொழியில் தனிச்சிறப்புடன் மிளிர்கின்றன. சங்க காலத்திற்கு முன்பே நமது நாட்டில் அரிய மருத்துவ நூல்கள் தோன்றி யிருக்கக் காண்கிறோம். தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் தமது திருக்குறளில் மருந்து என்னும் ஓர் அதிகாரம் வகுத்துள்ளார். அதனில்

> ''மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளி முதலா எண்ணிய மூன்று''

என்று கூறுகின்றார். ''நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று'' என்றமையால் அவர்காலத்துக்கு முன்னரே மருத்துவ நூல்கள் இருந்தமை தேற்றம். தமிழ் இலக்கண நூலாகிய

அகத்தியம் இற்றைக்குச் சுமார் நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அகத்தியரால் எழுதப்பட்டது என்பர். அவ்வகத்தியரே மருத்துவ நூல்கள் பல இயற்றியுள்ளார். இன்று மிகுதியான எண்ணிக்கையில் காணப்படும் தமிழ் மருத்துவ நூல்களெல்லாம் அவர்பெயரால் காணப்படுவனவே. அவ்வளவும் சிறந்த பயனளிக்கும் சிறந்த மருத்துவ முறைகளாகவே உள்ளன.

சிலர் அந்த நூல்களெல்லாம் இலக்கணம் இயற்றிய அந்த அகத்தியரால் எழுதப்பட்டதல்ல என்றும் பிற்பட்ட காலத்து வேறுசிலரால் எழுதப்பட்டு அகத்தியர் பெயரால் வழங்கி வருவன என்றும் அதற்குக் காரணம், அவர் இவ்வளவு எளிய நடையை மேற்கொள்ளமாட்டார் என்றும் யாப்பமைதி இல்லையென்றும் கூறுகின்றனர். அகத்தியர் அக்காலத்து மக்கள் எல்லோரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் பொருட்டுப் பலதுறைப்பட்ட பல்வகை நூல்களையும் எளிய நடையில் ஆக்கியுள்ளார். அவற்றுள் மருத்துவ நூல்கள் பலவாக உள்ளன. அவரைப்பின்பற்றிப் பல முனிவர்களும் சித்தர்களும் மக்கள் எளிதில் உணர்ந்துகொண்டு தவறில்லாத முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதையே குறிக்கோளாகக்கொண்டு தங்களது நூல்களில் எளிய நடையை மேற்கொண்டனர் எனத் தெரிகிறது. இதனை விடுத்து ஆராய்ச்சியாளர்கள் நடையின் எளிமை நோக்கி அகத்தியர் போன்ற உயர்ந்தோரால் மருத்துவ நூல்கள் எழுதப்பட்டன அல்ல என்று துணிவது சாலாது. அத்தகைய துணிவு நம்நாட்டு மருத்துவ முறைகளின் பெருமையைச் சிதைப்பதாகவே யுள்ளது. அன்றியும் இன்று நமது மருத்துவம் பரவாமைக்கும் பிறநாட்டுமுறை மேலோங்குவதற்கும் அது காரணமாகிறது. நமது இன்றைய ஆராய்ச்சிவாணர்களும், அறிவுடைப் பெருஞ்செல்வரும், புலமையாளர்களும் ஒருசிறிது நம் நாட்டு மருத்துவத்தின் சீரினையும் கருதி ஆவனசெய்வராயின்—ஒருகாலத்தில் ஒப்புயர்வுற்று விளங்கிய அதனை இன்று சீருடன் காணவில்லையாயினும்—இனிவருங் காலத்தில் காண்போமன்றோ!

தமிழ் மருத்துவ நூல்கள் எளிமை மட்டும் உடையனவல்ல. அவை அருமையும் பெருமையும் வாய்ந்தவை; செய்யுள் இலக்கணம் சிதையாதவை; சொற்செறிவும் பொருட் செறிவும்

260



உடையவை; நயம் பெற்றவை. இவற்றை, அந்நூல்களைக் கூர்ந்து பொறுமையோடு படிப்பவர் அனைவரும் ஐயமின்றி அறிவர். உடற்பிணி போக்கும் மருந்துப் பொருள்கள் பல. அவை ஒவ்வொன்றையும் குறிப்பதற்குப் பல சொற்கள். உபயோகமாகின்றன. 'அச் சொற்களை யெல்லாம் மருத்துவ நிகண்டு, மருத்துவ அகராதிகளின் துணையின்றி அறிதற்கியலா. சொற்கள் அமைந்துள்ள முறையோ வியத்தற்குரியது. எல்லாம் காரணப்பெயர்கள். அறியாமை அகற்றும் அறிவுப் பெயர்கள். பரந்து பட்ட கருத்துக்களை விளக்கும் சுருங்கிய சொற்கள். அத்தகைய சொற்களின் விளக்கங்களையெல்லாம் முழுமையும் கண்டறிதல் புலவரானன்றி வேறு யாரால் முடியும்!

உதாரணமாக, நாக்குப் பூச்சியை உணர்த்த மருத்துவநூல் களில் உபயோகமாகும் சொற்களில் 'பூமி நாயகம்' என்ற தொடரும் ஒன்று. பூமியில் கிடைக்கும் சிறந்த மருந்துப் பொருள்களுக்கெல்லாம் நாயகமாய் விளங்குவது நாக்குப்பூச்சி என்றும் பூமியை வளம்படுத்திச் சிறந்த விளைவைத் தருவதற்கு நாயகமாய் அமைந்துள்ளது நாக்குப்பூச்சியென்றும் இத்தகைய சிறந்த பொருள்களை அத்தொடர் அறிவிக்கிறது. அதுபோலவே "கானக்குறத்தி பால்" என்பது தேனை உணர்த்துகிறது. இப் பொருளைக் கொள்ளும்போது நமது நாட்டு ஐவகை நிலங்களுள் மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சியும் அந்நில மக்கள் பலருள் குறத்தியும் அவர்களது தொழில்கள் பலவற்றுள் தேனெடுத்தலும் உணர்வோர் உணர்வர். இவ்வாறு பல சொற்கள் அறிவுக்கு விருந்தாய் அமைந்துள்ளன, அவற்றை விரிப்பிற் பெருகுமென்றஞ்சி விடுக்கின்றேன்.

இனி, சைவ சமயத்தின் பெருமையை விளக்கும் வகையாகப் பெரும்பான்மையான சொற்கள் மருத்துவப் பொருள்களுக்கு ஆகி வந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை அறிவோம். அவை இம்மத தத்துவங்களை அறிதற்கும் புராண அறிவைப் பெறு தற்கும் ஏதுவாக உள்ளன. காந்தக்கல்லை 'முருகன் புராணம்' என்ற தொடர் உணர்த்துகிறது இப்புராணம் மக்களைத் தன்பால் ஈர்க்கும் காந்தக்கல்லாக உள்ளது என்ற அதன் பெருமை வலிவுறத்தோன்றுகிறது. சுண்ணும்புநீர் மிகச் சிறந்த ஓர் மருந்துப்பொருள். இதனைக்குறிக்கும் சொற்

ருடராக 'பிரணவநீர்' என்ற தொடர் அமைந்துள்ளது. இதன் மூலம் பிரணவத்தின் பெருமை உணர்த்தப்படுகிறது. கௌரிபாஷாணம் என்ற பொருளை மேலான நோன்பு என்ற தொடரும் இலிங்கம் என்றே பெயரையுடைய ஓர் மருந்துப் பொருளை அறிவித்தற்குக் 'கடிதடத்திற்கிறைவன்' நிதம்பத்திற் கிறைவன் என்ற தொடர்களும், வீரம் என்னும் பொருளை உணர்த்த மீநாக்ஷிமைந்தன்' என்ற தொடரும், சிவகரந்தை என்பதை 'விடையூர்தி' 'திருநீலகண்ட மூலி' என்ற தொடர் களும் விளக்குகின்றன. இவ்வாறே இரசத்திற்கு விந்துவும் கெந்திக்கு நாதமும் பெயர்களாய் அமைந்துள்ளன, ஓர் உதாரணச் செய்யுளை நோக்குவோம்.

'மேலான நோன்புடன் மால்தேவி ஒன்றும்
மீனுக்ஷி மைந்தனையவ் வெடையே சேர்த்து
சீலமுடன் தனுசு நட்சத்திரமுங் கூட்டிச்
சிறப்பான எண்பதோடு தாயைச் சேர்த்து
பாலான கலைமகளின் நிறமும் விந்து
பகர்நாதம் ஆண் குறியுழ் பண்பாய் வாங்கிக்
*கோலமுடன் இவையாவும் சமனுய்ச் சேர்த்துக்
.... .... .... கொள்ளே''

(மேலானநோன்பு—கௌரிபாஷாணம்; மால்தேவி—தாளகம்; மீனுக்ஷிமைந்தன்—வீரம்; தனுசு—மனோசிலை; நட்சத்திரம்—பூரம்; தாய்—காந்தம்; எண்பதோடுதாய்(அய)க் காந்தம்; கலைமகளின் நிறம்—வெள்ளைபாஷாணம்; விந்து—இரசம்; நாதம்—கெந்தி.)

பூபதி மாத்திரைக்கும் பரமசிவத்துக்கும் சிலேடையாக ஓர் செய்யுள் மிகவும் நயம்பட அமைந்துள்ளது. அஃதாவது:-

' சுருதியைவெண் பொடிமணிகம் படிகமட
னீலகண்டஞ் சுசிபொன் வில்லம்
பொருதனி வீரங்கன னற்பரை புரம்பெற்
றழலாடி யுரக்கால் வீட்டிப்
பொருதுகன்மப் பிணிதீர்க்கும் பூபதிமாத்திரை
போன்றிப் புடவி யெங்கும்
கருதரிய சுகமளிக்கும் பசுபதிதாட்
டுணைமலரைக் கருத்துள் வைப்பாம்''

* ஏட்டுச்சுவடியில் இவ்வடி சிதைந்து காணப்படுகிறது.

பூபதி மாத்திரையானது உடற்பிணிகளைப் போக்கிச் சுகமளிப்பதுபோல, பிறவிப்பிணிகளை நீக்கி உயிர்களுக்குச் சுகானுபவத்தை அருளிச்செய்கின்ற பரம சிவத்தைத் தியானம் செய்வாம் என்பது கருத்து.

இவ்வுலகத்துள் மருந்துகளுக்குள் சிறந்ததாதலின் பூபதி மாத்திரையை பரமசிவத்துக்குஉப்பாகக் கூறினர். "அணியும் அமுதும் என் ஆவியும் ஆயவன் தில்லைச் சிந்தாமணி" என்னும் திருக்கோவையானும் உணரலாம். இனி, இச்செய்யுளின் சிலேடைப் பொருளை நோக்குவோம்.

பூபதி மாத்திரையின்மேல் செல்லுங்கால்:- ஆயுர்வேதத்தினுல் சொல்லப்படுகின்ற வெண்மை நிறமுள்ள ஐந்துவகைப் பஸ்பங்கள். இரத்தினங்கள், வெள்ளைப்பாஷாணம், மடல் துத்தம், துருசு, பாதரசம், அரிதாரம், மனோசிலை, நவச்சாரம், சவ்வீரம், சாதிலிங்கம், நல்ல நெல்லிக்காய்கந்தகம், இரசகற்பூரம் என்னும் இவைகளைப் பெற்றுச் சேர்த்து அரைத்து குப்பியில் வைத்து எரிக்கப்படுவது. பலம் பொருந்திய வாத ரோகத்தை நீக்கி சரீரத்தில் பொருந்தி வருத்துகின்ற மற்ற ரோகங்களையும் தீர்த்து உயிர்களுக்குச் சுகத்தைக் கொடுப்பது.

பரமசிவத்தின்மேல் செல்லுங்கால்:— வேதத்தில் சொல்லப்படுகிற அழகிய விபூதியும். உத்திராட்சமும், பிரமகபாலமும் படிக மாலையும், வலிய காளகண்டமும், பரிசுத்தமும் பொன்மயமாகிய வில்லும், கங்கையும், பொருதுகின்ற ஒப்பற்ற பராக்கிரமும். தீயும், நல்ல பராசக்தியும் தமது திருமேனியிற் கொண்டருளி, அக்கினியில் நடனஞ்செய்து. பலம்பொருந்திய எமனைக் கொன்று திரிலோகங்களிலும் இராநின்ற உயிர்களுடைய வருத்துகின்ற பிறவிப்பிணியைத் தீர்த்து மனத்தினுலும் நினைத்தற்கரிய சுகானுபவத்தை அருளுகின்ற பரமசிவத்தினுடைய இரண்டு திருவடித்தாமரை மலரையும் எம்முடைய இதயத்தில் வைத்துத் தியானம் செய்வாம்.

இதுபோன்று பல செய்யுட்கள் சிறந்த சைவசமயக் கருத்துக்களையும் உண்மைகளையும் விளக்குவனவாய் உள்ளன.

# நல்வினை செய்தவள்

திருமதி, வித்துவான், சிவ மீனாட்சிசுந்தர சிவை அவர்கள்
சென்னை.

அருள்மொழியும், மலர்க்கொடியும் இருதோழியர்.

அருள்மொழியைக் காண மலர்க்கொடி வருகின்றாள். இருவரும் சொல்லாடுகிறார்கள்.

அருள்மொழி:- வா, மலர்க்கொடி! இன்று உன்னைக் காண மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். உட்காருவாயாக.

மலர்க்கொடி:- வருகிறாயா? இருவரும் தோட்டத்திற்குச் சென்று சற்று உலாவி வருவோம். எங்கே உன் அன்னை யாரைக் காணோம்? எங்கு சென்றிருக்கிறார்கள்?

அருள்மொழி:- என் அன்னையார் இன்று மகளிர் சங்கத்தில் பெரியபுராணத் தலைவியரில் சிறப்பு வாய்ந்த மங்கையர்க்கரசி யாரைப்பற்றி ஒரு சொற்பொழிவாற்றச் சென்றிருக்கிறார்கள்.

மலர்க்கொடி:- அருள்மொழி! பெரியபுராணமென்பது என்ன?

அருள்மொழி:- மலர்க்கொடி நீ இவ்வாறு கேட்பது எனக்கு வியப்பை விளைவிக்கின்றது. பெரியபுராணம் என்பது என்ன என்று சைவமரபில் பிறந்த உனக்குத் தெரியாதிருப் பதைக் காண எனக்கு மிகவும் வருத்தமாகவும் இருக்கிறது.

மலர்க்கொடி:- அருள்மொழி! பெரியபுராணம் என்றால் என்ன? நீ வியப்படைவதும், வருத்தப்படுவதும் இருக்கட்டும். எனக்கு இப்போது சொல்லமாட்டாயா?

அருள்மொழி:- சொல்லாமல் என்ன! நீ கேட்பதற்கு முன்பே யானே அதைப்பற்றி உனக்கு விரிவாகச் சொல்லத்

தான் எண்ணினேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் குன்றத்தூர் என்ற ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் பிறந்தவர் சேக்கிழார் பெருமான். அவர் அநபாயசோழன் என்னும் மன்னனிடம் அமைச்சராக இருந்தார். அவன் விருப்பத்திற்கிணங்கப் பெரிய புராணமென்னும் இப்பெருமைவாய்ந்த நூலை ஆக்கியருளினார் சேக்கிழார். தில்லைக் கூத்தனே 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்தான்.

மலர்க்கொடி:- இந்நூலில் என்ன சொல்லியிருக்கிறது?

அருள்மொழி:- கடவுளிடத்தில் கனிந்த அன்புடையவர்களாயிருந்தவர்கள் வரலாறு சொல்லியிருக்கிறது.

மலர்க்கொடி:- எத்தனைபேர் அப்படிக் கடவுளிடத்து அன்பு செய்தவர்கள்?

அருள்மொழி:- தனித்தனியே அன்புசெய்த அறுபத்து மூன்று பேரைப்பற்றியும் இனி அன்பு செய்யும் ஒன்பது வகைகளைப்பற்றியும் பெரியபுராணத்தில் கூறியிருக்கிறது.

மலர்க்கொடி:- அவ்வளவும் கொண்டதற்குத்தான் பெரிய புராணம் என்று பெயரா?

அருள்மொழி;- ஆம் மலர்க்கொடி. திருத் தொண்டர் புராணம் என்றும் அதனைச் சொல்வதுண்டு.

மலர்க்கொடி:- இதைப் படிப்பதால் என்ன பயன்?

அருள்மொழி :- இந்நூல் தன்னை உண்மை அன்புடன் ஓதுகிறவர்களுக்குக் கடவுளைப்பற்றிய உண்மை அறிவையும் கடவுளிடம் கனிந்த அன்பையும் உண்டாக்கும். பற்றோடு படித்தால் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். பின்னால் நல்ல கதியும் கிடைக்கும்.

மலர்க்கொடி:- அப்படியானால் அந்த நல்லநூலை நானும் படிக்கவேண்டுமே.

அருள்மொழி:- அப்படியே கட்டாயம் படி, இனி நானும் நாம் கூடும்போதெல்லாம் இந்நூலில் உள்ள அடியார்களில் ஒவ்வொருவரைப்பற்றிச் சொல்லிவருகிறேன்.

மலர்க்கொடி:- அருள்மொழி யான் உனக்குப் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இன்று வீண்காலம் போக்காது நல்ல பயனுள்ள பொருள்களைப்பற்றி அறிந்து கொண்டேன். இதுவும் என் நல்வினையே. ஆமாம் இவைகளை யெல்லாம் நீ எவ்வாறு அறிந்துகொண்டாய்?

அருள்மொழி:- ஆண்டவன் அருளாலும் என்னுடைய நல்வினைப் பயனாலும் நம் சமயத்தையும், சமய நூல்களையும் நன்கு கற்றறிந்த தாயைப்பெற்றேன். அவள் எனக்கு வேறு வீணான பொருளற்ற கதைகளையும் பாட்டுக்களையும் கூறாது, இவ்வரலாறுகளையும், பாட்டுக்களையும் சிறு வயது முதற் கொண்டே சொல்லித்தருவாள். ஆதலின் யான் இலேசாகப் பள்ளிப் படிப்புடனே இவைகளையும் அறிந்துகொள்ள முடிந்தது. இதுபோலவே, ஒவ்வொரு தாயும் தன் குழந்தை களுக்குச் சிறு வயதிலிருந்தே கற்பித்துவந்தால் சமயப்பயிர் நன்கு வளரும். தமிழன்னை நல்ல அரியாசனத்தில் வீற்றிருப்பாள். நாடும் செழிப்புறும், பெண்களால்தான் சமயமும் உலகமும் வளரவேண்டும். ஆதலின் பெண்கள் நன்குகக்கற்று இறை வனைத்தொழுது இன்பமுடன் வாழவேண்டும்.

மலர்க்கொடி:- மிகவும் நன்றி. யான் சென்று வருகிறேன்.

---

## பெரியபுராணச் சிறப்பு

கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளிது முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை யெண்ணியள விடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகுந்
தருங்கடலின் மீனையள விடலாகும் வானத்
தாரகையை அளவிடலாம் சங்கரன்ருள் தமது
சிரங்கொடிருத் தொண்டர்புரா ணத்தையள விடநஞ்
சேக்கிழார்க்கு எளிதலது தேவர்க்கும் அரிதே.

# அறுபத்துமூவர் வரலாறு

திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்
கயப்பாக்கம்.

(சம்பாஷணை—ராமனுக்கும் சோமனுக்கும்)

ராமன்: சோமு? அன்று நான் மயிலாப்பூரில் அறுபத்து மூவர் உற்சவத்திற்குப் போயிருந்தேன். ஆலயத்தில் வரிசையாய்க் கணக்கிடமுடியாத சாமிகள் இருந்தார்கள். இத்தனையா சாமிகள் உண்டு நாம் வணங்குதற்கு என்று ஒருவரைக் கேட்டேன். அதற்கு அவர் பதில் சொன்னதாவது.

"தம்பீ, உடம்பு மெலிந்து எலும்பும் தோலுமாக நடுவில் இருக்கிறதே ஒரு அம்மையார், அவர்தான் காரைக்காலம்மையார் என்று சொல்வது. அவர் சிவபெருமானைக் குறித்துத் தவம்செய்து 63 பிள்ளைகளைப் பெற்றுளாம், இன்னும் பல பிள்ளைகளைப் பெறத் தவம் செய்கிருளாம் என்று சொல்லக் கேள்வி" என்ருர். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. இது என்னடா விபரம் ஒன்றும் புரியவில்லை. 63 பிள்ளைகளைப் பெறுவது முடிந்த காரியமா? உனக்கு தெரிந்தால் இந்த விபரத்தைக் கொஞ்சம் சொல்லு பார்ப்போம்!

சோமன். அடராமா, உன் பெயருக்கு ஏற்றபடித்தான் கேள்வியும் கேட்டாய். இது தெரியாதா? மொத்தம் 63 பேர் என்றும் அவருள் ஒருவர் காரைக்காலம்மையார் என்றும் புராணம் சொல்லுகிறது. எனவே அவர் 63 பிள்ளைகளைப் பெற்றது என்றது முதல்தப்பு. இரண்டாவது இந்த நாயன்மார்கள் எல்லாம் வெவ்வேறு காலத்து இருந்தவர்கள். வெவ்வேறு ஊரிலிருந்தவர்கள். ஆதலால் அவர்களை எப்படியப்பா ஒருவர் பெற்றிருக்க முடியும்? உனக்கென்ன பைத்தியமா? சொல்வார் சொன்னுலும் கேட்பாருக்கு மதியில்லையா? நன்ருயிருக்கிறது உன் அறியாமை. நான் விபரமாகச் சொல்லி வருகிறேன். கவனமாய்க்கேள்.

ராமன்: அப்படி விபரமாக நீ சொல்லிவா நானும் கேட்டுக் கொண்டு உண்மையான வரலாற்றைத் தெரிந்து கொள்ளு கிறேன்.

சோமன்: அறுபத்துமூவர் என்பவர் 63 அடியார்கள் என்று சொல்லப்படுவார்கள். அவர்கள் வரலாறு கேட்க மிக மிக ஆனந்தமாயிருக்கும்.

ராமன்: சரி, எனக்கு இன்னும் ஒரு சந்தேகம். அதாவது 63 என்று சொன்னுயே! அவர்கள் வரலாறு கூறியது ஒரு காலம். அதற்குப் பிறகு யாருமே அடியார்கள் தோன்ற வில்லையா? அவர்களை எத்தனையாவதாகச் சேர்த்துக்கொள்வது? அதனையும் விளக்கமாய்ச் சொல்வது நல்லது. முதலில் இதனைச் சொல் பார்ப்போம்.

சோமன்: நீ கேட்டது நல்ல புத்திசாலித்தனமான கேள்வி தான். இதனைப் பலபேர் கேட்பதும் உண்டு. அதற்காக இவ் வடியார்கள் வரலாற்றை முதன்முதலில் சுருக்கமாகப் பாடியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் தீர்க்கதரிசியப்பா. அதாவது, அவருக்குப்பின்னே நம்மைப்போல பலமேதாவிகள் வருவார்கள். இவர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட சந்தேகங்கள் கிளம்பும் என்றுதான் அவர் இதற்கும் ஒரு முடிவுகட்டிப்போனுர். அதாவது 63 தனியடியார் என்றும் 9 பேர் தொகை அடியார் என்றும் கூறியுள்ளார். அதாவது முன்னே இருந்தவர்கள். தற்போது நம் காலத்து இருப்பவர். இனி நமக்குப் பின்னே வருபவர்கள். அவரவர்கள் என்னென்னவகையில் சேர்ந்தவர் களோ அந்தந்தவகையைக் குறிக்கும் தொகையடியார் என்று சொல்லும் கூட்டத்து அடியாருள் சேர்த்துவிட வேண்டியது. ஆதலால் 63-க்குமேல் தனி நபர் கிடையாது என்று தெரிகிற தல்லவா. ஆதலால் இத்தொகை அடியார் வரலாறுகளையும் நாம் தெரிந்துகொண்டால்தான் முழுவிபரம் தெரிந்தவர் ஆவோம்.

ராமன்: ஆனுல் சரி, இன்னும் ஒரு சந்தேகம். இவ்வர லாற்றைப் புராணமாக யாராவது எழுதியிருக்கிறுர்களா? அப்படியானுல் அதை யார் எழுதியது? அதனை அவர் எப்படிப்

பட்ட ஆதாரங்களைக்கொண்டு எழுதினர். எப்போது எழுதினர்? எதற்காக எழுதினர்? அப்புராணத்தைப் படித்தால் இலேசாய்ப் பொருள் விளங்குமா? கடினமான நடையை யுடையதா? சொல்வாயாக.

சோமன்: இதுவும் ஒரு நல்ல கேள்விதான். இந்த 72 அடியார்கள் வரலாறுகளையும் நம் தமிழ்நாட்டிலே வாழ்ந்த தமிழ் மன்னன் இரண்டாவது குலோத்துங்கன் என்னும் அநபாயசோழன் தன்னிடம் மந்திரியாராகவிருந்த தமிழறிஞர் சேக்கிழார்பெருமான் என்பவரால் அரசன் வேண்டுகோளின்படி இன்றைக்குச் சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்னர் பாடப் பட்டது. 2 காண்டம் 13 சருக்கம் 4253 பாட்டுக்கள்கொண்டது இப்புராணம். இதனைத்தான் பெரியபுராணம் என்பார்கள். இதற்கு அப்புராண ஆசிரியர் கொடுத்தபேர் "திருத்தொண்டர் புராணம்"

ராமன்: சரி, அப்படியானல் இவ்வளவு பெரிய நூலைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமானல், இந்த நெருக்கடி யான காலத்தில், எனக்கேது அவ்வளவு அவகாசமப்பா?

சோமன்: அப்படியானல் நீ தெரிந்துகொள்ளும் முறையில் அவ்வாய்ப்பை எளியநடையில் சுருக்கமாகச்சொல்லிவிடுகிறேன். நீ அவ்வளவையும் படித்துக்கொள்ள வேண்டிய கஷ்டமும் உனக்கு வேண்டாம்.

ராமன்: சோமு? இன்னும் ஒரேஒரு சந்தேகம். அதனையும் இப்போதே கேட்டு விடுகிறேன் நீ கோபித்துக்கொள்ளக் கூடாது. "என்னடா இவனுக்கு எடுத்ததெல்லாம் சந்தேக மாக இருக்கின்றதே என்று" சலித்துக்கொள்ளவும் கூடாது. என்ன! கேட்கட்டுமா?

சோமன்: தாராளமாய்க்கேள், ஒரு சந்தேகமில்லையப்பா' ஒன்பது கேள் பதில் சொல்லிவிடுகிறேன். இதற்கெல்லாம் சலித்தால் ஆகுமா? நீ மிகவும் நல்லவன். இப்படிப்பட்ட கேள்விகளை எல்லாம் பொறுமையாய்க்கேட்டுத் தங்களுக்குள்ள சந்தேகங்களை எல்லாம் விளக்கிக்கொள்வதுதானே நல்லது. இதனை விட்டுவிட்டு, இது பொய். அது பொய் இதனை நம்ப மாட்டேன். அதனை நம்பமாட்டேன். இப்படி எல்லாம்

269

நடந்திருக்குமா? என்றெல்லாம் குதர்க்கம் பேசினால் காரியம் சித்திக்குமா? நீ மிகவும் நல்லவன் தான். ஏதோ சிலபேர் பேசும் சில்லரைப் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு வீணாகக் காலத்தை கழித்து விட்டால் நல்லதா? இப்போதாவது இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் உனக்கு ஏற்பட்டதே போதும் இது உன் நல்லகாலத்திற்கு அடையாளம். சரி. நாளை நாமிருவரும் மயிலாப்பூருக்குப் போகலாம் வருகிறாயா?

ராமன்: சரி அப்படியே வருகிறேன்.

சோமன்: நாளைகாலை கோயிலுக்குப் போய் அங்குள்ள சுவாமிகளை எல்லாம் ஒவ்வொன்றாய்க் காட்டிச் சேக்கிழார் பெருமான் சொல்லியுள்ளபடி ஒவ்வொரு வரலாற்றையும் சொல்கிறேன் நாளை வா.

ராமன்: வணக்கம்; போய் வருகிறேன்.

---

## மதிப்புரை :

### சிந்தாமணிச் சொற்பொழிவு

பதிப்பாளர்:- வித்துவான், திரு. மே. வீ. வேணுகோபால பிள்ளை அவர்கள். வெளியிட்டோர் - ஜைனத்தமிழ் இலக்கிய மன்றத்தார், காஞ்சிபுரம். பக்கங்கள் 281. விலை ரூ 3.

சிந்தாமணியின் இலக்கியச் சுவையில் பல அறிஞர்கள் தோய்ந்தெழுதிய கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. திருவாளர்கள், வையாபுரிப் பிள்ளை, தொ. பொ மீனாட்சி சுந்தரனார், மு வரதராசனார், தேவநேயப்பாவாணர், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், கி. வா. ஜகந்நாதன், அ. கி. பரந்தாமன், மா. இராசமாணிக்கம், கனகராஜய்யர், இளவழகனார் முதலிய முப்பத்தேழு மூதறிஞர்கள் இதிற் கட்டுரை எழுதியுள்ளனர். சிந்தாமணியைப்பற்றிய பலரது கருத்துக்களையும் ஒருங்கே அறியுமாறு இந்நூலைத் தொகுத்தவர் வித்துவான் திரு. மே வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள். நல்ல தாளில் அழகிய முறையில் இந்நூல் அமைந்துள்ளது. தமிழ்மக்கள் படித்துப் பயன்பெறவேண்டிய நூல்களுள் ஒன்று.

220

# சிறுவர்க்கான பெரியபுராணம்

கை. மு.

## 1. திருநீலகண்டர்

அவர் சிதம்பரத்தில் பிறந்தவர். குயவர் வகுப்பைச் சேர்ந்தவர். மண் பானைகள் செய்து விற்று போதுமான செல்வத்துடன் வாழ்ந்துவந்தார். அவரது மனைவியார் கற்பிற் சிறந்தவர். இருவரும் தினந்தோறும் கோவிலுக்குப் போவார்கள். சிவனை வழிபடுவார்கள். தங்களிடம்வரும் சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுத்து வருவது அவர்களது தொண்டு. துன்பம் வந்தகாலத்திலும் இந்தத் தொண்டுசெய்தலை விடாது செய்துவந்தார்கள். இருவரும் திருநீலகண்டம் என இடைவிடாது ஜபம் செய்வர்.

ஒருநாள் மனைவியாருக்கும் தனக்கும் வருத்தம் வந்துவிட்டது. திருநீலகண்டர் வேற்றுப் பெண்மீது ஆசைகொண்டார். அதனால் அவரது மனைவியார் மிகுந்த கோபங்கொண்டார். இதை அறிந்தார் திருநீலகண்டர். எப்படியாவது தன் மனைவியாரது வருத்தத்தைத் தீர்க்க வேண்டுமென்று எண்ணினார். மனைவியார் விரும்பியதை வாங்கித்தந்தார். அருகிற்சென்று பேசினார். அவர் பேசாதிருந்ததைக்கண்டு இன்னும் சற்று அருகிற்சென்றார். மனைவியாருக்குக் கோபம் அதிகமாயிற்று. 'திருநீலகண்டத்தின் மீது ஆணை எம்மைத் தொடாதீர்' என்றார். 'எம்மை' என்றதனால் பெண்கள் எவரையுமே தொடக்கூடாது என்று நினைத்துப் பெண்ணாசையை ஒழித்தார். அவரைத் தொடுவதுமில்லை. ஆனால் இருவரும் செய்துவந்த சிவத்தொண்டை மறக்கவில்லை. முன்னைவிடச் சிறப்பாகவே செய்துவந்தனர்.

இவர்களது சிறந்த வாழ்க்கையை இறைவன் உலகறியச் செய்ய எண்ணி ஓர் அந்தணர் வடிவங்கொண்டார், கையில் ஒரு திருவோடும் வைத்திருந்தார். தெருவோடுவந்து திருநீலகண்டர் வீட்டை அணுகினார். அவரும் அந்தணரை வரவேற்றார். அந்தணர் தாம் ஒரு அவசர காரியமாக வந்திருப்பதாகச்

271

சொன்னார். கையிலிருந்த திருவோட்டைக் கொடுத்து "இது இங்கே இருக்கட்டும். திரும்பி வரும்போது வாங்கிக் கொள்கிறேன். மிக உயர்ந்தது. காணாமற்போனால் கிடைப்பது அரிது. கவனமாகப் பார்த்துக்கொள். பத்திரமான இடத்தில் வை" என்று சொல்லிப்போய்விட்டார்.

சிலகாலம் கழிந்தது. திரும்பவும் ஓட்டை வாங்கிப்போக வந்தார். திருநீலகண்டர் உள்ளேபோய்ப் பார்த்தார். வைத்த இடத்தில் ஓடு காணப்படவில்லை. வீட்டினுள் எல்லாவிடத்திலும் தேடிப்பார்த்தார். இல்லை. என்னசெய்வார்! ஐயோ! குற்றத்துக்கு ஆளானேமே! என்று வருந்தினார். அதற்குப் பதிலாக வேறு ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தார். அந்தணர் 'அது கூடாது' என்னுடைய ஓடுதான் வேண்டும் அது மிகச்சிறந்த ஓடு. நீ அதை மறைத்து வைத்துவிட்டாய். பொய் சொல்லுகிறாய்" என்று கடுகடுத்துப் பேசினார். திருநீலகண்டர் விழித்தார். உண்மையை நிலை நாட்ட வழி தெரியவில்லை. அதற்குமேல் அந்தணர் ஊர்ச் சபைமுன் முறையிட்டார். தம் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கவேண்டும். இருவரும் "ஓடு காணாமற்போனது உண்மை" என்று சத்தியம் செய்யவேண்டும் என்றார். ஊராரும் அப்படியே முடிவு செய்தனர்.

திருநீலகண்டர் தம் மனைவியின் கையைத்தொடமாட்டார். ஆகையால் ஒரு கோலின் இருமுனையை இருவரும் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கி எழுந்தனர். அப்போது அந்தணர் காணப்பட வில்லை. நீலகண்டரும், அவர்மனைவியும் மீண்டும் இளமை பெற்றனர். அனைவரும் ஆச்சரியமுற்றனர். திருநீலகண்டரின் தொண்டும் அன்பும் உலகில் இன்றும் நின்று நிலவுகின்றன. வாழ்க சிவனடியார்கள்.

[தை மாதத்தில் முத்தி பெற்றவர்களுள் திருநீலகண்டரும் ஒருவர்.]

272



# தமிழ்ச் செய்யுட்களில் எழுத்திலக்கணம்

பன்மொழிப்புலவர்,

**வித்துவான், திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்**

ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப் பேராசிரியர், பல்கலைக்கழகம், சென்னை.

ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளின் உறுப்புக்களாகக் கூறியுள்ள இருபத்தாறனுள் முதலது மாத்திரை. மாத்திரைக்கு இலக்கணங் கூறியுள்ளாரேயன்றி, இன்ன பா இத்தனை மாத்திரையுடையது என்று செய்யுளியலில் ஓரிடத்துங் கூறிற்றிலர். ஆகலின், வடமொழியிலுள்ள மாத்ராவ்ருத்தத்தைப் போன்று ஒருவகைச் செய்யுள் தமிழிற் கொள்ளப்படவில்லை எனத் தெரிகின்றது. இனி, ஓரடியில் நான்கெழுத்து முதல் இருபஃதெழுத்துவரை எண்ணினாராயினும் நான்கெழுத்து முதல் ஆறெழுத்துவரை உடைய அடி குறளடி என்றும், ஏழெழுத்துமுதல் ஒன்பதெழுத்துவரை உடைய அடி சிந்தடி என்றும், பத்துமுதல் பதினான்கெழுத்துவரை உடைய அடி நேரடி என்றும், பதினைந்துமுதல் பதினேழுவரை உடைய அடி நெடிலடி என்றும், பதினெட்டுமுதல் இருபதுவரை உடைய அடி கழிநெடிலடி என்றும் இவ்வாறு ஐந்து அடிகளை வகுத்தாரேயன்றி, வடமொழியிற்போல எழுத்துக்களைக்கொண்டு பாக்களை வகுத்துப் பெயர் இட்டாரல்லர். இதனால், வடமொழியிற்போன்று அக்ஷர விருத்தத்தையும் ஆசிரியர் கூறிற்றிலராவார். ஆகலின், மாத்திரை என்னும் உறுப்புச் சிறப்புடையதாகக் கொள்ளப்படவில்லை என்பது போதரும்.

இனி இரண்டாமதாகக் கூறப்பட்டது எழுத்து. அஃதாவது செய்யுட்கண் எழுத்துக்கள் இயலும் வகையாகும். ஆசிரியர்,

'மாத்திரை யளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன என்மனார் புலவர்'

என்றது காண்க. 'எழுத்தியல்வகை'யினை மாட்டேற்றான் முப்பத்துமூன்று என்று கொள்ளாமல் பதினைந்து என்று கோடல் வேண்டும் என்பர் பேராசிரியர். பதினைந்தாவன — உயிரெழுத்து, குற்றெழுத்து, நெட்டெழுத்து, மெய்யெழுத்து, வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பன பத்தும், உயிர்மெய் உயிரளபெடை என்பன இரண்டும் அஇ, அஉ என்னும் ஐகார ஒளகாரப்போலி இரண்டும், யாழ்நூலகத்து இசைமிக்கொலிக்கும் மெய்யெழுத்து ஒன்றும் என்றார். இனி, மகரக் குறுக்கத்தைக் கூட்டிப் பதினாறு என்பாரும் உளர் என்று கூறி, அதன் பயன் பாட்டுடைத் தலைவன் கேட்டுக்குக் காரணமாம் என்றும் உரைத்தார். அவர் கூறிய பதினைந்து வகையினுள் இசை நூலில் மிக்கொலிக்கும் என்ற மெய்யெழுத்து இயற்றமிழ்ச் செய்யுளிலக்கணத்தில் வருதல் இல்லை. ஏனைய பதினான்கும் செய்யுளுறுப்புக்கள் பலவற்றையும் நோக்கின், கொள்ளப்படுதலை அறியலாகும். மகரக்குறுக்கம் சீர்கொள்ளும் முறையில் பயனாகின்றது. அதனை முன்னர் அறிதலாகும்.

உயிரெழுத்துக்களுள் குற்றெழுத்துக்களை வேண்டுமிடங்களில் நீட்டி ஒலித்தல் நேரும். இது மலையாள மொழியிற் பயிற்சியுடையது. அதனால்,

'குருவாக்கா மிச்சைபோலே பாடிநீட்டி லகுக்களை'

என்று, 'விருத்தமஞ்சரி'யில் இலக்கணங் கூறியுள்ளார். இனி, மெய்யெழுத்துக்களுள் இடையெழுத்துக்களையும் மெல்லெழுத்துக்களையும் நீக்கிவிட்டு அலகிடுமிடமும் உளது. குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வருமிடத்தில் கெடாதிருத்தலும் உண்டு. அஃது ஒரு மாத்திரை யளவி லொலித்தல் தொல்காப்பியத்தினால் அறியப்படுமாகலின், அது குற்றெழுத்துப்போல் அலகுபெறும். இனி, குற்றியலிகரம் ஒருமாத்திரையொலித்துக் குற்றெழுத்துப் போன்று அலகு பெறுதல் சிறந்த காப்பியங்களில் அறியலாகும். இஃது இலக்கண நூல்களிற் கூறப்படாததொன்று. நிற்க, ஐகாரம் மொழிகளில் ஒருமாத்திரை பெறுதல் உண்டு என்பது.

'ஓரளபாகு மிடனுமா ருண்டே
தேருங்காலை மொழிவயி னான'

என்பதனுல் அறியலாகும். ஐகார ஔகாரம் அய், அவ் என்று போலியாய் வருமிடத்து இரண்டுமாத்திரையாகக் கொள்ளப் படும். ஔகாரம் மொழியின் இடையிலும் கடையிலும் நிற்றல் இன்மையின் அஃது ஒரு மாத்திரையதாதல் இல்லை. இனி, உயிரளபெடை என்பது குறில் நெடில்களின் வேறுபட்டதோ ரெழுத்தன்ருகலானும், செய்யுளில் ஓசை நிறைத்தற்கு வருங் குற்றெழுத்தே அளபெடை எனப்படுதலானும் அது தனியே நின்று ஓரலகு பெறும். ஒற்றள பெடையில் அளபெழுந்த ஒற்றுத் தனியே நின்று ஓர் அலகு பெறும். மகரக்குறுக்கம் அலகிடாது விடப்படும் இடனும் உண்டு.

1. இனி இவற்றிற்கு முறையே உதாரணம் வருமாறு :- குற்றெழுத்து நெடில் போன்று ஒலித்தற்கு :

'முருகொத் தியே முன்னியது முடித்தலின்'

'முருகு விண்டுலா முல்லைக் கத்திகை
பருகி வண்டுலாம் பல்கு ழலினுள்' புற. 989

'பூமி யும்பொறை யாற்றருந் தன்மையர்ல்
வேமெ னெஞ்சமும் வேள்விமு ளரிபோல்' புற. 996

2. மெய்யெழுத்துக்களுள் இடையெழுத்தினைக் கொள் ளாது விடுதலில் யகரத்திற்கு :

'அரைசன தருளினெ டகன்மனை யவனெய்தி
உரைசெலல் வகையினெ டுலகமு மறிவுற
முரைசதி ரிமிழிசை முதுநக ரறைகென
விரைசெல லிளையரை வியவரின் விடவே.' சீவ. 601.

இச்செய்யுளின் முதலடியில், 'யவனெய்தி' என்பதில் யகரமெய் ஒலிக்காது விடத்தக்கது. இது கீழ்வருமடிகளான் விளங்கும். 'யவனெதி' என்றதுபோலக் கொள்ளப்படும். இன்னும்,

'ஆண்மர வாணிலத் தப்பு வேல்செய்முட்
காண்வரு காட்டினக் களிற்று நீள்வரை
நீணில வேந்தெனும் வேழப் பேரினம்
பூண்முலைப் பிடிக்கவாய்ப் போர்செய் குற்றவே.'

இதில், 'வேல் செய்முட்' என்பதை 'வேல் செமுட்' என்பது போலக் கொண்டு ஈரசைச் சீராக அமைக்கவேண்டும் என்பது கீழடிகளிலுள்ள சீர்களை நோக்கின் விளங்கும்.

**2. ரகாரத்திற்கு :**

'வளை நிற வார்செநெ லரிசிப் பண்டியோ
டளவறு சருக்கரைப் பண்டி யார்ந்தன
பிளவியல் பயறுநெய் பண்டி உப்புநீர்
விளைவமை பண்டியின் வெறுத்த தாங்கொர்பால்'

என்னுமிச்செய்யுளில் 'தாங்கொர்பால்' என்பதில் ரகாரத்தை விட்டு, 'தாங்கொபால்' என்பதுபோன்று கொண்டு ஈரசைச் சீராகக் கொள்ளல் வேண்டும். இவ்வாறே இச்செய்யுளின் முன்னர் அடுத்துள்ள மூன்று செய்யுட்களிலும் ரகாரத்தை விட்டுச் சீர்கோடல்வேண்டும். இன்னும்,

'மற்றிம் மா நகர் மாந்தர்கள்* யாவரும்
உற்று நாறியுங் கண்டுமு ணர்ந்திவை
பொற்ற சுண்ணமெ னப்புகழ்ந் தார்நம்பி
கற்ற தும்மவர் தங்களொ டேகொலோ!' 885

என்பதில், 'மாந்தர்கள்' என்பதனை 'மாந்தகள்' என்றுங்குக் கொள்ளவேண்டுதலைப் பின்னடிகளான் அறியலாகும்.

**3. லகாரத்திற்கு :**

'நுண்டுகி லகலங்கு ஞெசித்த வெம்முலை
யுண்டிவ ணுசுப்பென வுரைப்பி னல்லது
கண்டறி கிலாவிடைக் காம வல்லியாழ்
கொண்டவர் குழாத்திடைக் கொடியி னெல்கினள்'

ஈண்டு, 'லகலல்கு' என்பதில் லகரத்தை விட்டு 'லகலகு' என்பதுபோலக் கொள்ளுதல் வேண்டும். இனி, 'சொன்மருந்து தந் தாய் சொல்லு ஙின்மனத்' என்பதிலும் லகரம் விட்டுவிடல் வேண்டும். இனி,

**4. ளகாரத்திற்கு :**

'கையி னுற்சொலக் கண்களிற் கேட்டிடு
மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேன்
செய்த வம்புரி யாச்சிறி யார்கள் போல்
உய்ய லாவதொர் வாயிலுண் டாங்கொலோ!'

---

* 'மாந்தர்களி யாவரும்' என்று எழுதில் ஓசை மிகுதலின் அஃது அமையாது.

என்பதில், 'யார்கள்போல்' என்றிருத்தலை, 'யார்கபோல்' என்று கொண்டு ஈரசைச் சீராக்க வேண்டுமென்பது பிற அடிகளிலுள்ள சீர்களை நோக்கின் அறிதல் கூடும். இனி, மெல்லெழுத்துக்களுள் ண், ன், ம் இவை தம்மோடொத்த வல்லெழுத்துக்களோடன்றிப் பிறவெழுத்துக்களோடு கூடி யிருப்பின், அவற்றை நீக்கி அசைகோடல் அமையும்.

5. ணகாரத்திற்கு :

*'கண்கிழித் துமிழ்விடக் கனலரா வரசுகார்
விண்கிழித் தொளிருமின் னனையபன் மணிவெயில்
மண்கிழித் திடவெழுஞ் சுடர்கண்மண் மகளுடல்
புண்கிழித் திடவெழுங் குருதியே போலுமே.'

என்னுமிச் செய்யுளில், 'சுடர்கண்மண்' என்பதைச் 'சுடர் கமண்' என்பதுபோலக் கொண்டு 'கருவிளச்சீர்' ஆக்குதல் வேண்டும்.

6. னகாரத்திற்கு :

'கடிகமழ் பூஞ்சிகை காமர் மல்லிகை
வடிவுடை மாலைகா ருடர்ந்து வாய்ந்தது
நடுவொசிந் தொல்கிய நாறு மாமலர்க்
கொடியின்மேற் குயில்குனிந் திருந்த தொத்ததே.'

இச்செய்யுளில் 'கொடியின்மேற்' என்பதில் னகாரத்தை நீக்கி விட்டுப் படித்துச் சீர்கோடல் அமையும். இன்னும்,

'போரினும் பெண்டிரைப் பொருது சீறுவாள்
நேர்மலர்ப் பாவையை நோக்கி நெய்சொரி
கூரழல் போல்வதோர் புலவி கூர்ந்ததே
ஆர்வுறு கணவன்மாட் டமிர்தின் சாயற்கே'

இதில், 'கணவன்மாட்' என்பதில் 'ன்' நீக்கிவிடற்குரியது.

* கம்பர். தாடகை. 10.

7. மகரத்திற்கு :

‘சுண்ணந் தோற்றவும் தீம்புன லாடவும்
எண்ணில் கோடிபொ னீதும்வென் றூற்கென
வண்ண வார்குழ லேழையர் தம்முளே
கண்ணற் றூர்கமழ் சுண்ணத்தி னென்பவே.’

இதில், ‘ னீதும் வென் ’ என்பதில் மகரத்தை நீக்கி, அலகிடுதல் அமைதி. இம் மகரம் ‘வகார மிசையும் மகாரங் குறுகும்’ என்பதனுல் அளபு குறைந்ததாகும். ஆகலின் இதனைக் கொள்ளாதுவிடுதல் இயைபுடையதே.

இனி, குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வந்தவிடத்திற் கெடாதிருத்தலை நோக்குவோம்.

‘வையமூன்று முடனேத்த வளருந் திங்கள் வாளெயிற்று
ஐய வரிமான் மணியணைமே லமர்ந்தோய் நின்னை யமராதார்
வெய்ய வெந்நோய் வினையுதைப்ப வீழ்ந்து துன்பக் கடலழுந்தி
நெய்யு நுண்ணூ னுழிகையின் நிரம்பா நின்று சுழல்வாரே.’

இச்செய்யுளில் ‘வாளெயிற்று’ என்பதிலுள்ள குற்றியலுகரம் முன்னர் ‘ஐய’ என்று உயிர் முதன்மொழி வந்தவிடத்துத் தனியேநிற்றல் அறிக. ஓரடியின் ஈற்றில் நின்றதாகலின் உயிரேறப் பெறுமல் இவ்வாறு தனியே நின்று அலகுபெறுதல் அமைதியாகும். இனி,

‘தொழுதில் பன்மீன் குழாஞ்சூழத்
துளும்பா திருந்த திங்கள்போன்
முழுதும் வைய முடனேத்த
முதுவாய் வலவை யாயிருந்து
அழுது வினைக ளல்லாப்ப
அறைந்தோய் நின்சொல் அறைந்தார்கள்
பழுதி னறுநெய்க் கடற்சுடர்போற்
பல்லாண் டென்றும் பரியாரே’

என்னும் இச்செய்யுளில் ‘வலவை யாயிருந்து’ என்பதில் குற்றியலுகரம் உயிரேறப் பெறுதிருப்பதை அறிக. இச்செய்யுட்களைப் பதிப்பித்திருப்பதில் தவறுண்டு. (தொடரும்)

# ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்

'விசாகு'

## தருமபுர ஆதீன சமயப் பிரசாரம்

அவளிவணல்லூர் ஸ்ரீ சாட்சிநாத சுவாமி கோயிலில் 11—2—55 வெள்ளிக்கிழமை நடைபெற்ற கும்பாபிஷேகத்தை முன்னிட்டு முதல்நாள் 10—2—55 வியாழக்கிழமை அன்று தொடங்கி பன்னிரு திருமுறைச் சொற்பொழிவுகள் இரண்டு நாட்களும் நடைபெற்றன. சீகாழி கட்டளை விசாரணை, ஸ்ரீமத் மாணிக்கவாசகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தோடுடைய செவியன்' என்ற தலைப்பில் திருஞானசம்பந்தர் திருமுறையைப்பற்றியும், தருமை ஆதீனக் கீழைக் கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், 'நெஞ்சம் உமக்கே இடம்' என்ற தலைப்பில் திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறையையும், ஆதீனத் தேவாரப் பாடசாலைத் தேவார ஆசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்தி அவர்கள், 'அத்தா உனக்காள்' என்ற பொருளில் சுந்தரர் திருமுறை பற்றியும் ஆதீனக் கீழைக்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 'பாட்டின் பொருளுணர்ந்துசொல்' என்றதலைப்பில் திருவாசகத்தைப் பற்றியும் ஆதீனக் கல்லூரி மாணவர் திரு. ம, சிவசம்பு 'ஒன்று அவன்' என்ற தலைப்பில் திருமந்திரத்தையும், ஆதீன சமயத்தொண்டர் திரு. சிவஞானம் அவர்கள் 'மதிமலி புரிசைமாடக்கூடல் என்ற தலைப்பில் பதினொன்றாந் திருமுறைபற்றியும், மாயூரம் குமரக் கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் மகாலிங்க தம்பிரான் சுவாமிகள் 'உலகெலாம் மலர் அடி' என்ற தலைப்பில் பெரிய புராணத்தையும் விரித்துப் பேசினர்.

கும்பாபிஷேகத்தன்று இரவு மகாபிஷேகமும், சுவாமி அம்மனுக்கு முறையே பஞ்சமுகார்ச்சனையும் நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றன.

279

ஆதீன வெளியீடாகிய திருஅவளிவணல்லூர்த் தேவாரத் திருப்பதிகங்கள் சுவாமி சந்நிதியில் ஓதப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

## நான்காவது ஆண்டு மாணவர்களின் நன்றியறிதல் கூட்டம்

23—2—55 புதன்கிழமை அன்று மாலை 4-30 மணிக்கு, கல்லூரி நிறைநிலை வகுப்பு மாணவர்கள் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. நன்றிகாட்டிய மாணவர்க்கு ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானமவர்கள் அருளாசி வழங்கினார்கள். கல்லூரி நிறைநிலைவகுப்பு மாணவர் திரு. சு. தியாகராசன் இறைவாழ்த்துப் பாடியபின் திரு. சு. மு. சுந்தரராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாணவர்கட்கு நல் ஆசியுரை அருளினார்கள்.

" அன்புமிக்க மாணவர்களே! இன்று ஒரு நன்னாள். ஏன்? பொன்னாள் என்று கூடக் கூறலாம். முதலில் இங்கே பேசிய மாணவர் (வரவேற்புரை வழங்கியவர்) கூறியவற்றிலிருந்து இவ்விழா எதன்பொருட்டுக் கொண்டாடப்படுகின்றது என்பது எல்லோரும் அறிந்ததே! மாணவர்கட்கு நாம் நம்முடைய கடைமையைச் செய்கிறோம்! அதுபோலவே ஆதீனமும் அதன் கடமையைச் செய்யக் காத்திருக்கிறது. ஆகவே மாணவர்களாகிய உங்கள் கடமையை – அஃதாவது கடவுள் தன்மையையும் அதனோடு இரண்டறக் கலந்த சமய உண்மைகளையும் நீங்கள் நாட்டில் நிலவச்செய்யவேண்டும். இப்போதுள்ள சூழ்நிலை உங்கள் யாவருக்கும் தெரிந்ததே. நாட்டில் எங்கும் தெய்வநம்பிக்கையில்லை; அது காரணமாகச் செம்மையான வாழ்வில்லை. அனைவரும் அன்போடு ஆண்டவனை வழிபட்டு இன்பமாக வாழ்க்கை நடத்தவேண்டும். நாட்டிலே நீங்கள் பல அரிய விஷயங்களைப் படிக்கவேண்டும். படித்தபடி நடக்கவேண்டும். வடமொழியும் தமிழ்மொழியும் வகையாகப் பயிலவேண்டும். உங்களிடையே மொழித்துவேஷம் கூடாது. நம் தென்னாட்டவர் அனைவரும் துல்லியமான அறிவு வாய்க்கப் பட்டவர்கள். எதையும் ஆழ்ந்து சிந்திக்க நல்ல எண்ணம் சூழ்நிலை வேண்டும். சிறு எண்ணங்கள் குறுகிய மனப்பான்மை

கூடாது. நீங்கள் இதுவரை படிக்கக் கற்றுக்கொண்டீர்களே யொழியப் படிப்பைக் கற்றுக்கொண்டுவிட்டதாக எண்ணக் கூடாது. என்றுகுறள், இராமாயணம்முதலியவற்றிருந்து பல மேற்கோளுடன் ஆசியுரை அருளினார்கள்.

கல்லூரிப் பேராசிரியர்கள் அனைவரும் தனித்தனியே தங்கள் அறிவுரைகளை மாணவர்கட்குக் கூறியபின் மாணாக்கர் நன்றி நவின்றனர். இறை வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

## பல்கலைக் கல்லூரி மாணவர் கழகத்தில் சிறப்புக் கூட்டம்

24—2—55 வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகச் சார்பில் ஒரு சிறப்புக் கூட்டம் நிகழ்த்தப்பெற்றது. தென்னாப்பிரிகா பள்ளித் தலைவர் திரு. V. கோவிந்தசாமி அவர்கள் ஆப்பிரிகாவில் தமிழ் வளரும் வளர்ச்சிபற்றி பேசினார்கள். திரு. கோவிந்தசாமி அவர்களை வரவேற்று மாலைசூட்டிக் கல்லூரி மாற்றும்முதல்வர், திரு. கி. இராமலிங்க முதலியார் M. A., அவர்கள் பேசினார்கள். கழக மாணவர் சார்பில் தமிழ்ப்பகுதி வித்துவான் இடைநிலை வகுப்பு மாணவர் திரு. அரங்கசாமி, நிறைநிலைவகுப்பு மாணவர் திரு. கூ. சா. ஒ. துரைராசன் ஆகியோர் பேசினர்.

திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் தென்னாப்பிரிக் காவில் தமிழ் வளரும் வளமை, அந்நாட்டு மக்கள் இயல்பு, தமிழுக்கு அரசாங்கம் தரும் ஆக்கம், சரித்திரத்தில் இடம் பெற்ற இடங்கள் இவைகளை விவரித்தார். தில்லையாடி வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் நிலைபெற்ற வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற தமிழ்ப்பெண் என்றும் திருக்குறள் அந் நாட்டில் சிறப்பிடம்பெற்ற செந்தமிழ்நூல்என்றும் திருக்குறள் ஓதித் திருமணம் இன்றும் நடைபெறுகிறதென்றும் கூறினார்.

பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசகமுதலியாரவர்கள் திரு. கோவிந்தசாமி அவர்களைப் பாராட்டி நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது.

## கீழைக்கலை நடுநிலைப்பள்ளியில்

### வாகீசர் மாணவர் கழக ஆண்டு விழா

தருமபுரம் கீழைக்கலை நடுநிலைப்பள்ளி வாகீசர் மாணவர் கழகத்தின் ஆண்டு விழா 25—2—55 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடந்தது. அவ்வமயம் சென்னை அரசாங்கக் கீழைக் கலைக் கல்லூரிகளின் ஆய்வாளர் (Inspector of Oriental Schools and Colleges) திரு. பெ. திருஞானசம்பந்தம் M.A., L.T., அவர்கள் தலைமை தாங்கினார்கள். பள்ளித் தலைமையாசிரியர் அவர்களாலும், தமிழாசிரியரும், கழகத் துணைத்தலைவருமான வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களாலும், கல்லூரி மாற்றும்முதல்வர் திரு. கி. இராமலிங்க முதலியார் M.A., அவர்களாலும் வரவேற்பு கூறப்பட்டது. ஆண்டறிக்கைவாசித்தபின் மாணவர்களால் மாறுவேடநிகழ்ச்சி நடத்தப்பெற்றது. பேச்சுப்போட்டி, இசைப்போட்டிகளில் கலந்துகொண்டவர்களுக்குப்பரிசுகள்வழங்கப்பெற்றன. தலைவர் ஆண்டு நிறைவுநாள் சொற்பொழிவிலும் முடிவுரையிலும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மகிழ்ச்சிகூறி, 'அறிவு விளக்கம்' மிகத் தேவை. அறிவை விளக்குவது படிப்பு. அதற்குச் சிறந்ததோர் வாய்ப்பை அளித்திருக்கிறது தருமபுர ஆதீனக் கல்வி நிலையங்கள். அவைகளைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்! மக்கள் என்பவை முதலிய கருத்துக்களைக் கூறினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், தமக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்காக நன்றி செலுத்தினார்கள். பிறகு தமிழாசிரியர் வித்துவான், திரு. வி. சபேசன் அவர்கள் நன்றிகூற நாட்டுவாழ்த்துடன் விழா முடிவுற்றது.

## வேளூர்த் திருவிழாச் சொற்பொழிவுகள்

ஆதீனத்துக்குச் சொந்தமான புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோயிலில் ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிக்கு நடைபெற்ற தைத்திருவிழா நாட்களில் சொற்பொழிவுகளும் இசை நிகழ்ச்சிகளும் நாடோறும் மாலை 4-30 முதல் நடைபெற்று நிறைவுற்றன. 1—2—55 செவ்வாய்க் கிழமை, பெங்களூர், சென்ட்ரல் காலேஜ்; தமிழ்த்துறைத் தலைவர்; திரு. S. உருத்திரபதி M. A. அவர்கள் 'கந்தரலங்காரம்'

என்பது பற்றியும், திருச்சிராப்பள்ளி, பெருஞ்சொல் விளக்கனர்; திரு. அ. மு. சரவணமுதலியார் அவர்கள் 'நீலகண்டர் மனமும் ஆலமுண்டார் சினமும்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். திருச்சி, ஸ்ரீமதி. சுலோசன மகாதேவன் குழுவினரின் இசைநிகழ்ச்சி நடைபெற்றது.

2—2—55 புதன்கிழமை, திரு. S. உருத்திரபதி அவர்கள் 'திருப்புகழ்' என்பதுபற்றியும், சென்னைப் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சிப் புலவர் பண்டித. திரு. B. R. புருஷோத்தம நாயுடு அவர்கள் 'மாறன்விடு தூது'பற்றியும், சொற்பொழிவாற்றினர். திருவாரூர். திரு. T. V. நமசிவாயம் குழுவினரின் இன்னிசை நிகழ்வுற்றது.

3–2–55 வியாழக்கிழமை, தருமைக் கீழைக்கலைக் கல்லூரி மாற்றும் முதல்வர். திரு. கீ. இராமலிங்கம் அவர்கள் M. A. 'வேலும் மயிலும் துணை' என்பதுபற்றியும், சென்னை திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் 'பக்திச்சுவை' பற்றியும், சொற்பொழிவாற்றினர். தஞ்சை. திரு. P. V. கணேசன் & இராமையன் குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது.

4—2—55 வெள்ளிக்கிழமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சிப் பிரிவு, தமிழ் விரிவுரையாளர் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'பிள்ளைப் பெருமான் பெருவிளையாடல்' என்பது பற்றியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர். திரு. G. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் M. A. B. L.. செஞ்சொற்புனைமாலை' பற்றியும் தருமைக் கீழைக்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான். திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'வேளூர்த்திருமுறை' பற்றியும் சொற்பொழி வாற்றினர். திருவாலங்காடு திரு. வேம்பு ஐயர் குழுவினர், இன்னிசை நிகழ்த்தினர்.

5—2—55 சனிக்கிழமை தருமைக் கீழைக்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'முத்துக்குமாரசுவாமி திருவருட்பா'பற்றியும் சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'திருவகுப்புப்'

பற்றியும்; சொற்பொழிவாற்றினர். மாயூரம் திரு. இராஜம் அய்யர் அவர்கள் குழுவினர் இன்னிசை நிகழ்த்தினர்.

8—2—55 செவ்வாய்க்கிழமை தருமபுர ஆதீன வித்துவான் கீர்த்தன குலசேகர பாகவதர். எம்பார், திரு. விஜயராகவா சாரியார் அவர்கள் 'காரைக்காலம்மையார்' வரலாற்றை இன்னிசைச் சொற்பொழிவாக நிகழ்த்தினர்.

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் தொண்டு

### " பொற்றாமரையில் பொற்றாமரை "

திரு. ம. க. சுந்தரேசபட்டர் அவர்கள்

மதுரை.

மதுரை ஸ்ரீ அங்கயற்கண்ணி சமேத ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் கோயில் பொற்றாமரைக் குளத்தில் இதுவரை கண்டறியாத பெருங்கூட்டத்தின் முன்னே பொற்றாமரை மலர் ஒன்று 2—2—55 புதன்கிழமை அன்று மலர்ந்தது.

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை தனக்கு குரு நிந்தனையால் ஏற்பட்ட சாபம்தீர இந்திரன் வழிபட எண்ணினான். வழிபாட்டிற்கு வேண்டிய மலர் கிடைக்கப்பெறாது தேவர்கோன் அயர்வதைக்கண்ட எப்பிரான் அங்குள்ள தெய்வத்தடத்தில் பொற்றாமரை மலர்களை மலரச்செய்தார். இந்நிகழ்ச்சியின் காரணமாக அவ்வாவி பொற்றாமரைக்குளம் என்ற பெயரைப் பெற்றது.

அவ்வரலாற்றை மக்களுக்கு நினைப்பிக்கக்கூடிய வகையில் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எவருக்கும் தோன்றாத பொற்றாமரைமலர் ஒன்று செய்து மிதக்கவிடத் திருவுள்ளம்கொண்டார்கள். புராதனச் சின்னமாகவும், தெய்வீக வரலாற்றை நினைவுபடுத்தும் வகையிலும் உள்ள இம்மலரை 2–2–55 புதன்கிழமை மாலை 6 மணி அளவில் பொற்றாமரைக் குளத்தில் மதுரை மாவட்ட செஷன்சு நீதிபதி திரு. S. ரெங்கராசன் அவர்கள் மிதக்கவிட்டார்கள்.

2854



பொற்றாமரை மலருக்கு ஆகம விதிப்படி பஞ்சகலசஸ்தபன மும், சோடச உபசாரங்களும் நடைபெற்றது. வேதபாராயண மும், திருமுறைப் பாராயணமும் நடைபெற்றது. வந்திருந்தோர் களை 'தமிழ்நாடு' செய்தி ஆசிரியர் திரு. M. Sp. சண்முகம் M.A., அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். விழாவைத் துவக்கிவைத்து மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரராள் கோயில் தர்மகர்த்தாக் குழுத் தலைவர் திரு. K. M. S. லெட்சுமண அய்யர் அவர்கள் பேசினார்கள். தலைமை வகித்த கோயில் இறைபணியாளர் திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை B.A., L.T., அவர்கள் ஸ்ரீகாசிமடத்தின் சேவைகளையும், பொற்றாமரை வரலாற்றை யும் கூறினார்கள்.

பொற்றாமரையின் வரலாற்றைக் கூறி, திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நி தானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அனுப்பியிருந்த அருளாசியையும், மதுரை திருஞானசம்பந்தர் மடம் இளவரசு, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களிடமிருந்து வந்திருந்த ஆசியையும், இன்னும் பல ஆசிகளையும் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸி பால், திரு. K. M. வேங்கடராமையா M.A., B.O.L., அவர்கள் வாசித்தார்.

பின்னர் மதுரைக் கோயில் தர்மகர்த்தாக்குழு உறுப்பினர் திரு. M. V. நல்லமுத்துப்பிள்ளை, மதுரை நகரவைத் தலைவர் திரு. A. சிதம்பரமுதலியார் M.L.C., நிலத்திட்ட சமுதாய சீர்திருத்த அதிகாரி திரு. N. லெட்சுமணப்பெருமாள்நாயுடு B.A., முன்னைய மாநில உழவுத்துறை துணை இயக்குநர் திரு. S. தரும லிங்கமுதலியார், திருவாவடுதுறை ஆதீன வித்துவான், திரு. வீரசிவசுப்பிரமணியம் முதலியோர்கள் பொற்றாமரை வரலாற் றினையும், ஸ்ரீகாசிமடத்தின் பணிகளையும் பற்றிப் பேசினார்கள்.

விழாவினை ஏற்பாடு செய்திருந்த மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோயில் பிரதம ஸ்தானீகரும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து ஆசிருதருமான சிவஸ்ரீ ம. க. சுந்தரேசபட்டர் அவர்கள் எல்லோருக்கும் சிறப்பான முறையில் நன்றிகூறினார். வாழ்த்துடன் விழா இனிதே நிறைவேறியது.

285

## தருமை யாதீனம்
## ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை

'ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே.'

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் திகழும் எங்கள் கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் செய்வித்துவரும் அறப்பணிகளுக்கு அளவே இல்லை என்பது உலகறிந்த ஒன்று. இலட்சக் கணக்கில் வளர்ந்து விளங்கும் அறங்களும் திருவருளில் தோய்ந்த செம்மையைக் குறிப்பனவாய் இருப்பது எல்லாராலும் பாராட்டப்படும் உண்மை. அவர்களுக்குத் தோன்றும் அறங்கள் பிறர்க்குத் தோன்றுவதில்லை. மதுரைத் திருவாலவாயில் மிக்க புகழ்பெற்ற திருக்குளம் பொற்றாமரைத் தீர்த்தம் என்று பலரும் அறிந்திருந்தாலும், அதில் தாமரை மலர் ஒளிரவேண்டுமென்றும் அதற்குத்தக்க வழி தேடவேண்டும் என்றும் யாராவது நினைத்திருப்பரோ? காசிவாசி முனிவர்க்கு அது தோன்றிற்று. காரணம், தமது வழிபடு கடவுளிடத்தில் இடைவிடாது செய்யும் ஆராத காதல் ஒன்றே. அதனால் அவர்கள் திருவாலவாயில் செய்வித்துவருகின்ற அருட்பணிகள் மிகப் பல.

அவற்றுள் இது புதுமையும், அருமையும் தோற்றி பொற்றாமரைக் குளம் என்னும் பெயர்க்குப் பொருத்தத்தையும், உண்மையையும் நாட்டி நிற்கும். இது சாலச் சிறந்த அருளறம் ஆகும். இது தெய்வத்தாமரைத் தடம் என்றே திகழ்க.

அறங்களையெல்லாம் துணையாயிருந்து நோக்கி உதவுதல் குறித்து, ஸ்ரீகாசிமடத்தின் ஆசிருதம் சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் அவர்களை ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கர் சிறக்க வாழ்வித்தருள்வது மிக்க மகிழ்வு விளைக்கின்றது. அவர்கள் 2—2—55ல் பொற்றாமரை மலர் மிதக்கவிடும் விழா ஒன்று நிகழ்த்துவதும் அதில் பலர் பங்குகொள்வதும் நாட்டிற்கு நலம் விளைப்பனவாகும். ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானின் திருவருளால் ஸ்ரீகாசிமடத்தின் அறங்களும், அங்கு விளங்கும் முனிவர்களும் இனிது நீடு வாழ்க. சிவஸ்ரீ ம. க. சுந்தரேசபட்டர் அவர்கள் நீடூழி வாழ்க. வாழ்க உலகம். வளர்க சமயப்பற்று. ஓங்குக கடவுள் வழிபாடு.

# மதிப்புரை

## திருக்களிற்றுப்படியாரின் விளக்கக்கட்டுரை

திருவாவடுதுறை ஆதீனத்து ஜய ஆண்டு மார்கழித் திருவா திரையில் வெளியிடப்பெற்றமலர். பக்கங்கள் 360. நூலாசிரியர் திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார். உரையிட்டவர். ஷை ஆதீனத்துப் புலவர், வித்துவான். ஸ்ரீ. தே. ஆ. ஸ்ரீநிவாசாச் சாரியார்அவர்கள்.

இது மெய்கண்ட நூல்களின் தொகுதி பதினான்கனுள் இரண்டாவது. இதன் அருமைபெருமைகளை உபதேசவாயிலாகத் தான் அறியலாம். வாய்ச்சொற்கள் அவற்றைத் தெரிவிக்கும் வலியற்றவை. இவ்வொரு நூலே சைவசித்தாந்த உண்மையை உணர்த்தப் போதியதாகும். ஆண்டவனை 'அவ்வாறு இருந்தது அது' என்று விளக்கம் ஒன்றும் இன்றிச் சொல்லினாலும் ,ஓட் டற்று நின்ற உணர்வு பதிமுட்டித் தேட்டற்று நின்ற இடம் சிவமாம்' என்று தெளிவாக்கிவிட்டது. இப்பழைய சாத்திரத் திற்குப் புதிய விளக்கம் சித்தாந்தவுணர்ச்சிக்கு முதன்மை உடையோர் நாணுமாறு எழுதப்பட்டிருப்பது குறிக்கத்தக்கது.

திருமந்திரம் சிவயோகப்பகுதி முதலியன இவ்வயும் ஷை ஆதீனத்தின் இரண்டாவது திருமந்திர மகாநாட்டு மலர். ஆதீனவித்துவான் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பரிசோதனை முகவுரைகளையுடையன. பக்கம் 108 உள் பக்கம் 45. இல் ஒரு வினாக்குறி உளது. திருமந்திரம் 2960 ஆவது திருப் திருப்பாடலென்று அறிவதாலும் "ஆருடனே—எங்காளோ" (தாயுமானவர் அறிவுரை. 5) என்றதன் கருத்தாலும் அவ்வையம் அகலும்.

## திருவாசக வியாக்கியானம்

அடையாறு மகா மகோபாத்யாயர் டாக்டர் உ. வே. சா. நூல் நிலைய வெளியீடு. இஃது இரண்டாவது பகுதி. முதற் பகுதி முன்னமே வெளிவந்துள்ளது. தலைமைப் பதிப்பாளர்,

ஸ்ரீ. டி, சந்திரசேகரன், சென்னை மாநிலத்தின் அரசினர் கிழைக் கலைச்சுவடி நூலகத்துச் செம்மையர். இதன்பதிப்பாசிரியர் திரு. ரா. விசுவநாதையர் எம். ஏ. எல். டி., அவர்கள். இதன் பக்கங்கள் 555. விலை. 7—8—0.

இது திருச்சதகம் முதலாக அச்சோப்பத்து முடிய 652 பாடல்களின் பொருளைக்கொண்டது. இவ்வனுபூதிப் பொருளை யருளியவர்கள், சீகாழித் தாண்டவராயர். அவர் சைவசித்தாந்த ஞானசூரியர் காழிக் கண்ணுடைய வள்ளலார்க்கு, ஞான புத்திரர். இதுகாறும் வந்த திருவாசக உரைகளுள் இது சிறந்தது எனலாம். 'முத்து. சு. மா.'

## ஜப்பானில் சில நாட்கள்

திரு. சு. இராமசுவாமி நாயுடு அவர்கள்; முன்னுள் மேயர், சென்னை. வெளியிட்டோர் - வெள்ளையன் பதிப்புக்கழகத்தார், கண்டனூர், இராமநாதபுரம் மாவட்டம். பக்கங்கள் 81. விலை ரூ. 1—0—0.

தொழில்வளம் சிறந்த நாடு ஜப்பான். இளைஞர் முதல் முதியவர் வரை எல்லோரும் அங்கு உழைப்பவர்கள். தொழில் வளர்ச்சியில் உலகத்திற்கு ஜப்பான் ஒரு எடுத்துக்காட்டான நாடு. தொழில் வளத்தால் முன்னேறிய அந்நாடு எல்லா வகையிலும் வாழ்க்கை வசதிகளை நல்லமுறையில் அமைத்து விளங்குவதை ஆசிரியர் அழகுபெறக் காட்டுகிறுர். தமிழரது நாகரிகம் ஜப்பானிலும் பரவியிருந்ததை இந்நூலில் ஒருவாறு அறியலாம்.

ஷிண்டோ - பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற சமயங்களை ஜப்பானியர் பின்பற்றியுள்ளனர். சூரியன், தென் புலத்தார், மலைகள் முதலியவற்றை வழிபடுகிறுர்கள். ஜப்பானியர் சமயக்கொள்கைகளைத் தழுவியே முன்னேறுகிறது. ஜப்பானில் தொழில்வளரும் விதம்' அவர்களின் பழக்க வழக்கங்கள் முதலியவை நன்கு விளக்கப்படுகின்றன. 'விசாகு.

# கடிதங்கள்

Most Venerable Atman,

Salutations and prostrations. Om Namahsivaya.

It is with great joy and profound admiration that I have received the exquisite production THEVARA THIRUPPADIGANGAL which your Holiness has so kindly sent me.

It is a treasure which everyone in South India should possess. What wisdom and what devotion is contained in every verse of the divine boy-saint Tiru Jnanasambandar, How nicely you have presented his songs !

I humbly suggest that the book should be presented to the authorities of every one of the temples mentioned in it; and the people of the Kshetras should be inspired to sing the great verses in the Temples. Some one well versed in Saiva Siddhantam might expound the secrets hidden in these verses and thus arouse in the people of the villages the wisdom that Jnanasambandar has infused into the verses. Thus would many of the neglected temples come back to "life" May God bless your Holiness and the Adheenam;

Thy own Self,
SIVANANDA.

---

## மேலைநாட்டில் நம் சமயம்

தருமையாதீனத்தின் அன்பருள் ஒருவர் அமெரிக்கா முதலிய மேலைநாடுகளில் ஆதீனத்தின் ஆங்கில வெளியீடுகளின் வாயிலாகவும், தெய்வப்படங்களின் வாயிலாகவும், தேவார இசைத்தட்டுகள் மூலமாகவும் சமயம் பரப்பி வருகிறார். சொற்பொழிவுகளுக்கு முன் தேவார இசைத்தட்டுகள் ஒலிபரப்பப்படுகின்றன. முடிவில் வெளியீடுகள் வழங்கப்படுகின்றன. அமெரிக்கர்கள் நம் சமயத்திற்கும் மொழிக்கும் நல்ல மதிப்புவைத்துப் போற்றுகிறார்கள்.

*செய்தியாளர்.*

# Extracts from the Visitors' Books.

Sri Sattainathaswami Devasthanam,
Sirkali town and Taluk.

I visited the temple for Darsanam as a caual visitor. I have to congradulate the local management in the sprightly manner in which the temple is maintained. Even on an ordinary day the alangarm of the Goddess is simply Divine which makes the human mind adore the God in veneration.

S. Ramanarayanan,
Veternary Officer 15—12—54.

I visited the temple on the 17-th December, 1954 and was much impressed by the sanctity and perfect maintenance of the temple. The ways of the Lord are marvellous,

S. Balabubramaniam,
Parameswaran College, Jaffna.

Panchanathiswarar and Dharmasamuarthani temples are beautiful architectural masterpieces. They are a source of Devotion and blessed are they that offer worship in these holy shrines.

K. Hanumanthiya,
Chief Minister,
Mysore State 10—1—55.

Head of the Departmont of Indian
Music and President, Faculty of Fine Arts.,
University of Madras. 12—1—55.

I had the privilege of visiting the great shrine of pranatartihara along with a party or music teacher and music students. It is an inspiration and a spiritual exaltation to visit the great shrine. The temple is well kept and the managing staff are well informed of the details relating to the history of the temple.

P. Sambamoorthy. B. A., B. L.,

உலகமெலாம் வாழ்விக்கத் தோன்றி அன்னை
உயர்ஞானத் திருமுலைப்பால் அமுதுவாக்கிப்
பலகலையும் சிவஞானத் தெளிவும் ஈசன்
பதம்பெறுநற் பாப்புனையும் திறனும் ஓங்கிக்
குலவவுண்ணும் திருஞான சம்பந் தன்தன்
குணநலத்தைச் சிந்திக்க வைத்த கோயில்
நிலவுமுமா பாகரொடு சட்டை நாதர்
நீங்காத திருக்கோயில் கண்டேன் இன்றே.

பன்னிரண்டு திருநாம முடைய தாகிப்
பாரனைத்தும் நீர்மூழ்கும் காலைத் தோணி
என்னமிதந்திட அதன்பால் உமையோ டையன்
எழுந்தருளுந் தோணிபுரப் பெயரோ டோங்கி
மன்னுகின்ற திருத்தலத்தைத் தருமை மேவும்
மாண்பாரும் ஆதீனக் குரவர் மிக்குத்
துன்னுகின்ற அன்போடு புரக்கின்றார்கள்
துப்புரவே எவ்விடத்தும் மலிந்த தம்மா.

அங்கங்கே உளமூர்த்தி உருவ மேனி
அழகாகப் பொலிகின்ற காட்சி கண்டேன்
கொங்கெங்கும் வீசுநந்த வனத்தின் பான்மை
கூர்ந்துணர்ந்து குதுகலித்தே உவகை யார்ந்தேன்
மங்கலஞ்சால் சிவபெருமான் திருத்தாட் பக்தி
வளரும் வணம் பலதொண்டு ஓங்கி இங்கே
தங்கிவளர் தரல் கண்டேன் கொண்டேன் இன்பம்
சார்கின்ற தொண்டர்குழாம் வாழ்க, வாழ்க.

கி. வா. ஜகந்நாதன்,
*18—12—54*

Accompanied the Dy. D. P. I. Madras.

J. A. Ryan,
D. E. O.
29—1—55 Tanjore East.

## ORIENTAL COLLEGE, DHARMAPURAM.

I had the Privilege of going round the Oriental College to-day. The Institution aims to preserve and propagate the Hindu culture customs and manners and Hindu religion. More especially the Saivaism. The Adhinam has heavily spent for the Collage. More Propaganda about the existence of the College and the facilites available here for sttudy both

general education and religious study including the Courses in A gamas and Priest hood should be made. It is hoped that in the near future many students will flock here and be benefited by the education given here. May god bless the efforts of the management and help them to realise their aspiration early.

(Sd.) P. K. Renganayakalu.
Deputy Director of Public Distriction.
29—1—55 Madras.

Had the pleasure of going round the College while normal work was in progress.

(Sd.) J. A. Ryan.
District Educational Officer.
29—1—55 Tanjore (East)

Visited

(Sd.) K. Mohanarengam,
District Educatlonal Officer,
Tanjore west.

## ORIENTAL MIDDLE SCHOOL DHARMAPURAM.

Visited by the Deputy Director of public Instruction.

I was taken round the Oriental Middle School Dharmapuram today. Out of 42+4 pupils on the rolls, 32+2 were present. There are one B. A., L. T., two Secy. Grade teachers and one Tamil Vidwan on the staff of the School which has three sections one each in forms I, II and III. The notable feature is there are 14+1 Harijan pupils in the School. A library for the Middle School is being formed with a new class of 49 books at present. The furniture seems to be adequate for the presentt strength. The class rooms are airy, well lit and in ideal settings I wish the School all success.

P. K. Ranganayakalfl,
Dy. D. P. S,
29—1—55 Madras.

Accompained the Dy. D. P. S. Madras.

J. A. Ryan
Tanjore East
D. E. O. 29—1—55.

## VELUR SRI VAITHINATHASWAMI DEVASTHANAM,

### Vaithiswarankoil, Sirkali Taluk- Tanjore District.

I am a frequent visitor to this temple, as the presiding Deity here is my family Deity. This time, my stay at Vaithiswarankoil has been for over 10 days as I have had to celebrate my daughter's marriage here in fulfilment of my prartana, and this period has coincided with the Muthukumaraswami Utsavam. It is remarkable how the temple premises are kept clean in spite of large numbers of pilgrims visiting for worship day and night. The Dharmapuram Adhinam which is managing this temple is entitled to all the credit for this and for the magnificient way in which the Utsavam is being conducted with an inspiring, daily all the twenty four hours, programme of processions, religious lecturest he singing of devotional hymns and music concerts. The Adhinam is setting a fine example in the mater and I hope the authorities managing other temples will follow it, even if they cannot hope to improve upon it. It is the best way of countering the foolish and superficial attacks on religion and those who believe in worship in the traditional Hindu manner in temples. It is gratifying to see all this proof of the Adhinams faith in the mission entrusted to it and the practical steps taken to utilise its resources for the good cause. The lighting at the various sannadhis and the carrying out of the claborate and ambitious daily programme during this festival period have been most impressive and inspiring. The great hold that this place has on me has grown after my present visit.

Sd. S. Venkateswaran, I. C. S.,
(on leave) 7—2—55.

# வருங்காலம்

ஜோதிஷார்ணவம்

பிர்மஸ்ரீ முத்துசோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(ஜய-ஞூ பங்குனிமீ 1-உ முதல் 31-உ முடிய)

(14—3—55 முதல் 13—4—55 முடிய)

**1. மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நான்கு பாதங்களும் சுபம் தரும். சுபகாரியங்கள் நடைபெறும், கிரஹ பூமிலாபங்கள் ஏற்படும், பரணி முதல் பாதம் மாதம் முற்பாதியில் நன்மையாகவும் பிற்பாதியில் கஷ்டமாகவும் இருக்கும். பரணி 2, 3, 4 பாதங்கள் பூர்வபுண்ணிய விசேஷத்தால் ஓடிக்கொண்டிருக்கும். மிகவும் அசுபபலனே அதிகமாகும். கார்த்திகை முதல்பாதம் சில எதிர்பாராத நன்மைகளையும் சந்தோஷத்தையும் லாபத்தையும் தரும். புதன் வெள்ளி சுபவாரமாகும்.

**2. விருஷபம்** கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம்.

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். சுபம் அசுபம் சமமாகும், லாபநஷ்டம் சமமாகும் ரோஹிணி, 1, 2. 3 பாதங்கள் லாபத்தையும் தொழில் மேன்மையையும் கீர்த்தியையும் சங்மித்திராளுடைய சேர்க்கையையும் தரும். மிருகசீரிஷம் முதல்பாதம் அதிக கஷ்டநஷ்டங்களை உண்டுபண்ணும். ரோஹிணி நாலாம்பாதமும் அதிக துக்கத்தையும் நஷ்டத்தையும் தரும். மிருகசீரிஷம் இரண்டாம் பாதம் சமபலனாகும்: ரோகத்தைத்தரும். விரயம் அதிகமாகும். இடம்மாறும். விரோதம் உண்டுபண்ணும், வியாழன் அசுபமாகவும் சனி ஞாயிறு சுபமாகவும் இருக்கும்.

**3. மிதுனம்:** மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் கலகத்தையும் விவகாரத்தையும் மனக்கவலையையும் கொடுக்கும். திருவாதிரை 1, 2

பாதங்கள் சுபமாகவும் லாபகரமாகவும் சந்தோஷமாகவும். நடக்கும். திருவாதிரை 3, 4 பாதங்கள் பீதியைக்கொடுக்கும். விரயம் அதிகமாகும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் வெளியில் செல்ல முடியாதபடி அவமானங்களையும் நஷ்டத்தையும் குடும்ப கஷ்டத்தையும் பெரியோர் சாபத்தையும் தேவகோபத்தையும் உண்டுபண்ணும். நினைத்தபடி ஒன்றும் நடவாது. மிகுந்த பயத்தை பலவிதத்திலும் உண்டுபண்ணும். சனி செவ்வாய் நலன் தரும்,

4. **கடகம்:** புனர்பூசம் ½ பூசம், ஆயில்யம்,

புனர்பூசம் நாலாம்பாதம் சென்ற மாதம்போலவே இருக்கும். ஆனால் மேலோர் அதிருப்தியைத்தரும். மனம் பந்தத்தில் அகப் பட்டுக்கொண்டு தவிக்கும். பூசம் 1, 2, 3, 4 பாதங்களும் இடம் மாறச்செய்யும். எல்லோரும் அவமதிப்பார்கள். சதா துர்சஹ வாசமும் துர்ப்பழக்கமும் அதிகமாகும். ஆயில்யம் 1, 2 பாதங் களைப் பேய்பிடித்தாட்டும் மதி மயக்கமாகும். 3. 4 பாதங்கள் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளச் செய்யும். இருள் நீங்கி னதுபோல் இருக்கும். பூர்வீகமான தெய்வபலம் காப்பாற்றும். புதன் வியாழன் சுபமாகும்.

5. **சிம்மம்:** மகம், பூரம், உத்திரம் ¼.

மகம் பூரா நான்கு பாதங்களும் சந்தோஷத்தைத் தரும். வித்யாவிருத்தி, ஜீவனவிருத்தி. தனவிருத்தி, தொழில்விருத்தி முதலிய சுபங்கள் ஏற்படும். பூரம் நான்கு பாதங்களும் அதிக விரயத்தையும் அலைச்சலையும் மனஸ்தாபங்களையும் உண்டு பண்ணும். உத்திரம் முதல்பாதம் முற்பாதி தினங்கள் லாபகரமாயும் பிற்பாதி கஷ்டபலனையும் வியாதி பீடைகளையும் தரும். திங்கள் செவ்வாய் சுபவாரமாகும்.

6. **கன்னி:** உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் 2. 3. 4 பாதங்கள் சுப சந்தோஷத்தையும் எதிர் பாராதபடி லாபங்களையும் உத்தியோகத்தில் ஏற்றத்தையும். நன்மதிப்பையும் தரும். ஹஸ்தம் நான்குபாதங்களும் மகோந்நத திசையைதந்து அதன் பலனை அடையவிடாமல் பக்கத்திலேயே

துக்கபலனையும் காட்டும் விசேஷ சுகபோகங்களும் செல்வாக்கும் கீர்த்தியும் ஏற்பட்டுத் துக்கபலனை மாற்றும், சித்திரை 1, 2 பாதங்கள் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும். இல்லறசுகம் ஏற்படும். சத்துருக்கள் சரணடைவார்கள். புதனும் வியாழனும் சுபமாகும்.

## 7, துலாம்: சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சுவாதி நான்கு பாதங்களும் இம்மாதம் பூரண சுபத்தையும் லாபத்தையும் தரும். பிரதிகூலங்கள் எல்லாம் அனுகூலமாகும். குடும்பசுகம் ஓங்கும் மற்ற இருநக்ஷத்திரபலனும் சித்திரை 3, 4, பாதங்களும் விசாகம் 1, 2, 3 பாதங்களும் துக்கத்தையே அனுபவிக்கநேரும். வியாபாரியாகில்நஷ்டம்.தொழிலாளிக்குத்தொழில் கிட்டினாலும் கூலிகிட்டாது. விவசாயிக்கு குடும்ப கஷ்டங்கள் ஓங்கும். பிரபுக்களுக்கு சர்வஸ்வக்ஷய சூசகம் காட்டும், கடவுள் கிருபையைத்தவிர வேறு ஒன்றும் பயனளிக்காது. திங்கள் செவ்வாய் புதன் சுபவாரமாகும்.

## 8. விருச்சிகம்: விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் நாலாம் பாதம் மாத்திரம் சுபமிராது. மற்ற இரண்டு நக்ஷத்திர பாதங்கள் எட்டும் விசேஷ சுகத்தையும் சுப சோபனுதிகளையும் தனதான்ய லாபங்களையும் பந்துமித்திராளுடைய சேர்க்கையையும் நன்மதிப்பையும் உண்டுபண்ணும். சனி வியாழன் சுபமாகும்

## 9. தனுசு: மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் நான்கு பாதங்களும் லாபகரத்தோடும் சந்தோஷத்தோடும் வஸ்திராபரண சேர்க்கையோடும் மனம் சாந்தியோடும் நடக்கும். பூராடம் நான்கு பாதங்களும் மகத்தான சஞ்சலத்தையும் எதிலும் தாமதகுணங்களையும் உண்டுபண்ணும் உத்திராடம் முதல்பாதம் ஆரோக்கியத்தைத்தந்து இல்லற சுப சந்தோஷத்தைக் கொடுக்கும். வியாபாரிகள் அதிக லாபம் அடையாமல் தொழில் நடத்துவார்கள். உத்தியோகஸ்தர்கள் லாபமடைவார்கள். மற்றவர்கள் சமபலனை அடைந்துகொண்டு சந்தோஷமாய் இருப்பார்கள். சனி ஞாயிறு சுபமாகும்.

**10. மகரம்:** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$

அவிட்டம் 1 2 பாதம் மாத்திரம் சுபமிராது. வியாதியையும் கலகத்தையும் உண்டுபண்ணும். மற்ற உத்திராடம் 2, 3. 4 பாதங்களும் திருவோணம் நான்கு பாதங்களும் சுப சந்தோஷங்களையும் உத்தியோகத்தில் பிரமோஷனையும் நன் மதிப்பையும் பெரியோர் அன்பையும் கொடுக்கும். வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

**11. கும்பம்:** அவிட்டம் $\frac{1}{2}$ சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

அவிட்டம் பின்னரை 3, 4 பாதங்கள் ரோகத்தைக் கொடுக்கும். சதயம் நான்கு பாதங்களும் வீண் அலைச்சலைக் கொடுத்து நஷ்டத்தை உண்டுபண்ணும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் பந்தத்திலிருந்து விடுதலைசெய்து குடும்பத்தை நல்ல ஸ்திதியில் வைக்கும். இல்லறசுகம் பூர்ணமாகும். ஆடை ஆபரணங்களும் காலிகன்றுகளும் விருத்தியடையும். சனி ஞாயிறு சுபமாகும்.

**12. மீனம்:** பூரட்டாதி $\frac{1}{4}$. உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி நாலாம் பாதம் சென்ற மாதம்போலவே நடக்கும். அதிக லாபமிராது. மனமும் சாந்தியடையாது. உத்திரட்டாதி நான்கு பாதங்களும் தெய்வபலத்தைத்தந்து பிரகாசப்படுத்தும், எல்லா காரியங்களும் வெற்றியடையும். ரேவதி முதல்பாதம் மிகுந்த கஷ்ட பலனைத்தந்து பின்பு சுகம் தரும். 2, 3, 4 பாதங்கள் சந்தோஷத்தை கொடுக்கும். உத்தியோக லாபம் ஏற்படும். இடம் மாறும். குடும்பம் ஓங்கும் வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

---

குறிப்பு:- புஞ்சை தான்யங்கள் விலை குறையும். ஏழை மக்கள் சந்தோஷமடைவார்கள். ஆனாலும் உலகில் அமைதி குறையும். சகல ஆஸ்திகர்களும் அவரவர்கள் ஆசாரப்படி கடவுளை வணங்க உலகம் அமைதியடைந்து பிரஜைகள் கவலையற்று இருப்பார்கள்.

2 9 7


## 3 தலம்

கடவுள் உயிர்களுக்கு அருள் செய்யும் வழிகள் பல. அவற்றுள் தலமாகவும், தீர்த்தமாகவும், மூர்த்தியாகவும் இருந்து மும்மலங்களையும் ஒழித்து உய்வித்தருள்வதும் ஒன்று. சிவாகம விதிப்படி அமைந்த தலங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் சிறந்தவை அறுபத்தெட்டு. அவ்வறுபத்தெட்டனுள் புலியூர் (தில்லைச்சிற்றம்பலம்) முதலிய சிலவே சாலச்சிறந்தவை. அவற்றுள்ளும் தீரா நோய் (பிறவி) தீர்த்தருளும் சிறப்பு வைத்தீசுவரன்கோயில் என்னும் இத்தலத்திற்கே உரியது. "மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்" என்று திருநாவுக்கரசு நாயனுர் அருளியதாலும் இவ்வுண்மை புலப்படும். தீரா நோய் பிறவி. பிறந்து இறப்பதற்கு இடையில் தோன்றி வேறு எவ்வகையாலும் தீராத பலபல நோய்களையும் குறித்தார் என்றும் கூறலாம். வினை தீர்த்த கடவுள் விளங்கும் வேளூராதலின், எல்லா வினைகளும் எல்லா நோய்களும் தீர்வதில் ஐயம் யாது? தீரா நோயை, வைத்தியநாதன், தையல்நாயகி, முத்துக்குமாரன் என்னும் நாம மந்திரங்களை மறவாது செபம் புரிந்தும், முழுதும் தீர்த்தொழிக்கலாம். தந்திரம் – செயல்கள், சத்கர்மம், இத்தலத்தில், முடி கொடுத்தல், சித்தாமிர்தத்தில் நீராடல், புரண்டு வலம் வரல், வழிபடுதல் முதலிய தந்திரங்களைச் செய்தும், அந்நோய் தீரப் பெறலாம். மண்ணுருண்டையும் திருநீறுமாகிய மருந்துகளைச் சேர்த்து உட்கொண்டும், அத்தீராநோய் தீர்ந்தொழியப்பெற்று இன்புறலாம். மந்திரம் தந்திரம் மருந்து என்று உள்ள அம்மூன்றாலும் உயிர்க்கும் உடற்கும் உறும் பிணிகளை ஒழிக்கும் சிறந்த தலம் வைத்தியநாதம் ஒன்றேயாகும்.

தலத்தில் வாழ்ந்து, தவத்தைச் செய்து, வினைகள் ஒழியப் பெற்று வீடுற்று, அழியாத பேரின்ப வாழ்வு அடைதல் எல்லாவுயிர்க்கும் உரிய கடனாகும். ஆயினும், மக்களுயிர்க்கே அது சாலச் சிறந்து விளங்குவது. மக்களும் மனம், வாக்கு, காயம் மூன்றாலும் தவம் புரிதல் வேண்டும். அற(தரும)ங்களையும் கொடை(தானங்)களையும் எண்ணுதல், இரக்கம், பொறுமை, உண்மை, சிவத்யாநம், ஐம்பொறியடக்கல் முதலிய பல தவங்கள்

மானதமாகச் செய்யப்படுவன. திருவைந்தெழுத்தோதுதல், பஞ்சமந்திரம், சடங்கமந்திரம், சிருத்திரம் முதலியவற்றைச் செபித்தல், தோத்திரஞ் செய்தல், அறவுரைகளை எடுத்துரைத்தல் முதலிய பல தவங்கள் வாசிகம் ஆவன. சிவார்ச்சனை, திருக்கோயில் வலம், வழிபாடு, தலவாசம், தீர்த்தயாத்திரை, திருப்பணி செய்தல் முதலிய பல காயிகம் ஆவன. உள்ளத்தால், உரையால், உடலால் இவ்வாறு செய்யும் தவங்களுள் உடலால் செய்வனவே சிறந்தவை. உடம்பின் வழியாயும் உரையின் வழியாயும் உள்ளத்திற்குச் சென்றவை உறுதியாய் நிலைக்கும். நின்று பயன் மிகச் செய்யும். அநுபவம் என்ற ஞானத்திற்கு உரியனவும் அவையே ஆகும். ஆதலின், தலவாசம் முதலியவை இல்லாத மாக்கள் மீண்டும் மீண்டும் பிறந்திறந்து உழலும் அல்லலுக்கே ஆளாவார்கள். ஏனோ "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"?


"தருமமே கருதித் தானம் தவம்பல புரிந்தா ரேனும்
திருவளர் திருக்குற் றாலச் சிவபிரான் சந்நி தானம்
துருவினர் பணிவார்க் கன்றித் தொலைந்திடல் அரிது பாவம்
பருதிசந் நிதியில் அன்றிப் பஞ்சினைச் சுடுமோ காந்தம்?"



திருக்குற்ருலச் சிவபிரானே வேறு எல்லாச் சிவ தலத்தும் இருப்பவன். தரிசனம் பொது. அவற்றுள் சிறப்புடையதலம் யாது? அதன் சிறப்பு என்ன? இவ்வாறு ஆராயுங்கால் சிறந்த தலங்கள் கருதப்பெறும். அவற்றுள், வைத்தியநாதம் கருத்துக்குமுன் நிற்கும். மக்கள் எல்லாரும் நோயுடையவர்களே. நோய்க்கு மருந்து முக்கியம். மருந்து தீராநோயும் தீர்க்கவல்லதாயும், வைத்தியன் வைத்தியர்க்கெல்லாம் நாதனுகியும் இருப்பதால், கருத்தின்முன் வைத்தியநாதம் வந்து நிற்பதில் என்ன தடை? வைத்தியநாதத்தைத் தொலைவில் இருந்து தரிசனம் செய்பவர்க்கு அது சிவலோகம் என்றே தோன்றும். மேற்கு வாயில் வழியாக நுழையும்போது சிவலோகத்தை அடைந்து விட்டதாக ஒரு சிவ பாவம் விளையும். சண்முகவிலாசத்தைப் பெற்றதும் ஜீவ பாவம் இருந்த இடமே தெரியாது.

## 4 மூர்த்தி

ஸ்ரீ வைத்தியநாதர் சந்நிதியை எய்தியதும், முன் நமக்கு இருந்த நோய் எங்கே? நாம் எங்கே? நான் என்ற அகங்காரம் எங்கே? எல்லாம்போய்ப் போன இடத்தில் புல்லும் முளைத்துப்




போயிருக்கும். கொடித்தூணைத் தலைநிமிர்த்துத் தரிசித்து முடி காணுமையால், தலையைத்தாழ்த்தி, உடலைத் தரையில் வீழ்த்தி அங்கத்தை மண்ணுக்கு ஆக்கினுல், ஆர்வம் சித்தாமிர்தத்தில் அழுந்தி எழுந்து கற்பகத்தைக்கண்டு, வைத்தியநாதனைச் சார்ந்து, தையல்நாயகியின் தாளிணையிலமர்ந்து, முத்துக்குமார சுவாமியின் திருமுகத்தை நோக்கி விரைந்து ஓடும், அதற்கு முன், அப்பெருமான் வீற்றிருந்து அபிடேக முதலியவற்றை ஏற்றருளும் திருமண்டபம் எதிரே காட்சியளிக்கும்.

வைத்திய நாதம் மேற்கு நோக்கிய சந்நிதி, தையல்நாயகி அம்மையார் தெற்கே சித்தாமிர்த தீர்த்தத்தை நோக்குவதால் அதில் ஆடுவோர் பாவங்களைத்தீர்த்து ஆட்கொள்ளும் நிலையில் விளங்குகின்ருர். அவரது திருவருணேக்கம் பெற்றவாறே திகழ்வது சித்தாமிர்தம். அம்மையாராகிய திருவருளாலே அப்பனுர் வைத்தியநாதர் அடியவர்க்குத் தீராநோய் தீர்த்தருளி வருகின்ருர். சத்தியின்றிச் சிவமில்லை. சிவம் இன்றிச் சத்தி இல்லை,

"அருளது சத்தி யாகும் அரன்றனக்கு, அருளை இன்றித்
தெருள்சிவம் இல்லை. அந்தச் சிவம் இன்றிச் சத்தி இல்லை.
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க்கு அளிப்பன் கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்"

என்பது பவமெலாம் அகற்றும் சிவஞானசித்தியார். "சகலமும் நின்திருச் சொருபம் என்று ஒலிக்கும் சதுர்மறைப் பொருள் வெளியிடக் கண்ணுறு குழலியர் ... ... வாணியும் காளிந்தியும் கங்கையாம் விண்ணுறும் அளவளாய் விளையாடு புது வைகை வெள்ள நீராடியருள்" என்று ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அருளியதும் இங்குக் கருதத்தக்கது. அவரே, முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழில், "கும்பாதி காரியம்" எனத்தொடங் கும் திருவிருத்தத்துள், "அனைத்தும் தன்மயம் எனும் சுருதி கரியாவைத்தும் ... தீராதவினை தீர்த்த தம்பிரான் திருமேனியில் செம்பாதியும்கொண்ட தையல்நாயகி" என்றும் குறித்தரு ளினுர். அத்தகைய முதன்மையுடைய தையல்நாயகியின் திரு வருட் சந்நிதியில்நின்று, கிழக்கே தலமும் மேற்கே வைத்தியநாத மூர்த்தியும், தெற்கே தீர்த்தமும் ஒருசேரத் தரிசிக்கும் வாய்ப்பு



அடியார்க்குளது. கீழைத் திருவாயிலினுட் பக்கத்தில் தல விருட்சம் (வேம்பு) தோன்றும். ஆங்கு ஆதி வைத்தியநாதத்தை வழி படலாம்.

வேம்படி
ஆதிவைத்தியநாதம்

திருக்கோயிலுள்ளே அம்மை தையல்நாயகிக்கும், அப்பன் வைத்தியநாதனுக்கும் இடையே முத்துக்குமாரமூர்த்தி, அப்ப ணிருக்கும் இடத்தில், வலப்பால் கிழக்கு நோக்கியவண்ணம் வீற்றிருந்தருள்கின்றார். அம்முத்தையனார் வேளூர்க்கு வந்த டைந்தவரோ தோன்றுதொட்டு இருந்தருள்பவரோ? திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் அருளிய திருப்பாடல்களில் 'வேளூர்' என்றதில் உள்ள 'வேள்' ஒன்றேகொண்டு அம் முத்தையனையே குறித்ததாகக் கொள்ளத் துணிவில்லை. திருக் கோயிலுள் வடமேற்கில்கிழக்குநோக்கி வீற்றிருந்தருளும் குமர குருபர சுவாமியைக் குறித்தது என்று கொள்ள இடனுண்டு. அந்த ஆறுமுகப் பெருமானாரை 'வேள்' என்று குறித்தாகக் கொண்டு, அவர் வழிபட்டதால் 'வேளூர்' என்பதே பொருத்தம். வழிபட்டவர்க்கெல்லாம் ஒவ்வோரிடம் உண்டு. அங்கங்கு அவ ரவர் திருவுருவம் விளங்குகின்றன. முத்துக்குமாரசுவாமிக்கும் அக் குமரகுருபரசுவாமி திருக்கோயிலையே இடமாகக் கூறின், திருப்பெயர் வேறுபாடு இசையாது. அதனால் அம்மூர்த்தி அடியவர்க்கு அழியாத செல்வத்தை அருளச் செல்வத்தால் வந்தவராதல் வேண்டும். அதற்கேற்ப அவரைச் செல்வ முத்துக் குமார சுவாமி என்று உலகம் வழங்குகின்றது.

302

வேலூரை வழிபட்டவருள்



ஸ்ரீ அங்காரகபகவான் (செவ்வாய்)

இக்காலத்தில், அம்மை அப்பர்க்கு இருக்கும் சிறப்பினும் மிகுதியாகச் செல்வ முத்துக்குமார சுவாமிக்கே உண்டு. கிருத் திகைதோறும் பகலில் மகாபிடேகமும் இரவில் உற்சவமும் அவர்க்கு நிகழ்கின்றன. அன்பர் பல்லாயிரவர் வந்து வழிபட்டு, சந்தனக் குழம்பு பெறக் குழுமிக் குழம்புவர். அக்காட்சி அனை வரையும் பரவசப்படுத்தும் அற்புதமுடையது. ஒவ்வொருநாளி லும் நள்ளிரவில் முதலில் அவர்க்கே வழிபாடு நிகழும். பாலை நிவேதிப்பர். நேத்திரப்பிடிச்சந்தனம்சமர்ப்பிப்பர். அப்பொழுது அன்பர்க்குக் கிடைக்கும் திருநீறு 'பரா(சக்தி) வ(ண்)ணம்' ஆதலை இன்றும் காணலாம். அடுத்து மற்றைய மூர்த்திகளுக்கு வழிபாடு நடைபெறும். பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா எழுந் தருளுப்நாளில், வைத்தியநாதர் வலப்பாலும் தையல்நாயகியார் இடப்பாலும் அவ்விருவர்க்கும் நடுவே செல்வ முத்துக்குமார சுவாமியும் ஆக அருளும் திருவருட்பொலிவு என்றும் கிடைக்கும் இம்மைச்செல்வம். அதனாலும் அவர் செல்வம் விளங்குகின்றது. தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அம்முத்தையன் திருமுன் உபசாரம்செய்து இன்புற்றும் - இன்புறுத்தியும் பரவும் காட்சிக்கு ஒப்பானதும் இல்லை, உயர்வானதும் இல்லை.

இத்தலத்தில் அர்ச்சனைசெய்து வழிபட்டவர்கள்:- அங்கா ரகன் (செவ்வாய்), குமரகுருபரசுவாமி, சந்திரன், சூரியன், சடாயு, தேவர். வேதம் முதலிய பலர். அவ்வரலாறுகளைப் புராணத்தில் அருச்சனைசெய்சருக்கம் பலவற்றாலும் அறியலாம். அங்காரகனுக்கு இங்கு விசேடபூசை உண்டு. இங்கு வந்து வழிபட்டவர்க்கு அங்காரகதோடம் சங்காரம் அடையும். செவ் வாய்க்கிழமை தோறும் ஆட்டு வாகனத்தில் அங்காரகபகவான் திருக்கோயிலுள் வலம்வந்து, வைத்தியநாதரின் அருள்வலியை அடைந்து, வழிபடுவோர் பிணிவலியைத் தீர்க்கின்றான்.


## 5 தீர்த்தம்

இங்குள்ள தீர்த்தங்கள் பத்தொன்பது என்று புராணம் உணர்த்துகின்றது. அவற்றுள் 'சித்தாமிர்தம்' ஒன்றே இக் காலத்திலும் சிறந்து விளங்குகின்றது. தீர்த்தம் என்று புகழ்

பெற்றவை பல, முற்காலத்தில் பெற்றிருந்த சிறப்புக்களை இக் காலத்தில் தோற்றாமல் இருக்கின்றன. தோற்றினால் உலகில் ஆத்திகம் இவ்வளவு குறைந்திராது. சித்தாமிர்தத் தீர்த்தமோ ஆத்திகத்தை வளர்த்து வருவதொடு நாத்திகத்தைத் தலை யெடுக்க வொட்டாமல்செய்து, தன்பால் அழுத்தி, அதை நரகில் வீழ்த்துகின்றது, மூழ்குவோர் பாவத்தை வேருகவும் புண்ணி யத்தை வேருகவும் பிரிக்கும் வலிமை சித்தாமிர்த தீர்த்தத் திற்குப் பூரணமாயுளது. கிளியும் மைனுவும் பாலொடுகலந்த நீரை வேறுபிரிக்கமாட்டா. அவைபோல்வன பிறதீர்த்தங்கள். வேலூர்ச் சித்தாமிர்தமோ அன்னப்பறவை போல்வது.

"பாவமொடு புண்ணியத்தின் வகைபிரிக்க மாட்டாவாம்
பலவாம் தீர்த்தம்
பூவையும்கிள் ளையும்பாலின் புனல்பிரிக்க மாட்டாமை
போல மேலாம்
தூவிஅனம் பிரிப்பதுபோல் சுகிர்தம்எனும் பால்பிரித்துத்
துலங்கக் காட்டித்
தீவினையைக் கழுநீராப் பிரித்தெறியும்" திப்பியமாம்
சித்தா மிர்தம்.

இந்தத் தீர்த்தம் ஒவ்வொரு யுகத்திலும் வெவ்வேறு பெய ருடன் விளங்கியுள்ளது. அவை கோட்சீர தீர்த்தம், இட்சுசார தீர்த்தம், சடாயுதீர்த்தம், சித்தாமிர்தம் என்பன. (கோ - பசு. க்ஷீரம் - பால். இக்ஷு - கரும்பு.)



தருமபுர ஆதீன வெளியீடு :

# திருஞானசம்பந்தர் தேவாரம்

## முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளவர்கள் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் எழுதிய குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக் குறிப்புக்களும் இதில் அமைந்துள்ளன. அற்புதச் செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ், பக்கங்கள் 768.

**விலை விவரம் :-**

| | | |
|---|---|---|
| **ராப்பர் பைண்டு:** | .... ரூ. | 3—8—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | ... | 1—5—0 |
| **காலிகோ பைண்டு:** | ... | 5—0—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | ... | 1—8—0 |

**கிடைக்குமிடம் :-**

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம்.
   பொருளாளர் :-
2. ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,
   வைத்தீசுவரன்கோயில்.
3. ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.
4. ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.
5. ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.
6. ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம்,
   திருப்பனந்தாள்.
7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலையம்,
   41, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

தருமபுர ஆதீன வெளியீடு: 317

# திருஞானசம்பந்தர் தேவாரம்

## இரண்டாவது திருமுறை

திருவாவடுதுறை ஆதீனம் இருபத்தொன்றுவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளிய பாராட்டுரை கொண்டது.

ஆதீனப்புலவர், சித்தாந்த ரத்நாகரம், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புரையும். இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக் குறிப்புக்களும் அமைந்துள்ளன. அற்புதச் செயல்களைக்காட்டும் படங்களும், கோயிற்படங்களும், பிறவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ். பக்கங்கள் 834.

விலை விவரம் :-

| | | |
|---|---|---|
| முழு காலிகோ கட்டிடம்: | ... | ரூ. 5—0—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | ... | 1—8—0 |

கிடைக்குமிடம் :-

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம்.
   பொருளாளர் :-
2. வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோயில்.
3. ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.
4. ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.
5. ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.
6. ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள்.
7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலையம், 41, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை—17.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—3—1955.